REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2023 நவம்பர் 17 வெள்ளிக்கிழமை

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 273 | Friday 17, November, 2023 | 24 பக்கங்கள் | 50/-

## ஜனாதிபதி ரணில் மாலைதீவு விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை மாலைதீவுக்குப் பயணமானார்.

மாலைதீவுக் குடியரசின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் கலாநிதி மொஹமட் முய்ஸுவின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை மாலைதீவுக்குப் பயணமானதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்தது.

**தோட்ட தொழிலாளர் சம்பள உயர்வு விடயம்**

## இ.தொ.கா உயர்மட்டக் குழு திங்கள் கொழும்பில் சந்திப்பு



தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில், எதிர்வரும் திங்கட்கிழமை, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உயர்மட்ட குழு சந்தித்து ஆராயவுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் நேற்று கொழும்பு சௌமியபவானில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு, தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி வருமானத்தின் அடிப்படையிலும், வாழ்க்கை செலவுப் புள்ளியின் அடிப்படையிலும் வழங்கப்பட வேண்டுமென்பதில் இலங்கை தொழிலாளர் 06

**நாட்டிலுள்ள பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் வகையில்**

## புதிய பல்கலைக்கழகங்களில் முதலீடு செய்ய புலம்பெயர்ந்தோருக்கு ஜனாதிபதி அழைப்பு



சிங்கள, தமிழ் புலம்பெயர்ந்த மக்களுக்கு நாட்டைப் பற்றிய அக்கறை இருப்பின் உடனடியாக வந்து நாட்டின் பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய பல்கலைக்கழகங்களில் முதலீடு செய்வதைக் கருத்தில் கொள்ளுமாறு தமிழ், சிங்கள புலம்பெயர்ந்தோருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

### "அனைவருக்கும் ஆங்கிலம்" 2030க்குள் பாடசாலைகளிலும் செயல்படுத்தப்படும்

சிங்களம் மற்றும் தமிழுக்கு அப்பால் மொழி அறிவை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற 06

## 100 அத்தியாவசிய மருந்துகளுக்கு விரைவில் கட்டுப்பாட்டு விலை

**சுகாதார அமைச்சர் Dr. ரமேஷ் பத்திரன பாராளுமன்றில் தெரிவிப்பு**



**நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய் சம்பந்தமான 100 மருந்துகளுக்கு ஏற்கனவே விலைக்கட்டுப்பாடு விதிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

100 அத்தியாவசிய மருந்துகளுக்கு மேலும் விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில், விலை தொடர்பான அதிகார சபைக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நேற்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளை, ஜயந்த சமரவீர எம்.பி எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜயந்த சமரவீர எம்பி தமது கேள்வியின் போது,

அமெரிக்க டொலரின் அதிகரிப்போடு நாட்டில் அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் மூன்று மடங்கிலிருந்து ஆறு மடங்கு வரை அதிகரித்து காணப்படுகின்றன . சில மருந்துகளின் விலை 600 ரூபாவால் அதிகரித்துள்ளது. அந்த வகையில் மருந்துகளின் விலை அதிகரிப்பையாவது கட்டுப்படுத்த முடியாதா? அதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சர் மேற்கொள்ள முடியாதா? என அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன,

தற்போதும் நாட்டில் விலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ள நூறு மருந்து வகைகள் காணப்படுகின்றன. சந்தையில் காணப்படும் நீரழிவுக்கு எதிரான, உயர் இரத்த அழுத்தத்துக்கு எதிரான மற்றும் இதயம் சம்பந்தமான மருந்துகள் உள்ளிட்ட 50 வகை மருந்தும் அதற்குள் உள்ளடங்குகின்றன. அவை அனைத்தும் பிரதான மருந்து வகைகள் பட்டியலைச் சேர்ந்தவை.

இவைகளுக்கு விலைக் கட்டுப்பாடு மேற்கொண்டுள்ளதுடன் அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்வது அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகார சபையே. அதற்கே விலைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய அதிகாரம் உள்ளது. 06

## பெருந்தோட்ட மக்களுக்காக "அதி சக்தி" சத்தூட்டப்பட்ட கோதுமை மா அறிமுகம்





**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

உலக சுகாதார ஸ்தாபனம், சுகாதார அமைச்சு மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் சுகாதார பிரிவின் ஆய்வு அறிக்கையின்படி, 06

## இவ்வார வர்த்தமானியில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக்கொள்வது தொடர்பான விபரங்கள் இவ்வார ஞாயிற்றுக்கிழமை 19 ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பான வர்த்தமானி அறிவித்தலில் இடம்பெறும். மேலும் அரச நிர்வாக, 06

## உள்ளூராட்சி சபை ஊழியர்கள் 13,000 பேருக்கு நிரந்தர நியமனம்

**திறைசேரியுடன் நடந்த பேச்சில் கொள்கையளவில் தீர்மானம்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபை நிறுவனங்களில் பணிபுரியும் நிரந்தரமற்ற சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் 06

## வரவு - செலவு திட்டத்துக்கு SLPP நிச்சயம் ஆதரவு வழங்கும்

**அரசாங்கத்திலுள்ள கட்சியின் பொறுப்பு இது**



வரவு செலவுத் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு ஆதரவளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சி என்பதால் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் 06

**வெல்லம்பிட்டி பாடசாலை விவகாரம்**

## விசாரணை நடத்துமாறு கல்வி அமைச்சர் பணிப்பு

**திங்கள் வரை பாடசாலைக்கு பூட்டு**



வெல்லம்பிட்டி பாடசாலையில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்பாடசாலையில், நீர்க்குழாய் பொருத்தப்பட்டிருந்த மதிற் சுவர் இடிந்து விழுந்ததில் 06

## டுபாயிலிருந்து வந்தவரிடமிருந்து ரூ.11 கோடி தங்க மாத்திரைகள்

**விமான நிலையத்தில் சுங்கத்தினரிடம் சிக்கினார்**



கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை (16) மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 11 கோடி ரூபா பெறுமதியான 16 தங்க ஜெல் மாத்திரைகளை கொண்டு வந்த ஒருவர், சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். 06

## உள்ளூர் கலைஞர்களை மலினப்படுத்தும் தென்னிந்திய கலைஞர்களின் இறக்குமதி

**TNA எம்.பி சிவஞானம் சிறீதரன் குற்றச்சாட்டு**



தென்னிந்தியக் கலைஞர்களை முன்னிலைப்படுத்தும் இறக்குமதிக் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் முனைப்புப் பெற்றுள்ளமை, இம்மண்ணின் கலைஞர்கள், இளைய தலைமுறைத் திறமையாளர்களை மலினப்படுத்துவதாக உள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். யாழ்.கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கலைத்துவப் பாரம்பரியமும் 06

**வர்த்தக நிலையங்களில் விதித்த அபராதம்**

## நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு கிடைத்த ரூ.22 கோடி



நாடளாவிய ரீதியில் இவ்வருடம் பல வர்த்தக நிலையங்கள் மற்றும் பொருள் கொள்வனவு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 22 கோடி ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பதுக்கல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், விலைகளை காட்சிப்படுத்தாமை போன்ற 06

**கதிர்காமம் உள்ளிட்ட அனைத்து**

## மத வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம்

**விரைவில் ஏற்பாடு என்கிறார் அமைச்சர் விதுர**



கதிர்காமம் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் வழங்க திட்டமிட்டுள்ளதாக புத்தசாசன மத கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் 06

## கூந்தல் அலங்கார மின் கருவியால் பெண் பலி



கூந்தல் அலங்கார மின்சாரக் கருவியால் கூந்தலை அலங்கரித்துக் கொண்டிருந்த பெண்ணொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் பொல்கஸ்ஓவிட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண், பொல்கஸ்ஓவிட்ட பிரதேசத்தை சேர்ந்த காஞ்சனா சுபாசினி என்ற 30 வயதுடைய 06

## 15 வருடங்களுக்கு மேலாக 13 அரசியல் கைதிகள் சிறையில்

**கருணை அடிப்படையில் விடுவிக்க சார்ள்ஸ் MP கோரிக்கை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியல் கைதிகளாக 15 வருடங்களுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் 13 பேரையும் கருணை அடிப்படையில் விடுதலை செய்வதற்கு அரசாங்கமும் ஜனாதிபதியும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி சார்ள்ஸ் நிர்மலநாதன் 06



**தரகரிடம் ரூ.60 இலட்சம் கொடுத்து**

## சட்டவிரோதமாக கனடா செல்ல முயன்றவர் கைது

03

## கிரிக்கெட் வழக்கின் மனு மீதான விசாரணை 20 இல்

**இதுவரை 03 நீதிபதிகள் விலகினர்**

இலங்கை கிரிக்கெட்டின் இடைக்கால கட்டுப்பாட்டு குழுவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிக்க, புதிய நீதிபதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. 06

## கனடாவிலிருந்து வந்த கொள்கலனில் 6 கிலோ குஷ்

**ரூ.60 மில். பெறுமதி; ஒருவர் கைது**



கனடாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனிலிருந்து சுமார் 06 கிலோ எடையுள்ள குஷ் ரக போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்க வருமான கண்காணிப்பு குழுவினர் கடந்த மாதம் 25 இல், கொள்கலனை சந்தேகத்தின் பேரில் பறிமுதல் செய்தனர். 06

# நகர்வலம்



உத்தேச பாராளுமன்ற தர நிர்ணய சட்டமூலம் ஊடாக

## எம்.பிக்களாக பதவிவகிக்க தகுதியற்றோரை நீக்க முடியும்

### சபையில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு



உத்தேச பாராளுமன்ற தர நிர்ணய சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டவுடன் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதியற்றவர்களை நீக்க முடியுமென, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சமன் பிரிய ஹேரத் தமக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பினார். இதையடுத்து சபையில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்ததாலேயே, அமைச்சர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

"நாங்கள் விரைவில் தரநிலை சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம், ஆனால், அதற்கு முன்னர் பிரதமர் தினேஷ் குணவர்தன இது குறித்து கட்சி தலைவர்களுடன் பேசுவார். இந்த சட்டமூலம் குறித்து கட்சித் தலைவர்களுடன் பிரதமர் பேசி, அதில் தேவையான திருத்தங்களைச் செய்வார்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், சோல்பரி பிரபு காலத்திலிருந்த சட்டமும், எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் சபையிலிருந்து வெளியேற்றுவதற்கான அதன் விதிகளும் இன்னும் நடைமுறையில் இருப்பதாக நீதிமன்றங்கள் அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரிபாய் கந்தூரி கொடியேற்றத்துடன் ஆரம்பம்

ருஸைக் பாரூக்



சுல்தானுல் ஆரிபீன் செய்யதினா அஹ்மதுல் கபீருர் ரிபாயி அவர்களின் 146வது ஆண்டு ரிபாயிக் கந்தூரி சங்கைக்குரிய ரிபாய் மௌலானா செய்யத் முஹம்மத் ஆசிக் தங்கல் அவர்களது தலைமையில் கொழும்பு 12, முஹியத்தீன் பள்ளிவாசலில் (12) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கலீபத்துல் ரிபாயி மௌலவி ஏ.சி.ஏ. அஹமத் பளீல் மற்றும் ரிபாயிய்யா மகளிர் கல்லூரி அதிபர் மௌலவி அப்துல்லா ரவ்லி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இவ்நிகழ்வில் அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி அதிபர் கலீபத்துஷ் ஷாதுலி அஹமத் சூபி (மஹ்லரி) அவர்கள் துஆ பிரார்த்தனை செய்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அஹ்சன் மரிக்கார், மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலி, கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், உம்மு சவாயா பள்ளிவாசல் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம், பலஸ்தீனத்தின் முன்னாள் தூதுவர் பௌஸான் அன்வர் மற்றும் ரிபாய் தரீக் சங்க உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## கொடகே தேசிய சாகித்திய விழா – 2023



25வது வெள்ளி விழா, தேசிய கொடகே தேசிய சாகித்திய விழா 2023 கடந்த 15ஆம் திகதி கொழும்பு 7 இல் அமைந்துள்ள தேசிய நூலக சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் திருமதி நந்தா கொடகே தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த சிங்கள, தமிழ், ஆங்கில நூல்களுக்கு இதன்போது விருதுகள் வழங்கப்பட்டன. தமிழுக்கான விருதுகளாக 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலுக்கான விருது ஏ.எஸ் உபைதுல்லாவின் 'வேராகிப் போன மனிதர்கள்' எனும் நாவலுக்கும், சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருது மண்டூர் அசோகாவின் 'எழுதப்படாத கவிதைகள்' சிறுகதைத் தொகுப்புக்கும், சிறந்த கவிதைத் தொகுப்புக்கான விருது சிவனு மனோஹரனின் 'மலைகளின் பாடல்' எனும் கவிதைத் தொகுப்புக்கும்,. சிறந்த முதல் நூலுக்கான விருது 'ஜெயவதியின் அணங்கே ; அகிலம் வெல் எனும் கவிதைத் தொகுப்புக்கும், சிறந்த மொழிபெயர்ப்பு தொகுப்புக்கான விருது இப்னு அசூமத்தின் நீ கூறுகிறாய் இறந்து விட்டாயாம் நீ எனும் தொகுப்புக்கும், 2022 ஆண்டுக்குக் கொடகே ஆக்க இலக்கியப் போட்டியில் சிறந்த கவிதைத் தொகுப்பாகத் தெரிவு செய்யப்பட்ட தினுஷா மகாலிங்கத்தின் சொற்களற்ற இடைவெளி எனும் கவிதைத் தொகுப்புக்கும், சிறந்த சிறுகதைத் தொகுப்பாகத் தெரிவு செய்யப்பட்ட ஜே. வஹாப்தீனின் அவனுக்கும் சிறகுகள் உண்டு எனும் சிறுகதைத் தொகுப்புக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. இவ் விருதுகளை இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் வழங்கி வைத்தார். விருதுகளுக்கான அறிவிப்புகளை மும்மொழியிலும் ஹேமமாலி ஹேமசந்திர பதிரன, மேமன்கவி ஆகியோர் முன் வைத்தார்கள்.

## செய்கு நாயகத்தின் 27ஆவது வருட கத்தமுல் குர்ஆன்



ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய ஷெய்கு ஸஜ்ஜாதா மர்ஹூம் கலாநிதி அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸி பின் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி, அஷ்ஷாதுலி (ரஹ்) அவர்களின் 27வருட ஞாபகார்த்த மஜ்லிஸ் நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை (18) சீனன் கோட்டை, பளீல் ஹாஜியார் மாவத்தையிலுள்ள நூராணிய்யா ஸாவியா மஸ்ஜிதில் நடைபெறுவுள்ளது. பள்ளிவாசல் கதீப் மௌலவி ஆஸாத் (அஜ்வதி) தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அஸர் தொழுகையைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி மஃரிப் தொழுகையின் பின் வலீபா யாகூத்தியா, மௌலூத் மஜ்லிஸ், ஹழரா மஜ்லிஸ்கள் நடைபெறும். இஷாத் தொழுகையின் பின் முஸாக்கரா நடைபெறவுள்ளது.

இம்முஸாக்கராவை கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யத் அலவி மௌலானா (முர்ஸி) நிகழ்த்துவார். இம்மஜ்லிஸில் சீனன் கோட்டை பள்ளிச்சங்க தலைவர் உட்பட உறுப்பினர்கள், சாதுலியா இஹ்வான்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு சார்பாக ஹஸன் ஜெமீல் தெரிவித்தார்.

## முஸ்லிம் சமய கலாசார பணிப்பாளருடன் சந்திப்பு



பஹன மீடியா நிறுவனத்தின் தலைவர் செய்யத் சாலிம் மௌலானா மற்றும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைசல் ஆப்தீன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று (15) முஸ்லிம் கலாசார திணைக்களத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது சமயத்தலைவர்களுக்கு ஊடகத்துறை தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வுகள் மற்றும் மஸ்ஜிதுகளை சமூக முன்னேற்றத்துக்கான மத்திய நிலையங்களாக செயற்படுத்துவதற்கு அதன் நிர்வாகிகளை பயிற்றுவிப்பது மற்றும் அறிவூட்டல் தொடர்பான விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

இந்நிகழ்வின் போது பஹன மீடியா நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் முஜிப் சாலிஹ், முன்னாள் அரசாங்கத் தகவல் திணைக்கள பணிப்பாளரும் பஹன அகடமியின் பணிப்பாளருமான ஹில்மி முஹம்மட் மற்றும் முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களான எம்.எஸ்.ஏ அலா அஹமட், என்.மிலௌபர் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

## ஒவ்வொரு வீட்டிலும் கல்விமான்களை உருவாக்குவதே "சயீடாவின்" நோக்கம்

### இணைப்பாளர் நௌஸர் பௌஸி தெரிவிப்பு

(அஜ்வாத் பாஸி)



ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு கல்விமானையாவது உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் எமது "சயீடா" நிறுவனம் தூரநோக்குடன் செயற்பட்டு வருவதாக நிறுவனத்தின் இலங்கை இணைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸி தெரிவித்தார்.

சயீடா அமைப்பின் எதிர்காலத் திட்டம் தொடர்பில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்; 'பணம் இருந்தால் போதும், வாழலாம் என்றொரு காலம் இருந்தது. ஆனால் அந்த நிலை இன்று இல்லை. இன்று கல்வியால் மாத்திரம் வாழலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. அந்த வகையில் தான் எமது நாட்டிலும் சிறந்த கல்விமான்களை உருவாக்க வேண்டும் என்ற தூரநோக்கில் எமது அமைப்பு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இதில் எந்தவித அரசியல் பின்னணியும் கிடையாது.

சிலர் அரசியலுக்காக பாடசாலைகளை பயன்படுத்துகிறார்கள். ஆனால் நான் கல்விக்காக, கல்வி முன்னேற்றத்திற்காக, அதன் அபிவிருத்திக்காக பாடசாலைகளை பயன்படுத்துகிறேன். பாடசாலைகளை வைத்து நான் அரசியல் செய்யவில்லை. எத்தனையோ அரசியல்வாதிகள் தமது பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்திக்காக உதவுமாறு என்னிடம் மகஜர்களை கையளித்திருக்கிறார்கள். நானும் என்னால் முடிந்த உதவிகளை அவர்களுக்கு செய்து வருகிறேன். ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பாகுபாடு என்னிடம் கிடையாது. அனைவரினதும் தேவைகளையும் நிவர்த்தி செய்வதே எனது நோக்கம். எமது தேவை கல்விச்சமூகமொன்றை இந்நாட்டில் உருவாக்குவதாகும்.

எமது சயீடா நிறுவனத்தின் நிதியுதவியில் பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்படுகின்ற வைபவங்களில் கூட அரசியல் சம்பந்தமாக எதுவும் இடம்பெறக்கூடாதென ஏற்பாட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறேன். நான் அரசியல் செய்வதென்றால் கொழும்பு மாவட்டத்திற்கு மாத்திரம் எமது சேவையை மட்டுப்படுத்தியிருக்க முடியும். என்னிடம் கேள்வி கேட்க எவரும் வரமாட்டார்கள்.

அதனால் தான் நாடளாவிய ரீதியில் எமது சேவைகளை முன்னெடுத்து வருகிறேன்.

எமது நாட்டின் கல்வி மறுமலர்ச்சிக்காக பலர் உதவி செய்துள்ளார்கள். அவர்களில் ஒருவனாக நானும் இருக்க வேண்டும் என்பதே எனது சேவையின் எதிர்பார்ப்பாகும். எமது சேவையில் எவ்வித அரசியல் சுயலாபமோ, இன, மத, பேதமோ இன்றி எமது 'சயீடா' அமைப்பின் ஊடாக நாடளாவிய ரீதியில் சேவைகளை மேற்கொள்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.



கற்பிட்டி, பள்ளிவாசல்துறை அல்கரம் முஸ்லிம் ஆரம்ப பாடசாலை மாணவ, மாணவிகள் தமது ஆசிரியர்கள் சகிதம் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு நேற்று (16) லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் கூட்டாக எடுத்துக்கொண்ட படம். (படங்கள்: துஷ்மந்த மாயாதுன்ன)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 நவம்பர் 17 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 11.57
அஸர் - 03.19
மஃரிப் - 05.50
இஷா - 07.03

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் கார்த்திகை 01
ராகுகாலம் : பகல் : 10.36 - 12.08 வரை
சுபநேரம் : காலை : 6.08 - 7.38 வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# புதிய தாதியர்களுக்கு இன்று நியமனக் கடிதங்கள் கையளிப்பு



நோயாளர் பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்தும் வகையில் 2,519 புதிய தாதியர்களுக்கு நியமனக் கடிதங்கள் இன்று (17) வழங்கப்படவுள்ளன.பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில்,இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.2020 ஆம் ஆண்டு பயிற்சியை ஆரம்பித்து பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்த 2,519 மாணவர்கள், தாதியர்களாக நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தற்போது நாடளாவிய ரீதியில் 42,000 க்கும் அதிகமான தாதியர்கள் பணிபுரிகின்றனர்.குறித்த ஆட்சேர்ப்பின் மூலம் நாட்டில் தாதியர்களின் எண்ணிக்கை 45,000 ஆக அதிகரிக்கவுள்ளது.

## முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் லேக் ஹவுஸுக்கு கண்காணிப்பு விஜயம்



முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர். கிஹான் பிலப்பிட்டிய நேற்று (16) லேக் ஹவுஸ் நிறுவனத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். நீதியரசர் கிஹான் பிலபிட்டிய, நிறுவனத்தின் தலைவர் ஹரேந்திர காரியவசம் மற்றும் பணிப்பாளர் சபையினரையும் சந்தித்தார். இதன்போது நிறுவனத்தின் வர்த்தக அச்சுப் பிரிவை அவர் பார்வையிட்டபோது பிடிக்கப்பட்ட படம். நிறுவனத்தின் தலைவரும் படத்தில் காணப்படுகிறார்.

### தரகரிடம் ரூ.60 இலட்சம் கொடுத்து

# சட்டவிரோதமாக கனடா செல்ல முயன்றவர் கைது

### மட்டக்களப்பை சேர்ந்தவரென தகவல்

சட்டவிரோதமான முறையில் கனடாவுக்கு செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லை அமுலாக்கப் பிரிவின் அதிகாரிகளால் விமான நிலையத்தில் நேற்று (16) காலை கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பு பிரதேசத்தை சேர்ந்த 37 வயது நபரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுக் காலை 08.15 மணியளவில் டுபாய் செல்வதற்காக எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் விமானத்துக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இவர் பயண அனுமதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆவணங்களை சமர்ப்பித்தது தொடர்பில் சந்தேகமடைந்த அதிகாரிகள், இவரை குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லை அமுலாக்கப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர். பரிசோதனையில் போலியான தகவல்களுடன் போலி விசா தயாரிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

விசாரணையில் தரகர் ஒருவரிடம் 30 இலட்சம் ரூபா கொடுத்து விசா ஏற்பாடு செய்ததாகவும் கனடா சென்ற பின்னர் மேலும் 30 இலட்சம் ரூபா தருவதாக ஒப்புக்கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# காஸாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11,000 ஐ, கடந்தது

### பலியானோரில் 4,650 சிறுவர்கள் அடக்கம்

காஸாவில் கடந்த ஒக்டோபர் 07 முதல் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தை கடந்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. ஹமாஸ் தரப்பின் சுகாதார அமைச்சின் தரவுகளுக்கமைய இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் இதுவரையில் 11,320 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் 4,650 சிறுவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.இதுதவிர, 29,200 பேர் காயமடைந்துள்ளதாகவும் காஸா சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# உயிர் அச்சுறுத்தல்: உரிய பாதுகாப்பை வழங்குங்கள்

### அமைச்சர் ரொஷான் சபாநாயகரிடம் கோரிக்கை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கிரிக்கெட் சபையின் ஊழல், மோசடிகளை வெளிப்படுத்த முயன்றதால் தமது உயிருக்கும் தம் குடும்பத்தினரின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், இதில் கவனம் செலுத்தி தமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

ஊழல், மோசடிகளை வெளிப்படுத்தியதால், தாம், பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் ஷம்மி சில்வா, சுதத் சந்திரசேகர ஆகியோரின் கூற்றுக்களால் தமக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் சபாநாயகரை வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 01ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 02

### குறள் தரும் சிந்தனை



இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்

தாமே தொழில் செய்து ஊதியம் பெற்று உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று கையேந்த மாட்டார், தம்மிடம் வேண்டி நின்றவர்க்கும் ஒளிக்காமல் வழங்குவார்.

# பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பட்ஜட்

சுதந்திர இலங்கையின் 78 ஆவது வரவுசெலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் கடந்த திங்களன்று சமர்ப்பித்தார். ஆனால் இவ்வரவு செலவுத்திட்டம் எதிர்க் கட்சியினர் எதிர்பார்த்தபடி அமைந்திருக்கவில்லை.

கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அதனால் கடும் பொருளாதார சுமை மக்கள் மீது ஏற்படுத்தப்பட்டது. எரிபொருள், எரிவாயு அடங்கலாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களினதும் விலைகள் பெரிதும் அதிகரித்திருந்தன. இப்பொருளாதார சுமைக்கு நிவாரணம் கோரி மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தினர். இந்நிலையில் பொருளாதார நெருக்கடி அரசியல் கொதிநிலையை ஏற்படுத்தியதோடு, ஆட்சியையும் கூட புரட்டிப் போட்டது.

அவ்வாறான நெருக்கடிக்கு உள்ளான நாடொன்றில் எதிர்பார்க்கக் கூடிய வரவு செலவுத்திட்டமாக இவ்வரவுசெலவுத் திட்டம் அமைந்ததாக இல்லை. மாறாக அரசாங்க ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியக்காரர்களுக்கான கொடுப்பனவு, வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவு உள்ளிட்ட வாழ்க்கைச் செலவு சுமையை ஈடுசெய்வதற்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு மாத்திரமல்லாமல் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பல்வேறு புதிய அபிவிருத்தி திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இதன் விளைவாக, இது தேர்தலை இலக்காகக் கொண்ட வரவு செலவுத்திட்டம் எனக் கூறும் நிலைக்கு எதிரணியினர் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது 'நாட்டின் பொருளாதாரத்தை வழித்தடத்திற்கு கொண்டு வருவதே எனது முதல் பணி. பொரு ளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும். புதிய பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அதன் பின்னர் அடுத்த கட்டம் குறித்து சிந்திப்போம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை நிலைபேறானதாகக் கட்டியெழுப்புவதற்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும். பொருளாதாரம் ஸ்திர நிலையில் இருந்திருந்தால் கடந்த வருடத்தில் அவ்வாறான நெருக்கடிக்கு நாடும் மக்களும் முகம்கொடுக்க நேர்ந்திருக்காது. ஆனாலும் அவ்விதமான நிலைமை மீண்டும் நாட்டில் ஏற்பட இடமளிக்கக் கூடாது. அதற்கேற்ப பொருளாதார வேலைத்திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்து வருகிறார். இதனைக் கருத்தில் கொள்ளாது இது தேர்தலை இலக்காகக் கொண்ட வரவு செலவுத்திட்டம் எனக் குறிப்பிடுவது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. அதுவே மக்களின் கருத்தாகும்.

நாட்டின் தலைமையை ஏற்றதும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத் திட்டங்களை ஜனாதிபதி முன்னுரிமை அடிப்படையில் ஆரம்பித்தார். அதன் பயனாக பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டமாக நீங்கலானது.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த நவம்பரில் தனது முதலாவது வரவு செலவுத்திட்டத்தை (2023 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம்) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அவ்வரவுசெலவுத் திட்டம் பொருளாதார நிலைப்படுத்தலுக்கான யோசனைகளை உள்ளடக்கியதாக இருந்தது. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை விரைவாக மீட்டெடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு அவ்வரவு செலவுத்திட்டம் பக்கபலமாக அமைந்திருந்தது. அதன் பயனாக பொருளாதாரம் மறுமலர்ச்சிப் பாதையில் நம்பிக்கையோடு பிரவேசிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது. அத்தோடு பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அசௌகரியங்களும் நீங்கிவிட பெரும்பாலும் வழிவகுத்தது.

இந்நிலையில் பொருளாதார மறுசீரமைப்புக்கான யோசனைகளை உள்ளடக்கியதாக 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. புதிய பொருளாதாரத்திற்கான பிரவேசத்தை ஏற்படுத்தல், அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, அஸ்வெசும கொடுப்பனவுகளை அதிகரித்தல், சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சிகளை வலுவூட்டல் உட்பட அனைத்துத் துறைகளும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன. சிறந்த அரச சேவைக்கு சம்பள அதிகரிப்பு அவசியமானது. புதிய சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் அஸ்வெசும கொடுப்பனவு மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

பசுமை வலுசக்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருப்பதால் பசுமைப் பொருளாதாரத் துறையை முன்னேற்றம் அடையச் செய்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. உலர் வலயத்தில் விவசாயத்தை நவீனமயப்படுத்தல், மீன்பிடித்துறையை விரிவுபடுத்தல், சுற்றுலாத்துறை பிரச்சினைகளை அறிந்து கொண்டு சுற்றுலாப் பயணிகள் வருகையை 05 மில்லியன்களாக அதிகரிப்பதற்கான யோசனையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பங்களாதேசம் போன்ற வளர்ந்துவரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளுடன் போட்டியிடுவதற்கு காணப்படும் சவால்களை அறிந்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அவசியமான சூழலையும் இவ்வரவுசெலவுத் திட்டம் உருவாக்கியுள்ளது. அதேபோன்று பொருளாதார மாற்றங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு ஏற்ற வகையில் கல்வித்திட்ட மேம்பாட்டுக்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. 2030_2035 காலப்பகுதிக்குள் நவீன பொருளாதார இலக்குகளை அடைவதற்கு தேவையான பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்வதையும் இவ்வரவுசெலவுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

ஆகவே நாட்டின் பொருளாதாரத்தை நிலைபேறான வகையில் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை உள்ளடக்கியுள்ள இவ்வரவு செலவுத்திட்டத்தை அற்ப அரசியல் இலாபம் பெறும் வகையில் நோக்குவது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களுக்கு அவர்களும் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# சுவாமி ஐயப்ப விரதமும் மகரஜோதி தரிசனமும்



கார்த்திகை மாதம் என்றதுமே கேரளா மாநிலத்தில் எழுந்தருள் செய்யும் சுவாமி ஐயப்பனை விரதம் வேண்டி நிற்கும் காலமாகும். கார்த்திகை மாதம் அன்று அதிகாலையில் எழுந்து குளித்து மகா கணபதி குறிப்பாக பம்பை கணபதியை நினைத்து வணங்கி ஹோம பூஜையில் பங்கு கொண்டு எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருளால் விக்கினங்கள் இன்றி சுவாமி ஐயப்பனை வேண்டி தங்களது பெற்றோரால் அல்லது தாங்கள் செல்லும் சங்கங்களின் குரு சுவாமிகள் ஊடாக அல்லது ஆலய பிரதம குருக்கள் மூலம் ஐயப்பன் பதக்கம் கொண்ட துளசி மணி மாலை அணிந்து விரதம் கைகொள்ளும் மாதத்தில் ஆரம்ப நாளாக இன்றைய நாள் (17.11.2023) அமைந்துள்ளது.

ஐயப்ப சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் முதன் முதலாக மாலை அணிந்து செல்பவர்கள் கறுப்பு வஸ்திரம் அணிந்து கொள்வார்கள். இரண்டாம் மூன்றாம் மலை வருபவர்கள் நீல வஸ்திரம் அணிந்து கொள்வார்கள். மூன்று மலைக்கு மேற்பட்ட அதாவது பலமுறை மலையேறிய ஐயப்ப சுவாமிகள் காவி வஸ்திரம் அணிந்து கொள்வார்கள்.

மாலை போட்ட ஐயப்ப பக்தர்கள் அனைவரும் சுவாமி ஐயப்பனாகவே கருதப்படுவார்கள், வணங்கப்படுவார்கள். அவர்கள் தங்களுக்குள் உரையாடும் போது ஒருவருக்கொருவர் 'சுவாமி சரணம்' சொல்லி சுவாமி என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி தம்மிடையே உரையாடிக் கொள்வார்கள்.

அதேபோன்று விரத நாட்களில் பிரம்மச்சாரிய விரதம் முக்கியம். சைவ உணவை உட்கொள்ள வேண்டும். ஒரு வேளையாவது விரதம் இருக்க வேண்டும். அதேவேளை நகம் வெட்டக்கூடாது, சவரம் செய்யக்கூடாது, சினிமா போன்றவை பார்க்கக் கூடாது. சுவாமி ஐயப்பனுக்கான பஜனைகளில் ஈடுபட வேண்டும்.

முடிந்தளவு கன்னி சுவாமிகள் முதன் முதலாக மாலை அணிந்தவர்கள் பலமுறை மலையேறிய சுவாமிகளுக்கு அன்னதான பிரபுவான சுவாமி ஐயப்பனை நினைத்து குரு சுவாமிகளுக்கு அன்னதானம் வழங்க வேண்டும். இருமுடியில் நெய், தேங்காய் அதே போன்று பதினெட்டாம் படியில் ஏறும் முன்னர் அதற்கான தேங்காய், வரும் பொழுது தரிசனம் முடிந்த பின்னர் மீண்டும் ஒரு தேங்காய் உடைப்பதற்கு மொத்தமாக மூன்று தேங்காய் இருமுடியில் கொண்டு செல்ல வேண்டும்.

அத்துடன் பூஜைப் பொருட்களும் கொண்டு செல்ல வேண்டும். அந்த இரு முடியை சுமந்து கொண்டு செல்லும்போது சுவாமி ஐயப்பனையே நினைத்து மலை ஏற வேண்டும். 18 படி தாண்டி சுவாமி ஐயப்பனை தரிசனம் கண்டதன் பின்னர் குருசாமி உதவியின் மூலம் நெய்யபிஷேகம் செய்ய வேண்டும்.

நெய் அபிஷேகம் முடிந்ததன் பின்னர் அங்கிருந்து பெறப்படும் நெய்யை பூஜைப் பொருட்களையும் மீண்டும் வீட்டுக்குக் கொண்டு வந்து நெய்வேத்தியம் வைத்து தாங்களும் சுற்றத்தாரும் அதனைப் பகிர்ந்து அதனை தெய்வப் பிரசாதமாக கருதி கைக்கொள்ள வேண்டும், பகிர வேண்டும்.

அதேவேளையில் இந்த விரத காலத்தில் கூடுதலாக பக்திபூர்வமாக ஐயப்பனையே நினைத்து பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதும், பஜனை வழிபாடுகளில் ஈடுபடுவதும், பாத நமஸ்காரம் செய்வதும் முக்கியமாகக் கைக்கொள்ளப்படுகின்றன.

எப்பொழுதும் காலில் பாதணிகள் அணியாமல் வெறும் பாதங்களுடனே நடமாட வேண்டும். கலியுக வரதனாகிய சுவாமி ஐயப்பனை நினைத்து, இந்த விரதத்தை அனுஷ்டிப்பதன் காரணமாக சனி கிரகதோஷமும் விடுபட்டுப் போகும்.

எல்லாம் வல்ல சுவாமி ஐயப்பன் அருள் புரிந்து நல்வாழ்வு கிடைக்க நாம் அனைவரும் தினமும் 'ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா' எனும் சரண கோஷத்தை காலை மாலை உச்சரிப்பதன் மூலம் நல்வாழ்வு நிச்சயம் கிடைக்கும். அந்த சுவாமி ஐயப்பன் எங்களுக்கு அருள்புரிவான். இந்த விரத காலத்தில் மகரஜோதி அன்று மகரஜோதி தரிசனம் கண்டு அந்த ஜோதிவடிவிலான ஐயப்பனை தரிசித்து நல்வாழ்வு கிட்ட சுவாமி ஐயப்பனை பிரார்த்தனை செய்வோமாக!.



கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள்
**பாபு சர்மா...**

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கைகொடுக்கும் ஹம்பாந்தோட்டை இக்ரா

சாதாரண பிள்ளைகளிலிருந்து பல்வேறு காரணிகளால் வேறுபட்டுக் காணப்படும் பிள்ளைகளுக்காக வழங்கப்படும் கல்வி விசேட கல்வி என அழைக்கப்படுகின்றது.

ஏனையோரிலும் பார்க்க விசேட கவனத்திற்கு உட்படுத்த வேண்டிய நிலையில் உள்ள குறித்துக்காட்டத்தக்க தேவைப்பாடுடையோரே விசேட தேவையுடையவராகக் கருதப்படுகின்றனர். இதன்படி சில வகையான உடல், உள, பார்வைக் குறைபாட்டை நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ கொண்டிருந்து அதனால் நாளாந்த வாழ்க்கைக்கு அவசியமான நடவடிக்கைகளை ஆற்றுவதற்குத் தேவையான ஆற்றல்கள் எல்லைப்படுத்தப்பட்ட பிள்ளைகளை விசேட தேவையுடைய பிள்ளைகள் எனலாம்.

மேலும், வகுப்பறையில் நடைமுறைப்படுத்தப்படும் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் மூலம் பயன்தர முடியாத அளவுக்கு கற்றல் குறைபாடுடைய பிள்ளைகளையும் விசேட தேவையுடைய பிள்ளைகள் எனலாம்.

விசேட தேவையுடைய பிள்ளைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

உடல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்கும் பிள்ளைகள், உளம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்கும் பிள்ளைகள், ஒழுக்க நடத்தை கோளாறுடைய பிள்ளைகள், கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகள்

**மீத்திறன் பிள்ளைகள்:**

'சாதாரணம்' எனக் கருதப்படும் பிள்ளைகளிலிருந்து அவர்களின் தேவைகள் வேறுபட்டுக் காணப்படுவதனால் மீத்திறன் மற்றும் செயற்திறன் உள்ள பிள்ளைகளும் விசேட தேவையுடைய பிள்ளைகளாகக் கருதப்படுகின்றனர்.



படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

இவர்கள் அனைவருக்கும் சிறந்த கல்வியினை வழங்குவதனூடாக அவர்கள் சார்ந்த சமூகங்களும் மேம்பாடடைய துணைபுரியலாம். இவ்வாறான பிள்ளைகள் தொடர்பாக சாதாரண வகுப்பறை வேலைத்திட்டங்கள் மூலம் உச்ச பிரதிபலன் பெற முடியாது. அவர்களுக்கான விசேட கற்பித்தல் முறைகளை கையாளுதல், அவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்துதல் என பல துறைகளில் அதிக கவனம் செலுத்துவது மிக அவசியமாகின்றது. இலங்கையிலும் விசேட தேவை உடையோருக்கான கல்வியினை வழங்குவதற்கு கல்வி அமைச்சின் விசேட கல்விப் பிரிவு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஹ/ இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் சாதாரண வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே விசேட தேவையுடைய பிள்ளைகளும் வகுப்பாசிரியர்களினால் இனங்காணப்பட்டமையினை அடுத்து, அவர்களை சாதாரண வகுப்பறைகளில் சாதாரண மாணவர்களுடன் சேர்த்து கற்பிப்பதில் பல சவால்களை ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்நோக்க நேரிட்டது.

இது தொடர்ந்து சில வருடங்களாக இனங்காணப்பட்ட பிரதான ஒரு சவாலாக இருந்தமையினால், விசேட தேவையுடைய பிள்ளைகள் தொடர்பாக பாடசாலையினால் மேற்கொள்ளப்பட்ட தேடல்கள், கிடைக்கப்பெற்ற அறிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக ஏராளமான மாணவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாமல் வீடுகளில் முடங்கிக் கிடப்பதை அவதானிக்க முடிந்தது.

(13ஆம் பக்கம் பார்க்க)



**R.Rinosha...**
B.A. (First Class Honours in Political Science & Public Policy), PGDE (R), SLTS, Iqra Primary Vidyalaya, Hambantota

# புதுமை, உள்ளடக்கத்தில் வெற்றியை கொண்டாடும் MAS Holdings, இலங்கை தேசிய பாராலிம்பிக் குழு

MAS Holdings மற்றும் இலங்கை தேசிய பராலிம்பிக் குழு (SLNPC) ஆகியவற்றுக்கிடையேயான ஒத்துழைப்பானது, பரா தடகள வீரர்களுக்கு அவர்களின் முழு திறனையும் வழங்குவதற்கான ஒரு பகிரப்பட்ட அர்ப்பணிப்புடன் கொண்ட, ஒரு ஐக்கியமான கூட்டாண்மையாக மாறியுள்ளது. நேற்று 16 ஆம் திகதி Hive Auditorium இல் நடைபெற்ற பாராட்டு விழா, விளையாட்டு உலகில் உள்ளடக்கத்தை ஆதரிக்கும் வெற்றிகரமான பயணத்தைக் கொண்டாடியது.

அண்மையில் நடைபெற்ற Hangzhou 2022 ஆசிய பரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று 11 பதக்க வெற்றிகளுடன் (2 தங்கம், 5 வெள்ளி மற்றும் 4 வெண்கலம்) இலங்கைக்கு பெருமையையும் அங்கீகாரத்தையும் கொண்டு வந்த 26 இலங்கை விளையாட்டு வீரர்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

MAS Holdings மற்றும் SLPNC இடையேயான உறவு, பகிரப்பட்ட இலக்குகள் மற்றும் பரஸ்பர புரிதலின் சக்திக்கு ஒரு சான்றாக விளங்கியுள்ளது. இலங்கையில் பரா தடகள வீரர்களின் தனித்துவமான தேவைகள் மற்றும் அபிலாஷைகளைப் புரிந்து கொள்வதில் இரு தரப்பினரும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ளனர்.

இலங்கை தேசிய பராலிம்பிக் குழுவின் துணைத் தலைவர் பிரியந்த பிரிஸ் கூறுகையில், "MAS Holdings மற்றும் தேசிய பராலிம்பிக் கமிட்டிக்கு இடையேயான உறவு, குறுகிய காலமாக இருந்தாலும் வலுப்பெற்று வருகிறது, ஏனெனில் இரு அமைப்புகளும் பரா தடகள வீரர்களுக்கு அவர்களின் முழுத் திறனுக்கும் சேவை செய்வதில் பொதுவான நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுகின்றன" எனத் தெரிவித்தார்.

MASன் புதுமைத்திறன் மீதான அர்ப்பணிப்பை மேலும் பாராட்டிய பீரிஸ், "NPC, இந்த கருத்துக்களை முன்னோக்கி எடுத்துச் செல்லும் MAS இன் புதுமைத்திறன்களுக்கு எப்போதும் நன்றி தெரிவிக்கிறது. அண்மையில் சீனாவில் நடந்த போட்டிகளில், ஆடைகள் உங்கள் உடலின் ஒருங்கிணைந்த பகுதி என்பது தெளிவாகக் காட்டப்பட்டது, மேலும் விளையாட்டு வீரர்கள் வசதியாகவும் ஆர்வமாகவும் உணர்ந்தனர்" எனக் கூறினார்.



MAS Holdings மற்றும் இலங்கை தேசிய பராலிம்பிக் குழு இடையேயான ஒத்துழைப்பு வெறும் நிதியுதவியைத் தாண்டி நீண்டுள்ளது. சமூகத்தில் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட MAS இன் குறியீடான 'Lable', சமூகத்தில் உள்ள பழைய, காலாவதியான லேபிள்களை நீக்கி, மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் பெருமை மற்றும் மரியாதைக்கு வழிவகுக்கிறது.

MAS Holdings இன் புத்தாக்கமான வடிவமைப்பு மற்றும் உற்பத்தி செயல்முறைகள், பரா தடகள வீரர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளன. இந்த நிறுவனம், பரா வீரர்களுக்கு உயர் தரம், செயல்திறனை மேம்படுத்தும் விளையாட்டு உடைகள் மற்றும் பயிற்சி வசதிகளை வழங்குவதில் நீண்டகாலமாக அர்ப்பணித்துள்ளது.

Leg braces கொண்ட தடகள வீரர்களுக்கு Wider Leg திறப்புகளுடன் கூடிய Track Pants, Wheelchair டென்னிஸ் விளையாட்டு வீரர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட Shorts மற்றும் தசைச் சிதைவு காரணமாக கால் அளவுகளில் ஏற்படும் மாறுபாடுகளுக்கு வசதியாக தனிப்பயனாக்கப்பட்ட நீச்சல் உடைகள் ஆகியவை ஒவ்வொரு விளையாட்டு வீரரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் MAS இன் அர்ப்பணிப்புக்கான சில எடுத்துக்காட்டுகளாகும்.

Lable" என்ற MAS இன் ஆடைகள், பராலிம்பிக் வீரர்களுடன் இணைந்து பணியாற்றியதில் பெருமை அடைந்ததோடு, புத்தாக்கமான ஆடைகளை உருவாக்குவதில் விளையாட்டு வீரர்களின் கருத்து மற்றும் அணிபவர்களின் சோதனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

# வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் கல்வித்துறை சிரேஷ்ட உதவிச் செயலாளராக றழீயுத்தீன் நியமனம்

அனுராதபுரம் மாவட்ட முஸ்லிம் கல்வி மேம்பாட்டுக்கான வலையமைப்பின் பிரதான செயற்பாட்டாளர்களுள் ஒருவராகவும், செயற்குழு உறுப்பினராகவும் சமூகம்சார் கல்விப் பணிகளில் ஈடுபட்டுவரும் இலங்கை நிர்வாக சேவை (SLAS) அதிகாரியான ஜே. றழீயுத்தீன் வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் கல்வித் துறைக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவிச் செயலாளரராக உயர்வு பெற்றுள்ளார்.

2008 ஆம் ஆண்டு இலங்கை விவசாயக் கல்லூரியில் முகாமைத்துவ உதவியாளராக அரச பணியில் இணைந்து கொண்ட



ஜே. றழீயுத்தீன், 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்திடைந்ததன் மூலம் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியானார். இவர் வவுனியா, பாவற்குளம் ஓய்வு பெற்ற அதிபர் மர்ஹூம் மௌலவி ஜகுபர்த்தீன்_ சக்கீனா பீவி தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் தனது 13 வருட பொதுநிர்வாக சேவைக் காலத்தில் ராஜாங்கனை பிரதேச செயலகம், நாச்சாத்துவ பிரதேச செயலகம் என்பவற்றில் உதவி பிரதேச செயலாளராகவும், பதவிய பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகவும் பின்னர் வடமத்திய மாகாணத்தின் விளையாட்டு துறை பணிப்பாளர், வடமத்திய மாகாணத்தின் பிரதான உதவி செயலாளர் ஆகிய பொறுப்புகளை நிறைவேற்றிய நிலையில், தற்போது வடமத்திய மாகாண சபையின் பிரதம அமைச்சின் கல்வித் துறைக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவிச் செயலாளராக உயர்வு பெற்றுள்ளார்.

**டப்ளியூ.எம்.பைசல்...**
(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாம் கூறும் மத சுதந்திரம்

நிலைபேறான மகிழ்ச்சியும் கௌரவமும் நிறைந்த ஒரு சமூக உருவாக்கத்திற்கான மிகப்பிரதான அடிப்படைகளில் ஒன்றாக மதச் சுதந்திரம் விளங்குகிறது. அதனால்தான் இஸ்லாம் மதச்சுதந்திரம் சம்பந்தமான அதனது ஆழ்ந்த அவதானிப்பையும் வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அல்குர்ஆன், '(சத்திய இஸ்லாம்) மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமும் இல்லை. (ஏனெனில்) வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாக தெளிவாகி விட்டது.' (சூறா அல் பகரா – 256) என்று குறிப்பிட்டுள்ளது.

இது மதச்சுதந்திரம் குறித்த அல் குர்ஆனிய பிரகடனமாகும். நபி (ஸல்) அவர்களைச் சந்திப்பதற்கு கிறிஸ்தவர்களாக இருந்த நஜ்ரான் தூதுக்குழுவொன்று வந்த போது அவர்களை மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலில் வைத்தே அன்னார் உபசரித்ததோடு அவர்களின் வணக்கங்களை மஸ்ஜிதின் ஒரு புறத்தில் நிறைவேற்றவும் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள்.

(ஆதாரம்: ஸீரது இப்னு இஸ்ஹாக்)

இவ்வசனம் அருளப்படுவதற்கான பின்னணி காரணி பின்வருமாறு அமைந்துள்ளது. சாலிம் இப்னு அவ்ப் கோத்திரத்தைச் சேர்ந்த அன்ஸாரிகளில் ஒரு மனிதருடைய இரண்டு ஆண்மக்கள் நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருவதற்கு முன்பே கிறிஸ்தவ மதத்தை தழுவிக்கொண்டனர். நபி (ஸல்) அவர்களின் மதீனா விஜயத்தை தொடர்ந்து இஸ்லாத்தை தழுவிக் கொண்ட அவர்களின் தந்தை, கிறிஸ்தவ மதத்தை தழுவியிருந்த அவரது இரண்டு குழந்தைகளும் அவரை தரிசிக்க வந்த சமயம், அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் இருவரும் கிறிஸ்தவ மதத்தை விட்டு விட்டு இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொள்ளும் வரை நான் உங்களை விடமாட்டேன் என்று கூறி வற்புறுத்தினார். ஆனால் அவ்விருவரும் அதனை மறுத்தனர். இறுதியாக நபி (ஸல்) அவர்களிடம் அம்மூவரும் வந்து முறையிட்டு கடுமையான தர்க்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே மேற்குறித்த வசனம் அருளப்பட்டது.

(ஆதாரம் அல்வாஹித், அஸ்பாபுன் நுஸூல்).

இவ்வசனம் அருளப்பெற்றதும் அவ்விருவரும் அவர்கள் தழுவியிருந்த கிறிஸ்தவ மதத்திலேயே இருப்பதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டது. இதன் ஊடாக இஸ்லாத்தின் மதச்சுதந்திரக்கோட்பாடு மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பிற சமூகத்தவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் வழங்கிய மதச் சுதந்திரம், அவர்களுக்கு ஆழமான மன அமைதியையும், நம்பிக்கையையும் வழங்கியது. இஸ்லாமிய ஆட்சிக் குட்பட்ட பகுதிகளிலும் அவர்களது மத அனுஷ்டானங்களையும், கிரியைகளையும் பரிபூரணமாக நிறைவேற்றும் சுதந்திரத்தோடு வாழலாம் என்ற அனுமதி மதச்சுதந்திரம் பற்றிய இஸ்லாமிய மார்க்கத்தின் தெளிவான நிலைப்பாட்டை விளக்கி நிற்கிறது. உலகின் எட்டுத்திக்குகளிலும் இஸ்லாம் அதன் ஆளுமையை நிலைநாட்டி பெரும் வல்லரசாக ஓங்கி நின்ற போதும் கூட அதன் மதச்சுதந்திரம் பற்றிய கோட்பாட்டில் யாரும் எவ்வகையான மாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை என்பதனை வரலாற்றைப் படிப்பவர்களால் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.



இஸ்லாம், இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் பிற சமூகத்தவர்களுக்கு வழங்கியிருக்கின்ற சில சலுகைகளை, இஸ்லாமியர்களுக்கு கூட வழங்கவில்லை என்பதனை அவதானிக்கலாம். உதாரணமாக இஸ்லாமிய ஆட்சியின் கீழ் மதுபானம் அருந்தக்கூடிய ஒரு முஸ்லிம் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ள இஸ்லாம் அங்கு வாழக்கூடிய பிற மதத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் மதுபானம் அருந்துகின்ற போது இஸ்லாமிய குற்றவியல் சட்டத்திற்கு அமைவாக அவன் தண்டிக்கப்பட வேண்டும் என்ற எந்த விதியையும் அறிமுகப்படுத்தவில்லை.

இவ்வாறே பன்றி இறைச்சியை முஸ்லிம்களுக்கு தடைசெய்திருக்கின்ற இஸ்லாம், பிற சமூகத்தவர்களின் சமயம் அதை சாப்பிடுவதற்கான அனுமதியை வழங்கியிருக்கின்ற பட்சத்தில் இஸ்லாம் அதில் எந்த தடையையும் ஏற்படுத்தவில்லை. (ஆதாரம்: அல் அகல்லியாத் அல் தீனிய்யா வல் ஹில்லுல் இஸ்லாமிய்யு)

இஸ்லாமிய ஆட்சியின் போது முஸ்லிமல்லாதோர் தேவாலயங்களை புதிதாக நிர்மாணிக்கவும் பெருநாட்களை கொண்டாடவும் பூரண அனுமதி வழங்கப்பட்டிருந்தது. திருநாட்களின் போது கிறிஸ்தவர்கள் சிலுவைகளையும், மெழுகுவர்த்திகளையும் சுமந்து கொண்டு இஸ்லாமிய நகரங்களின் வீதிகளில் ஊர்வலம் செல்வோராக இருந்தனர். இஸ்லாமிய ஆட்சியில் சிறுபான்மையினருக்கு எந்தளவு தூரம் மதச் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது என்பது இங்கு நோக்கத்தக்கது.

மதீனா சாசனத்தில் ஒவ்வொரு மதத்தை சார்ந்தவர்களும் தத்தமது மத கடமைகளையும் அனுஷ்டானங்களையும் பூரணமாக நிறைவேற்றுவதற்கான அங்கீகாரம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டிருப்பது இஸ்லாத்தின் மதச் சுதந்திரம் பற்றிய விசாலமான பார்வையை பறைசாற்றுகின்றது.

முஸ்லிமல்லாதோர் அவர்களது மார்க்கத்தையும் செல்வங்களையும் பாதுகாத்துக் கொள்ள உரிமை உடையவர்கள். அவர்கள் முஸ்லிம்களது மார்க்கத்தை பின்பற்ற வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படமாட்டார்கள். அத்துடன் அவர்களது செல்வங்கள் சூறையாடப்படவும் மாட்டாது.

நாட்டுக்குள்ளும் வெளியேயும் நடமாடுவதற்கான சுதந்திரம் நாட்டின் பாதுகாப்பிற்கு ஏற்ப உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நஜ்றான் தேசத்து நஸாறாக்களோடு நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் மத சுதந்திரத்துக்கான வாசல் முழுமையாக திறக்கப்பட்டிருந்தது.

மதச் சுதந்திரம் பற்றிய இஸ்லாத்தின் தெளிவான நிலைப்பாட்டை எடுத்தியம்பும் மற்றுமொரு குர்ஆனிய வசனத்தை பின்வருமாறு காணலாம். 'மேலும் உம் இறைவன் நாடியிருந்தால் பூமியிலுள்ள யாவரும் ஈமான் கொண்டிருப்பார்கள், எனவே மனிதர்கள் அனைவரும் முஃமின்களாக ஆகிவிட வேண்டும் என்று அவர்களை நீர் கட்டாயப்படுத்த முடியுமா' (ஆதாரம்: சூறா யூனுஸ் 99)

மேற்குறிப்பிட்ட வசனத்தில் இருந்து மதங்களின் இருப்பை ஏற்றுக்கொள்கின்ற இஸ்லாத்தின் நிலைப்பாடு இஸ்லாம் மட்டும் தான் அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்ட சத்திய மார்க்கம் என்ற சிந்தனைக்கு ஒரு போதும் முரண்படாது.

சகல மதங்களுக்கும், சமூகங்களுக்கும் வாழ்வுரிமை உண்டு. 'நபி (ஸல்) அவர்கள் நன்மாராயம் கூறுபவரும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவருமாவார்'.

ஆகவே முஹம்மது (ஸல்) அவர்களின் சமூகத்தினரது கடமை நபிவழி நின்று இஸ்லாத்தை வாழ செய்வதும் பிற மனிதர்களைச் சென்றடையச் செய்வதுமேயன்றி அவர்கள் மீது திணித்து முஸ்லிம்களாக மாற்றுவதன்று. இந்த உண்மையை அங்கீகரிக்காமல் ஒருபோதும் மத சகிப்புத்தன்மை வராது. சகிப்புத்தன்மை இன்றேல் நட்புறவு நிலை பெறாது.

இறைநம்பிக்கை என்பது மனிதனோடு சம்பந்தப்பட்டது. அதனை யாரும் கொண்டுவந்து திணிக்க முடியாது என்பது தான் இஸ்லாத்தின் உறுதியான நிலைப்பாடாகும். மேற்குறித்த மதச் சுதந்திரம் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு மிகத் தெளிவானதாகும். இஸ்லாம் மாற்று மதங்களையோ, பிற சமூகத்தவர்களின் நம்பிக்கை கோட்பாடுகளையோ, கலாசார நடைமுறைகளையோ ஒருபோதும் நிந்தித்ததோ, இழிவுபடுத்தியதோ இல்லை. மாறாக இவ்வாறு செய்பவர்கள் இஸ்லாத்தின் வழிகாட்டல்களையும் வரையறைகளையும் மீறியவர்களாகக் கணிக்கப்படுவார்கள்.

ஆகவே மதச்சுதந்திரம் பற்றிய இஸ்லாத்தின் தெளிவான நிலைப்பாட்டை சரியான முறையில் புரிந்து செயற்படுவதோடு அவை தொடர்பான தெளிவை பிற சமூகத்தவர்களுக்கும் கொண்டு செல்வது இன்றியமையாததாகும். இதில் ஏற்பட்ட பலவீனங்கள் தான் இஸ்லாம் பற்றிய பிழையான புரிதல்களுக்கு காரணம் என உறுதிபடக்கூறலாம்.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

# அநீதியிழைக்கப்பட்டவனின் துஆ



இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் எதிரிகளால் பல விதமான இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்களும், நபித்தோழர்களும் குறைஷிகளால் இழைக்கப்பட்ட அநியாயங்களையும், அவமானங்களையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டார்கள். மக்கத்து இறைநிராகரிப்பாளர்கள் எல்லை மீறிய இன்னல்களின் காரணமாக இறுதியில் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். தாம் வாழ்ந்த மண்ணை விட்டும் வெளியேறிய முஸ்லிம்கள் பொறுமையைக் கொண்டும் துஆவைக் கொண்டும் வாழ்ந்தார்கள். அவர்களது உறுதியான ஈமானிய வாழ்வின் காரணமாக ஹிஜ்ரி 8ல் மீண்டும் மக்காவில் வெற்றியுடன் நுழைந்தார்கள்.

அல்லாஹ்வுக்காக சகல துன்பங்களையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டதன் காரணமாகவும், அவர்களுடைய பிரார்த்தனையின் காரணமாகவும், அல்லாஹ் அவர்களுக்கு மிக உன்னதமான வெற்றியை அளித்தான். அநீதி இழைக்கப்பட்டவர்களின் பிரார்த்தனைகளை இறைவன் நிச்சயம் நிறைவேற்றி வைப்பான். திருக்குர்ஆனில் அல்லாஹ் வினவுகிறான், '(கஷ்டத்தில் சிக்கித்) துடிதுடித்துக் கொண்டிருப்போர் அழைத்தால் அவர்களுக்குப் பதில் கூறி அவர்களின் கஷ்டங்களை நீக்குபவன் யார்?

(ஆதாரம்: சூரா அந்நம்லு)

மேலும் இத்தகைய சோதனைகளைத் தாங்கி அல்லாஹ்வின் உதவியில் நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கும் இறைவனின் உதவிகள் கிட்டுகின்றன. அல்லாஹ் தன் திருமறையில், '(சோதனைக்குள்ளாகும்) அவர்கள், தங்களுக்கு எத்தகைய கஷ்டம் வந்தபோதிலும், நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கிறோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம்' எனக் கூறுவார்கள். இத்தனையோர் மீதுதான் அவர்களுடைய இறைவனின் ஆசிர்வாதங்களும், கிருபையும் ஏற்படுகின்றன. மேலும் இவர்கள் தான் நேரான வழியையும் அடைந்தவர்கள்'.

(ஆதாரம்: அல் பகரா: 156, 157)

அல்லாஹ்வின் உதவியில் உறுதியுடன் இருக்கும் இத்தகைய அநீதி இழைக்கப்பட்டோரின் பிரார்த்தனைகளை அல்லாஹ் எவ்வித தடையுமின்றி ஏற்றுக் கொள்கிறான். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், ஐந்து வகையான துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அவற்றில் அநீதி இழைக்கப்பட்டவரின் துஆவும் ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: பைஹகீ)

மேலும் நபி (ஸல்) அவர்கள், துஆ வணக்கத்தின் ஆணிவேர் என்று கூறியதாக அனஸ் இப்னு மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள். (ஆதாரம்: திர்மதி)

உண்மையில் அநீதிக்கு உட்பட்டவனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் எவ்வித திரையும் இருப்பதில்லை. இத்தகைய பிரார்த்தனைகள் ஓர் உண்மை விசுவாசியின் மிகப் பெரிய ஆயுதமாகும்.

அலி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். துஆ முஃமினின் ஆயுதம். தீனின் தூண். வானம் பூமியின் ஒளி என ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்தத்ரக் ஹாகிம்)

எதிரி எத்தகைய வலிமையுடையவனாக இருப்பினும் ஈமானில் உறுதியுடனும் அல்லாஹ்வின் உதவியில் அசையாத நம்பிக்கை கொண்டு பொறுமையுடன் காத்திருக்கும் அடியானின் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவதில் எத்தகைய சந்தேகமுமில்லை. இஸ்லாமிய வரலாற்றில் பத்ருப் போர்க்களம் பல பாடங்களை முஸ்லிம்களுக்கு கற்றுத்தந்துள்ளது. முஸ்லிம்களோ 313 பேர் மட்டும் இருந்தார்கள், அவர்களை எதிர்க்க வந்த மக்கத்து இறைநிராகரிப்பாளர்கள் படையில் 1000 வீரர்கள் இருந்தார்கள். இவர்களிடம் 100 குதிரைகளும், 600 கவச ஆடைகளும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு அதிகமான ஒட்டகங்களும் இருந்தன. முஸ்லிம்களிடம் மிகச் சொற்பமான ஆயுதங்களும், ஒட்டகங்கள், குதிரைகளுமே காணப்பட்டன.

இச்சமயம் நபி (ஸல்) அவர்கள் இரு கரமேந்தி பிரார்த்தித்தார்கள். 'இறைவா! இந்தக் குறைஷிகள் இறுமாப்போடு உன்னுடன் போர் செய்ய வந்துள்ளனர். உனது மார்க்கத்தை எதிர்க்கத் துணிந்துள்ளனர். உனது தூதரைத் தோல்வியுறச் செய்ய பிடிவாதம் பிடிக்கின்றனர். இறைவா! நீ எனக்கு உதவி செய்வதாக வாக்களித்துள்ளாய். அவ்வாக்கை நிறைவேற்றுவாயாக! இறைவா! இச்சிறிய கூட்டத்தை நீ அழித்துவிட்டால் இன்றைய தினத்துக்குப்பின் உன்னை வணங்குபவர்கள் இருக்க மாட்டார்கள்.

அவ்வேளை நபி (ஸல்) அவர்களது போர்வை நழுவி விழுந்தது. அந்தளவுக்கு அல்லாஹ்விடம் மன்றாடி துஆ செய்தார்கள். நபியவர்களின் இப்பிரார்த்தனை காரணமாகவும் தியாகத்தின் காரணமாகவும், முஸ்லிம்கள் அன்று மகத்தான வெற்றியடைந்தார்கள். துஆ என்னும் ஆயுதம் அன்று முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கியதற்கான காரணம் முஸ்லிம்களுடைய தியாகமும், பொறுமையுமாகும். மக்காவிலும் மதீனாவிலும் பலவிதமான இன்னல்களையும், சிரமங்களையும் அனுபவித்தார்கள். எனவே எமது துஆக்கள் நிறைவேற வேண்டுமாயின் உறுதியான ஈமானுடன் பொறுமையும் மிக அவசியமாகும்.

தமது மக்கமா நகரிலிருந்து நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் தமது பிறந்த மண்ணைத் துறந்து, அங்கிருந்து புலம்பெயர்ந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தனர். மேலான கலிமாவுக்காகவும், தீனைப் பாதுகாப்பதற்காகவும் பல தியாகங்களை செய்தனர். பொறுமையுடன் இறைவனிடம் கையேந்தியவர்களாக அல்லாஹ்வின் உதவியை எதிர்பார்த்திருந்தனர். ஒன்றிரண்டு வருடங்களல்ல... எட்டு வருடங்கள் பொறுமையுடன் வாழ்ந்தனர். ஆனால் நிலைமை மாறியது. நபி (ஸல்) மக்கமா நகரில் நுழைந்ததை உலகமே வியந்து நோக்கியது. ஹிஜ்ரி 8ல் ஒருதுளி இரத்தமின்றி மக்கா வெற்றிகொள்ளப்பட்டது.

மக்கா வெற்றியின்போது நபி (ஸல்) அவர்கள் பள்ளியினுள் நுழைந்து கஃபாவை தவாப் செய்தார்கள். தமது கையிலிருந்த கோலால் அங்கிருந்த 360 சிலைகளைக் கீழே தள்ளியவர்களாக, பின்வரும் இறைவசனத்தைக் கூறியவர்கள். 'சத்தியம் வந்தது. அசத்தியம் மறைந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்.

(அல் குர்ஆன் 17:80)

ஆகவே அநியாயத்திற்கு உள்ளானவர்களின் பிரார்த்தனைகளை அல்லாஹ் நிச்சயம் அங்கீகரிப்பான்.

கலாபூஷணம் யாழ் அஸீம்...

# முஹம்மத் (ஸல்) மனிதநேயத்தின் முன்மாதிரி

'அகிலத்தார்க்கு ஒரு அருட்கொடையாக' (அல் குர்ஆன் 21:107) முஹம்மத் (ஸல்) அவர்கள் இவ்வையகத்திற்கு வந்துதித்தார்கள். அறியாமையில் மூழ்கி நல்லது எது? கெட்டது எதுவென்று? தெரியாது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற வகையில் கொலை, கொள்ளை, களவு, குடி, சூது, விபசாரம் என மனிதனால் மட்டுமன்றி அல்லாஹ்வினாலும் விரும்பத்தகாத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தவர்களை அன்னார் அதிலிருந்து மீட்டெடுத்தார்கள். அத்தோடு அவர்களை மனிதப் புனிதர்களாகவும் உருவாக்கினார்கள்.

அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும், உன்னதமான புனித இஸ்லாத்தை உலகிற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவும் தன் உயிரையே துச்சமென மதி த்து உறவுகளையும் உடமைகளையும் மாத்திரமல்லாமல் பிறந்த சொந்த மண்ணையே விட்டு இடம்பெயர்ந்த தியாகச் செம்மல்தான் நபி (ஸல்) அவர்களாவர். அன்னார் வாழ்வில் பட்ட துன்ப, துயரங்கள் சொல்லிலடங்காது. என்றாலும் நபி (ஸல்) அவர்களிடம் பொறுமை, சகிப்புத் தன்மை, தியாக மனப்பான்மை, மற்றவரை மதித்தல், கண்ணியங் கொடுத்தல், விட்டுக் கொடுத்தல், நம்பிக்கை, உண்மையில் உறுதியாக இருத்தல் உள்ளிட்ட சகல விடயங்களும் ஒருமித்துக் காணப்பட்டன. அவற்றின் ஊடாக அன்னார் முழு உலகிற்கும் முன்மாதிரியாகத் திகழுகின்றார்கள். ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபுஉதாபியீன்கள் அடங்கலாக இறைவிசுவாசிகள் அனைவரும் அவரையே முன்னுதாரணமாகக் கொண்டு வாழ்வை ஒழுங்கமைத்துக் கொண்டனர். அன்னாரது போதனைகளை முஸ்லிம்கள் ஏற்று நடக்கின்றனர்.

அல்லாஹ்வின் உண்மையான அடியானாகவும், அல்லாஹ்விற்கு உகப்பான முதல் மனிதராகவும் நபி (ஸல்) அவர்கள் விளங்கியுள்ளார்கள். அதற்கு அன்னாரின் வாழ்வொழுங்கே நல்ல எடுத்துக்காட்டாகும்.

நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையையும் அன்னாரின் மனிதநேய பண்புகளையும் கண்டு மாற்றுமத சகோதரர்கள் கூட அவர் உன்னதமான மாமனிதர் என்கின்றனர். மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதை செயலுருப்படுத்திக் காட்டியவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறான உன்னதப் பண்புகளை தன்னகத்தே கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு அடியான் மீதும் அபார பாசமுள்ளவராக இருந்தார்கள். தனது உம்மத்தின் மீது கொண்ட அன்பு, கருணை காரணமாக தனது மரணத் தருவாயிலும்கூட அவர் அனுபவித்த வேதனையின் தாக்கத்தினையும், அதன் தன்மையையும் கண்டு எந்தவொரு மனிதனாலும் சிறிதளவேனும் சிந்தித்துச் செய்ய முடியாத காரியமொன்றைச் செய்தார்கள். அதுதான் மரண வேதனையை யதார்த்தமாக உணர்ந்த நபி (ஸல்) அவர்கள், அதன் தாக்கத்தினை தனது உம்மத்தினர் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் என்றெண்ணி அந்த வேதனையை எனது உம்மத்திற்கு கொடுத்திராது அதனை எனக்கே தந்துவிடு என்று அல்லாஹ்விடம் இரஞ்சி பிரார்த்தனை செய்துள்ளார்கள் (ஆதாரம் நபிமொழி). அந்தளவிற்கு தனது உம்மத்தின் மீது அன்னார் அன்பு கருணை கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ்வின் கட்டளைகளையும் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனைகளையும் பின்பற்றும் எந்தவொரு மனிதனும் வழி தவறிப்போனதில்லை என்பதே இஸ்லாத்தின் வரையறைகளாகும். (ஆதாரம்: முஸ்லிம்)

ஒரு மனிதன் இவ்வுலகிலும், மறுவுலகிலும் சிறப்பான பேறு பெற்றவனாக ஆக வேண்டுமானால் அல்லாஹ்வினதும், நபியவர்களினதும் வழி முறைகளை பின்பற்றுவதிலேதான் தங்கியுள்ளது எனலாம்.

சத்தார் எம்.ஜாவித்...
பிரதான முகாமைத்துவ அலுவலர்,
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

# இஸ்லாத்தின் பார்வையில் கணவன், மனைவி உறவு

'பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என நான் உங்களுக்கு உபதேசிப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் பெண் (வளைந்த) விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டுள்ளார். விலா எலும்பின் மிகக் கோணலான பகுதி அதன் மேல் பகுதியாகும். அதை நிமிர்த்திக் கொண்டே போனால் ஒடிந்து விடுவாய். அதை நீ அப்படியே விட்டு விட்டால் கோணல் உள்ளதாகவே நீடிக்கும். ஆகவே பெண்கள் விஷயத்தில் உங்களுக்கு நான் உபதேசிப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்' என நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: அல்ஹதீஸ்)



மனைவி என்பவள் கணவர் விரும்புவது போன்று ஒரே நிலையில் சீராக இருக்க மாட்டாள். அவளிடம் சில கோணலான பண்புகளும் இயல்பாகவே அமைந்திருக்கும். இதை கணவர் புரிந்து கொள்ள வேண்டும். பூரணமானது அல்லது சரியானது என நாம் நினைக்கும் முறையில் அவளை திருத்திவிட முயலக்கூடாது. பெண்மைக்கென்று அமைந்துள்ள இயற்கைப் பண்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவளை அல்லாஹ் எந்த இயல்புடன் படைத்தானோ அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனைவியின் சில குணங்கள் தமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக தாம் விரும்புவது போலவே அவளை மாற்றிட நினைப்பது, 'விலா எலும்புகள் எதுவும் வளைந்திருக்கக்கூடாது, அவற்றை நேராக்கியே தீருவேன்' என்று நினைப்பது போன்றதாகும். அப்படி நினைத்துச் செயல்பட்டால் அது அந்த எலும்புகளை முறித்துவிடுவதில் தான் போய் நிற்கும்.

நபி (ஸல்) அவர்கள் பெண்ணின் மன நிலையையும் இயற்கை பண்புகளையும் ஆழமாக விளக்கி விவரித்திருக்கிறார்கள். இந்த வழிகாட்டுதலை உள்ளத்தில் ஏற்றுள்ள உண்மை முஸ்லிம் தமது மனைவியின் குறைகளைச் சகித்துக் கொள்வார். அவர்களது சிணுங்கல்களைப் பொருட்படுத்த மாட்டார். அதன் மூலம் அவர்களது இல்லற வாழ்வு சண்டை, சச்சரவு, வாக்குவாதம் இல்லாத மகிழ்ச்சி, அமைதி, நிம்மதி நிறைந்த இன்பப் பூங்காவாக திகழும்.

நபி (ஸல்) அவர்களின் இந்த மேலான வழிகாட்டுதல்களை எல்லா நிலைகளிலும் முன்மாதிரியாக அமைத்துச் செயல்படுவதே உண்மை முஸ்லிமின் பண்பாகும்.

இஸ்லாத்தில் திருமண ஒப்பந்தம் என்பது அற்பமான உணர்வுகளின் வெளிப்பாடோ, இயற்கை ஆசையைத் தணித்து விட்டுப் போவதற்கான வழியோ அல்ல. உண்மை முஸ்லிமிடம் மனித நேயமும், அறிவும், நற்குணமும், சகிப்புத் தன்மையும் அமைந்திருக்க வேண்டும். அந்தப் பண்புகளினால் தனது மனைவியிடம் காணப்படும் குறைகளை சகித்து அவற்றை மாற்றிக்கொள்ள பண்பாட்டுடன் நடக்க முயற்சிக்க துணையாக அமையும்.

தொகுப்பு:
உம்மு பாத்திமா அஸ்கா...



பலஸ்தீன் ஒத்துழைப்புக்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உரையாற்றுவதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

## புதிய பல்கலைக்கழகங்களில் முதலீடு...

டி.எஸ்.எஸ் நிகழ்வின் போது 2030 ஆம் ஆண்டளவில் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் “அனைவருக்கும் ஆங்கிலம்” நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்தார்.

அமரர் ஆர்.ஐ.டி. பிரபல கல்வியாளரும் டி.எஸ்.சேனாநாயக்க வித்தியாலயத்தின் ஸ்தாபகருமான அலஸின் 10 ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வில் கலந்துகொண்டு,

“எனது பாதை” என்ற சுயசரிதை நூலை ஜனாதிபதி வெளியிட்டார். இலங்கையில் கல்வித்துறையை சீர்திருத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆர். ஐ.டி. "அனைவருக்கும் கல்வி" என்ற அலஸின் நோக்கை நடைமுறைப்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

நிதி நெருக்கடி காரணமாக மாணவர்கள் உயர்கல்விக்கான வாய்ப்புகளை இழப்பதை ஏற்க முடியாதென்றும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

குழந்தைகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப சொத்துக்களை விற்கும் நடைமுறையை நிறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்விக்கான அணுகலை உறுதி செய்வதற்காக அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கான திட்டங்களை ஜனாதிபதி விக்கிரமசிங்க கோடிட்டுக் காட்டினார்.

இந்த முயற்சிக்கு பங்களிக்கும் தனியார் துறையில் உள்ளவர்களுக்கு அரசு ஆதரவளிப்பதாக அவர் உறுதியளித்தார்.

மேலும், சிங்களம் மற்றும் தமிழ் புலம்பெயர்ந்தோரை இலங்கைக்குத் திரும்பி புதிய பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதில் பங்கேற்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்,

## இவ்வார வர்த்தமானியில்...

உள்நாட்டலுவலகங்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்களின் முகாமைத்துவ சேவை அதிகாரிகளின் சேவை தரம் iii அதிகாரிகளுக்கான செயல் திறன் தடை தாண்டும் பரீட்சை பற்றிய அனைத்து விபரங்களும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வார வர்த்தமானியில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

## 15 வருடங்களுக்கு மேலாக...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மேற்படி 13 பேருக்கும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவசரமாக வழங்கப்பட்ட தீர்ப்புக்களை, மீள் பரிசீலனை செய்து அவர்களை கருணை அடிப்படையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பிணையிலாவது விடுவிக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

அவர்களை பிணையில் விடுவிப்பதானால், பிணை எடுப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களான நாம், தயாராகவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 3 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

நாட்டில் யுத்தம் நடைபெற்றபோது இளைஞர் ,யுவதிகள் கைது செய்யப்பட்டனர்.2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. நான் 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றம் வந்தபோது 217 அரசியல் கைதிகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இன்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் 15 வருடங்களுக்கும் மேல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாக 13 அரசியல் கைதிகள் சிறைகளில் உள்ளனர்.

ஏனையோர் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதற்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போது அரசியல் கைதிகளாகவுள்ள இந்த 13 போரையும் கருணை அடிப்படையில் விடுதலை செய்வதற்கு, அரசாங்கமும் ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பாக நீதிமன்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் 8 பேர் இருக்கின்றனர். மூவர் விளக்கமறியலில் உள்ளனர்.2 பேர் மரண தண்டனைக் கைதிகளாக உள்ளனர். தும்பறை சிறையில் உள்ள அரசியல் கைதிக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு 22 ஆயுள் தண்டனைகள்.14X 22+14 வருடங்கள் ஒரு மனிதனால் இந்தளவு ஆண்டுகள் தண்டனையை அனுபவிக்க முடியுமா?

அதேபோன்று ஆனந்த சுதாகரன் என்ற அரசியல் கைதிக்கு 93 வருட ஆயுள் தண்டனைகள்.அதாவது 93X14+10 வருடங்கள் .

அதேபோன்று பார்த்திபன் ,சிவகுமார் என்ற இரண்டு அரசியல் கைதிகளுக்கு ஒரு ஆயுள் தண்டனையும் 10 வருட சிறைத் தண்டனையுமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், அவர்கள் 28 வருடங்களாக சிறையில் இருக்கின்றார்கள் .அவர்களுக்குரிய தண்டனைக்காலம் முடிவடைந்தும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெருந்தோட்ட மக்களுக்காக "அதி சக்தி"...

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சீர்கேட்டின் பின்னர் பெருந்தோட்ட மக்களிடையே உணவு பாதுகாப்பு மற்றும் போசனை மட்டத்தின் சரிவு அதிகரித்துள்ளது. இதிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக பல மாற்று திட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

அந்த வகையில் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் மற்றும் செரண்டிப் கோதுமை மா உற்பத்தி நிறுவனம் ஆகியன இணைந்து சத்தூட்டப்பட்ட கோதுமை மா அறிமுக விழாவை நேற்று (15) நுவரெலியாவில் நடத்தின.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் எண்ணக்கருவுக்கமைய, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமியின் ஏற்பாட்டில் இவ்விழா நடைபெற்றது. நார்ச்சத்து, இரும்பு சத்து, போலிக்கமிலம் மற்றும் விட்டமின் பீ12 போன்ற சத்துக்களை உள்ளடக்கிய விசேட கோதுமை மா என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சந்தையில் உள்ள சாதாரண கோதுமை மாவை விட விலை மலிவாக பெருந்தோட்ட பகுதிகளில் காணப்படும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படவுள்ளது.

பெரும்பான்மையான தொழிலாளர்கள் மற்றும் பெண்கள், இளைஞர்கள் இடையே போஷாக்கு குறைப்பாடும் விசேடமாக எனிமிக் எனும் நோயும் காணப்படுகின்றது. இதற்கு தீர்வு வழங்கும் முகமாகவே முதற்கட்டமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், செரண்டிப் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி சர்மா, பெருந்தோட்ட யாக்கங்களின் பிரதம நிறைவேற்றதிகாரிகள், சுகாதார அதிகாரிகள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட அதன் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துக் கொண்டனர்.

## உள்ளூராட்சி சபை ஊழியர்கள்...

பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திரைசேறியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடை க்கான வினாக்கள் வேளையில் தயாசிறி ஜயசேகர எம் .பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். தயாசிறி ஜயசேகர எம் பி தமது கேள்வியில், கடந்த எட்டு வருடங்களாக மேற்படி சிற்றூழியர்கள் 13,000 பேர் கடமை புரிந்து வருகின்றனர். உள்ளூராட்சி சபைகள் மூலம் இவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டாலும் நிரந்தர நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை. இவர்களுக்கு நிரந்தர நியமனத்தை பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த பிரதமர்,

இதற்கு முன்னரும் இது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டு பதில் வழங்கப்பட்டுள்ளது. அவர்களை நிரந்தரமாக்குவதற்கு திரைசேறியுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கான கொடுப்பனவை வழங்கக்கூடிய சில உள்ளூராட்சி சபைகள் இருந்த போதும், அத்தகைய சுமையை சுமக்க முடியாத சில உள்ளூராட்சி சபைகளும் காணப்படுகின்றன.

## இ.தொ.கா உயர்மட்டக் குழு...

காங்கிரஸ் உறுதியாக இருப்பதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன உயர்வு விடயத்தில், பெருந்தோட்ட தொழில் அமைச்சு எவ்வித ஒத்துழைப்பையும் வழங்கவில்லையென இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் தொழில் அமைச்சு அலட்சிய போக்கை காட்டி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, எதிர்வரும் காலத்தில், நேரடியாக பெருந்தோட்ட முதலாளிமார் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டார். இதன்போது, முதலாளிமார் சம்மேளனம், இணக்கம் ஒன்றுக்கு வர மறுத்தால், காங்கிரஸ் தமது தொழிற்சங்க போராட்டங்கள் மூலம், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு உரிய வேதனத்தை பெற்றுக்கொடுக்கும் என்றும் அவர் செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

## வரவு செலவு திட்டத்துக்கு...

வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தவறாக கையாண்டமைக்கு, தானும் அரசாங்கத்திலுள்ள பலருமே பொறுப்பு என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிதி முறைகேடுகள் மற்றும் பொருளாதாரத்தின் முறைகேடுகளுக்கு காரணமானவர்களுக்கு எதிரான அடிப்படை உரிமை மனுக்களில் உயர் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா? என்ற ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர், தீர்ப்பை ஏற்கப் போவதில்லை என்றும், அதற்கான காரணங்களை தாம் விளக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அடுத்த கட்சி மாநாடு பிரமாண்டமாக நடத்தப்படும். அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி தேர்தல் மட்டத்தில் ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உள்ளூர் கலைஞர்களை...

அடையாளமும் மிக்க எங்கள் மண்ணின் கலைஞர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்சார் கலைகள் அத்தனைக்கும், தென்னிந்தியக் கலைஞர்களை முன்னிலைப்படுத்தும் இறக்குமதிக் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் முனைப்புப் பெற்றுள்ளது. இந்நிலைமை, நம்மண்ணின் கலைஞர்களையும், இளைய தலைமுறைத் திறமையாளர்களையும் மலினப்படுத்துவதாகவே உள்ளது.

விடுதலைப் போரையும், தமிழர்களது தேசிய இயக்கத்தையும் கொச்சைப்படுத்தியோர் , எமது மக்கள் கொன்றொழிக்கப்படும் போது எந்தச் சலனமும் மற்று தமது தனிமனித வளர்ச்சிக்காய் அயராதுழைத்தோரே இங்கு வரவழைக்கப்படுகின்றனர்.

இத்தகையர்வகளுக்கு எங்கள் மண்ணில் மதிப்பளிப்பதும், தனிப்பட்ட நலன்களுக்காக அப்பிரபலங்கள் உரைக்கும் பசப்பு வார்த்தைகள் என்பன இளைஞர்களைத் திசைதிருப்பும் ஓர் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிநிரலோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இருப்பழிந்து போய்க் கொண்டிருக்கும் தமிழர்களது பண்பாட்டுத் தொடர்ச்சியை மீள நிலைநிறுத்துவதில் கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் பெரும் பங்கிருக்கிறது. இத்தகையதோர் சூழலில் துறைசார் ஆர்வலர்கள் தம்மைத்தாமே நிலைநிறுத்துவதற்குரிய களங்களின்றி இருக்கின்றனர்.

எனவே, மண்ணின் கலைஞர்கள், இளைஞர்களது கலைத்திறனுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் என்றார்.

## 100 அத்தியாவசிய மருந்துகளுக்கு...

எதிர்காலத்தில் மேலும் 100 மருந்துகளுக்காகவாவது விலைக் கட்டுப்பாட்டை கொண்டு வருவதே எமது எதிர்பார்ப்பு. இதற்காக மேற்படி விலைகள் தொடர்பான குழு, சம்பந்தப்பட்ட அதிகார சபைக்கு வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

இதற்கான தலைவரும் அண்மையிலேயே நியமிக்கப்பட்டுள்ளார். அந்த தலைவருடன் கலந்துரையாடி நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவ்வாறு 100 மருந்துகளுக்கு விலைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதனை வர்த்தமானியில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக ஒரே மருந்துக்கு சுமார் 10 வரையான வர்த்தக பெயர்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## கனடாவிலிருந்து வந்த...

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில், கொள்கலனுக்குள் ஆறு கிலோ குஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டுபிடிக்கபட்ட குஷ் போதைப்பொருள் சுமார் 60 மில்லியன் ரூபா பெறுமதி எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போதைப்பொருள் கனடாவிலிருந்து கணேமுல்ல பிரதேசத்திலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த பொதியின் உரிமையாளர் சார்பாக வந்த முகவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முதல் இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் 35 கிலோ ஹஷிஷும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் 10.5 கிலோ குஷ் போதைப் பொருளும் கண்டுபிடிக்கப்பட்டது.

ஐம்பது கிலோ சட்டவிரோத போதைப் பொருள் கடந்த மூன்று மாதங்களில் சுங்க பிரிவினரால் கைப்பற்றப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இவற்றில் குஷ் மற்றும் ஹஷிஷ் ஆகியவை அடங்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

## கிரிக்கெட் வழக்கின் மனு...

இம்மனுவை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அமர்விலிருந்து மற்றுமொரு நீதிபதி நேற்று (16) விலகினார். இந்த மனு, டி.என். சமரகோன் மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற குழு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த மனு மீதான விசாரணையிலிருந்து விலகுவதாக நீதிபதி நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.

இதன்படி, மனு விசாரணைக்கு புதிய நீதிபதிகள் குழு ஒன்றை பெயரிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், நிஷங்க பந்துல கருணாரத்னவுக்கு உரிய மனு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விசாரணையிலிருந்து இதுவரை 03 நீதிபதிகள் விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மனு மீதான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை (20) வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்

### (17. 11. 2023)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.



**ரிஷபம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.



**மிதுனம்:**
மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.



**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.



**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.



**கன்னி:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.



**துலாம்:**
நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.



**விருச்சிகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.



**தனுசு:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.



**மகரம்:**
உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.



**கும்பம்:**
லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.



**மீனம்:**
அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.



## மத வழிபாட்டுத் தலங்களுக்கு...

கஞ்சன விஜேசேக்கரவுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

இதுபற்றித் தெரிவித்த அவர் மத வழிபாட்டு தலங்களுக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் வழங்கும் திட்டத்தின் முதற்கட்ட பணிகளை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்ய முடியும்.

கதிர்காமம் உள்ளிட்ட பல்வேறு வழிபாட்டுத் தலங்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்க எதிர்ப்பார்த்துள்ளோம். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட உதவித் திட்டத்தின் கீழ், மத வழிபாட்டு தலங்களில் சூரிய சக்தி அமைப்புகளை நிறுவும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

## கூந்தல் அலங்கார மின்...

மூன்று வயது பிள்ளையின் தாயென தெரியவந்துள்ளது. இவர், தேசிய பயிலுநர் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையில் முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## விசாரணை நடத்துமாறு...

ஒரு மாணவி பலியானதுடன், ஐந்து மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து, விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜயவர்தனபுர வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் அங்கு ஏற்பட்ட அமைதியின்மையால், பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சம்பவத்தின் பின்னர் பெற்றோர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து பாடசாலையின் அதிபர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.இதையடுத்து, அதிபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நுகர்வோர் விவகார அதிகார...

சட்டவிரோத நடவடிக்கைகளுக்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. இவ்வருடம் ஜனவரி முதல் அக்டோபருக்கிடையில், இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் சுமார் 22,000 சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டதில் 19,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை கூறியுள்ளது. பொலன்னறுவை மற்றும் நுவரெலியா பிரதேசங்களில் (15) மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட பல சுற்றிவளைப்புக்களில், 04 இலட்சம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

## டுபாயிலிருந்து வந்தவரிடமிந்து...

கைது செய்யப்பட்டவர் கொழும்பு கொம்பனித் தெருவில் வசிக்கும் 32 வயது நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் நேற்று காலை 01.40 மணியளவில் துபாய் ஏர்லைன்ஸில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் பயணித்த விமானத்துக்குள் பிரவேசித்த அதிகாரிகாரிகள், அவரை கைது செய்தனர். சோதனையில் சுமார் 06 கிலோ 423 கிராம் மற்றும் 09 மில்லி கிராம் எடையுடைய தங்க ஜெல் 16 மாத்திரைகள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. இந்த தங்க ஜெல், ஆய்வறிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவரது கையடக்கத் தொலைபேசி தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையை பெற விமான நிலைய சுங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த அறிக்கைகள் விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு கிடைக்கும் வரை சந்தேக நபர், நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



'பலஸ்தீன விவகாரத்தில் உலகின் தோல்வியும்; கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களும்' எனும் தலைப்பில் முக்கிய உரைகளுடனான செயலமர்வு கொழும்பு தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் (15) நடைபெற்றது. இந்நிகழ்வில் பலஸ்தீன தூதுவர் ஹம்தல்லா உட்பட முன்னாள் தேசிய தகவல் அதிகாரி மொஹான் சமரநாயக்க, சமூக ஆர்வலர் மொஹமட், ஆகியோர் உரையாற்றுவதையும் சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன் மற்றும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படம் : அஷ்ரப் ஏ சமட்



| | | | |
|---|---|---|---|
| ජාතික ලොතරැයි මණ්ඩලය<br>தேசிய லொத்தர் சபை<br>National Lotteries Board | புதன் 2023.11.15 | உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk | NLB |

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5299 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,858,424.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 0 8 0 5 2 8

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3541 — சீட்டிழுப்பு திகதி 2023.11.15 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,539,009.60
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 29 55 63 69 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 02165

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1647 2023.11.15 — 57673 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 414,676,648.00
ஆங்கில எழுத்து N — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 28 45 75 80 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லக்கி 7 Lucky லக்க்** — திகதி 2023.11.15 — சீட்டிழுப்பு இலக்கம் 0125
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 1 6 2 5 2 0 — L7 இலக்கம் 1 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,037,742.40

**ராசி சுப பலன்** — திகதி 2023.11.15 — சீட்டிழுப்பு இலக்கம் 608 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,225,434.40
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 25 32 36 45 — தனயோக இலக்கம் 20032 — நாளுக்கான விதி எண் 21

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1329 2023.11.15 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,583,760.80
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 08 14 50 74 — விசேட எழுத்து E — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 39058

# முகவரியை மாற்றுதல்

## இலங்கை தொழில்சார் சமூக பணியாளர்களின் சங்கம்

**பன்னிப்பிட்டிய, கெந்தஹேனவத்த வீதி, இல. 46 என்னுமிடத்தில் நடத்திச் செல்லப்படும் என்பதை தயவுடன் தெரிவிக்கிறேன்.**

**செயலாளர்,
இலங்கை தொழில்சார் சமூக
பணியாளர்களின் சங்கம்**

## அடகு வைத்து மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல கிளைகளிலும் 2022 செப்டெம்பர் 01 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் பின்வருமாறு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| உத்தேச திகதியும் நேரமும் | இடம் |
|---|---|
| 2023 நவம்பர் 25<br>மு.ப. 10.00 | **வெள்ளவத்தை கிளைக் கட்டிடம்**<br>இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை.<br>**நீர்கொழும்பு கிளைக் கட்டிடம்**<br>இல. 454, பிரதான வீதி, நீர்கொழும்பு. |

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏதேனுமொன்றில் ஏல விற்பனையை நடத்தவும் ஏல விற்பனைகளை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்கவும் வங்கிக்கு உரிமை உள்ளது.

உதவி துணைத் தலைவர் - நுகர்வோர் சேவைகள்
DFCC வங்கி பி.எல்.சி.,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03.

0112 350000 www.dfcc.lk
DFCC வங்கி — உங்கள் வளர்ச்சிக்கு

# புத்தளத்தில் டெங்கு தீவிரம்;
# குழந்தையொன்று டெங்கினால் பலி

*(புத்தளம் தினகரன் நிருபர்)*

தற்போதைய சீரற்ற காலநிலையினால் புத்தளம் பிரதேசங்களிலும் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளதுடன் நேற்றைய தினம் (16) டெங்கு நோய் காரணமாக குழந்தை ஒன்று மரணித்துள்ளதாக புத்தளம் நகரசபை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நகரசபை செயலாளர் பிரீத்திகாவின் ஆலோசனைக்கமைய நகரசபை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

எனவே, டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அடையாளங் கண்டு அவற்றை அழிப்பதுடன் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்து உயிராபத்துக்களைத் தவிர்க்குமாறு நகரசபை நிர்வாகம் பொதுமக்களை வேண்டிக் கொள்கிறது.

மேலும் டெங்கு பரவும் அபாயகரமான சூழலை வைத்திருப்போருக்கெதிராக நகரசபையினால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் நகரசபை நிர்வாகம் அறிவித்துள்ளது.



மரம் நடுகை தினத்தையொட்டி நேற்று முன்தினம் (15) வெலிகம கப்புவத்தை அந்நூர் மகா வித்தியாலயத்தில் மரம் நடுகை நிகழ்வு மிக விமர்சையாக இடம் பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை வளாகத்தில் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், ஆகியோரின் பங்களிப்புடன் மரங்கள் நடுவதை படங்களில் காணலாம்.

படங்கள்: வெலிகம தினகரன் நிருபர்

### மேல் மாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ண போட்டி;
# களுத்துறை உள்ளூராட்சி பணிமனை அணி சாம்பியனாக தெரிவு



*(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)*

மேல் மாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியில் களுத்துறை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனை அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு ஆளுநர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. பத்தரமுல்ல புத்ததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த சுற்றுப் போட்டியில் மாகாண உள்ளூராட்சி மன்ற பிரிவுகளிலிருந்து 53 குழுக்கள் போட்டியில் களமிறங்கியமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டியில் கொழும்பு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனைக்கும் களுத்துறை உதவி ஆணையாளர் பணிமனை அணிக்குமிடையில் இடம்பெற்றது. இதில் களுத்துறை அணி ஆளுநர் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. களுத்துறை உதவி ஆணையாளர் பணிமனை அணியை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் கிரிக்கெட் வீரர்கள் பிரதிநிதித்துவம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

LE/RE/201

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி
## (HDFC வங்கி)

2011 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச்சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்.

**கடன் இலக்கம் : 301500000168**
**கடனாளியின் முழுப் பெயர் : போலந்த ஹக்குரு ருவன் தினேஷ் குணவர்தன**

காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் கே. வருணி இரேஷா என்பவரினால் 2021.12.20 ல் ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட **2993** ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், இதன் பிரகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக் கொண்ட கடனை வங்கிக்கு மீளச்செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடகுப்பத்திரத்தின்படி, எண்பத்து இரண்டு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று நாற்பத்து எட்டு ரூபா பத்து சதம் (ரூபா **8,224,148.10) 2023.08.31** ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. **கடன் இலக்கம் 301500000168**
   குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான அறுபத்து ஐந்து இலட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது ரூபா முப்பத்து ஆறு சதத்தினையும், (ரூபா **6,530,930.36)** 2023.08.31 ஆம் திகதி வரையிலான நிலுவையாக பதினாறு இலட்சத்து தொன்னூற்று மூவாயிரத்து இருநூற்று பதினேழு ரூபா எழுபத்து நான்கு சதத்தினையும் (ரூபா **1,693,217.74)** இதன்படி மொத்தமாக எண்பத்து இரண்டு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று நாற்பத்து எட்டு ரூபா பத்து சதத்தினையும் (ரூபா **8,224,148.10)**
2. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத அறுபத்து ஐந்து இலட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது ரூபா முப்பத்து ஆறு சதத்திற்காக, (ரூபா **6,530,930.36)** அறவீடு செய்ய வேண்டிய **15.00%** வீதமான வருடாந்த வட்டியினையும் 2023.09.01 ஆம் திகதியிலிருந்து ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும்.
3. 2023.09.01 திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான பதின் நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூற்று மூன்று ரூபா எழுபத்து நான்கு சதத்திற்காக (ரூபா **1,457,603.74)** மாதாந்தம் **2.00%** வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,
4. குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என (காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கடன் இலக்கம் : 301500000168**

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தோட்டை வலல்லாவிட்ட கோரளையில், கரந்தெனிய பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 41, வடக்கு மாகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாகல கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹவத்த காணியின் ஒன்றினைக்கப்பட்ட காணித்துண்டிலக்கம் B1 மற்றும் B2 என்ற காணிக்கு 2021 மார்ச் மாதம் 04 ஆம் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பீ.எச்.சீ. த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 139 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே: காணித்துண்டிலக்கம் B யின் ஒரு பகுதியும் கிழக்கே: ஊரகஸ்மங்கந்தியவில் இருந்து மஹ ஏதண்ட வரையிலான பிரதான வீதியும் தெற்கே: அதே காணியின் 2ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே: எச்.பீ. டி. சில்வா என்பவருக்கு சொந்தமான மகவத்த மற்றும் B என்ற இலக்க காணியின் மிகுதிப் பகுதியும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பத்து பேர்ச்சஸ்களாகும். (ஏக்.0- ரூட்.0 பே.10) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் எல்பிட்டிய காணிப்பதிவு காரியாலயத்தில் இலக்கம் J215/23 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தோட்டை வலல்லாவிட்ட கோரளையில், கரந்தெனிய பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 41, வடக்கு மாகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாகல கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹவத்த காணியின் ஒன்றினைக்கப்பட்ட காணித்துண்டிலக்கம் B1 மற்றும் B2 என்ற காணிக்கு 2021 மார்ச் மாதம் 04 ஆம் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பீ.எச்.சீ. த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 139 ஆம் இலக்கம் காணிவரைபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே: இதே காணித்துண்டின் 01 ஆம் இலக்க காணித்துண்டும் கிழக்கே: ஊரகஸ்மங்கந்தியவில் இருந்து மஹ ஏதண்ட வரையிலான பிரதான வீதியும் தெற்கே: இதே காணித்துண்டின் 03 ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே. எச்.பீ.டி. சில்வா என்பவருக்கு சொந்தமான மகவத்த மற்றும் இதே காணித்துண்டின் 01 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பத்து பேர்ச்சஸ்களாகும். (ஏக்.0- ரூட்.0 பே.10) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் எல்பிட்டிய காணிப்பதிவு காரியாலயத்தில் இலக்கம் J215/24 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தோட்டை வலலாவிட்ட கோரளையில், கரந்தெனிய பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 41, வடக்கு மாகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாகல கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹவத்த காணியின் ஒன்றினைக்கப்பட்ட காணித்துண்டிலக்கம் B1 மற்றும் B2 என்ற காணிக்கு 2021 மார்ச் மாதம் 04 ஆம் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பீ.எச்.சீ. த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 139 ஆம் இலக்கம் காணிவரைபடத்தின்படி 03 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே: இதே காணித்துண்டின் 02 ஆம் இலக்க காணித்துண்டும் கிழக்கே: ஊரகஸ்மங்கந்தியவில் இருந்து மஹ ஏதண்ட வரையிலான பிரதான வீதியும் தெற்கே: சுமித் ஹேவகே என்பவருக்கு சொந்தமான மஹவத்தையும் மேற்கே. எச்.பீ. டி. சில்வா என்பவருக்கு சொந்தமான மகவத்த மற்றும் இதே காணித்துண்டின் 02 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பத்து பேர்ச்சஸ்களாகும். (ஏக்.0- ரூட்.0 பே.10) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் எல்பிட்டிய காணிப்பதிவு காரியாலயத்தில் இலக்கம் J215/25என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
பொது முகாமையாளர்
திகதி 13.10.2023**

**இ. வீ.அ.நி.கூ. வங்கி
தே.வீ.அபி.அ. சபை கட்டிடம்
சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 2085, கொழும்பு 02.**

LE/RE/201

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி
## (HDFC வங்கி)

2011 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்.

**கடன்இலக்கம் : 401725000041, 401728000002 மற்றும் 401521000056**
**கடனாளியின் முழுப் பெயர் : ஹேவா புலுவன்னகே தரிந்து இரங்க மஹானாம**

எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் கே.பீ. அபேசூரிய என்பவரினால் **2018.07.16** திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 5538 ஆம் இலக்க அடகுப்பத்திரம் மற்றும் மற்றும் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் கே. வருனி இரேஷா என்பவரினால் **2019.10.16** திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 2791ஆம் இலக்க அடகுப் பத்திரங்களின் மூலம், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம். இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக்கொண்ட கடனை வங்கிக்கு மீளச்செலுத்த தவறியுள்ளதனால்,

மேற்குறிப்பிட்ட அடகுப்பத்திரத்தின்படி, எழுபத்து எட்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று பதினோரு ரூபா முப்பத்து ஆறு சதம் (ரூபா **7,820,611.36) 2023.08.31** ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. **முதலாவது கடன் தொகை 401725000041**
   குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகயான பதினாறு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பது ரூபா எண்பத்து ஆறு சதம் (ரூபா. **1,612,919.86.) 2023.08.31** ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள ஒரு இலட்சத்து எழுபத்து ஐயாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஒரு ரூபா எண்பத்து எட்டு சதத்தினையும் (ரூபா **175,971.88)** இதன்படி முழுத் தொகையான பதினேழு இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து எண்ணூற்று தொன்னூற்று ஒரு ரூபா எழுபத்து நான்கு சதத்தினையும் (ரூபா **1,788,891.74)**
   **இரண்டாவது கடன் தொகை 401728000002**
   குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான முப்பத்து ஏழு இலட்சத்து ஒன்பதாயிரத்து ஐந்நூற்று பதினேழு ரூபா எண்பத்து மூன்று சதம். (ரூபா. **3,709,517.83) 2023.08.31** ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள ஒன்பது இலட்சத்து எண்பத்து ஓராயித்து நாநூற்று தொன்னூற்று ஒன்பது ரூபா பன்னிரெண்டு சதத்தினையும் (ரூபா **981,499.12)** இதன்படி முழுத் தொகையான நாற்பத்து ஆறு இலட்சத்து தொன்னூற்று ஓராயிரத்து பதினாறு ரூபா தொன்னூற்று ஐந்து சதத்தினையும் (ரூபா **4,691,016.95)**
   **மூன்றாவது கடன் தொகை 401521000056**
   குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத **2023.08.31** ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள பதின்மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற்று இரண்டு ரூபா அறுபத்து ஏழு சதம் (ரூபா. **1,340,702.67)** ஆம் இதன்படி முழுத் தொகையான பதின்மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற்று இரண்டு ரூபா அறுபத்து ஏழு சதத்தினையும் (ரூபா. **1,340,702.67)** இதன்படி மூன்று கடன்களினதும் மொத்த கூட்டுத் தொகையான எழுபத்து எட்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று பதினோரு ரூபா முப்பத்து ஆறு சதத்தினையும் (ரூபா **7,820,611.36)**
2. குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான பதினாறு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பது ரூபா எண்பத்து ஆறு சதம் (ரூபா. **1,612,919.86)** சதத்திற்காக அறவிட வேண்டிய 16.75% வீத வருடாந்த வட்டியினையும், இரண்டாவது கடன் தொகையில் மீளச்செலுத்தாத தொகையான முப்பத்து ஏழு இலட்சத்து ஒன்பதாயிரத்து ஐந்நூற்று பதினேழு ரூபா எண்பத்து மூன்று சதத்திற்காக (ரூபா. **3,709,517.83)** அறவிட வேண்டிய 17.51% வீத வருடாந்த வட்டியினையும், **2023.09.01** ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏளத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,
3. **2023.09.01** ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடன்தொகையுடன் தொடர்புடைய கடன்களின் மீளச் செலுத்தப்படாத மொத்த தொகையான இருபத்து ஒரு இலட்சத்து அறுபதாயிரத்து தொள்ளாயிரத்து ஏழு ரூபா பன்னிரெண்டு (ரூபா **2,160,907.12)** சதத்திற்காக மாதாந்தம் 1.67% வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்கும்,
4. 2011 ஆம் ஆண்டின், 1ஆம் இலக்க மற்றும் 19ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

   அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 2011 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கடன் இலக்கம் : 401725000041, 401728000002, 401521000056**

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொலன்னகம் பத்துவவில், கொலன்ன கோரளையில், கொலன்னன பிரதேச சபை மற்றும் கொலன்ன பிரதேச செயலாலர் பிரிவில், இலக்கம் 205 கொன்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில், கொலன்ன கிராமத்தில் அமைந்துள்ள கொன்பெத்தேவேவத்த எனப்படும் "பொரொப்பேவத்த" என்ற காணிக்கு 2018 ஜனவரி 24 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர், கே.வீ.பீ.பி. கீர்த்திலால் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 20/2018 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 296D என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே பாதையும் அதே காணிவரைபடத்தின்படி 296B என்ற இலக்க காணித்துண்டும் கிழக்கே அதே காணிவரைபடத்தின்படி 296C என்ற இலக்க காணித்துண்டும் தெற்கே FVP 901ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி (அரசுக்கு சொந்தமான ஒரு காணித்துண்டு) 85 ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு ஒரு ரூட் இரண்டு தசம் ஆறு பூச்சியம் பேச்சஸ்களாகும் (ஏக். 0 ரூட் 01. பேச் 2.60).அல்லது பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஏழு எட்டு ஹெக்டயர்களாகும். இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக எம்பிலிப்பிட்டிய காணிப்பதிவு காரியாலயத்தில் **K48/109** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
பொது முகாமையாளர்
திகதி 2023.10.13**

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி
சேர். சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை
த.பெ.இல. 2085 கொழும்பு - 02**

# கிழக்கின் குரல்



## கல்முனை பாடசாலை சிற்றுண்டிசாலைகளில் சுகாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

பாடசாலை சிற்றுண்டிச் சாலைகளில் உணவுச் சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரச் சட்டங்கள் உள்ளிட்ட விதிமுறைகளை பேணுமாறும், உணவு தயாரிப்போர் சுகாதாரத்தை பேணுமாறும், உணவு விநியோகிக்கும் இடம் மற்றும் உணவுக்காக பயன்படுத்தும் பாத்திரங்களை சுத்தமாக வைத்திருக்குமாறும், அதிக எண்ணெய், அதிக சீனி, அதிக உப்புக் கொண்ட உணவு வகைகளை விற்பனை செய்வதை தவிர்க்குமாறும், சிற்றுண்டிச் சாலைகளின் உரிமையாளர்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



சுகாதாரச் சீர்கேடாக இயங்கும் சிற்றுண்டிச் சாலைகள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அச்சிற்றுண்டிச் சாலைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதுடன், எதிர்காலத்தில் இது தொடர்பாக ஆராய்வதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பாடசாலை சிற்றுண்டிச் சாலைகளில் சுகாதாரம் பேணப்படாமை மற்றும் மாணவர்களுக்கு போஷாக்கான உணவு வழங்கப்படாமை கண்டறியப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக கருத்தரங்கை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மூதூரில் கண்நோய் பரவல்

## அவதானமாக இருக்குமாறு மருத்துவர்கள் ஆலோசனை

**மூதூர் தினகரன் நிருபர்**

திருகோணமலை, மூதூர் பிரதேசத்தில் கண்நோய் மிகவும் தீவிரமாகப் பரவி வருவதால், அனைவரையும் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறு, மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

மூதூரில் முதியோர் மற்றும் சிறுவர்கள் மத்தியிலேயே கண்நோய் மிகத் தீவிரமாக பரவி வருவதுடன், பெரும்பாலானோர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கண்நோயால் பாதிக்கப்படுகின்றவர்கள் தத்தமது வீடுகளிலிருந்து உரிய சுகாதாரத்தை பேணுமாறு கேட்டுக்கொண்ட மருத்துவர்கள், வெளியில் நடமாடுவதை தவிர்த்து இந்நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுமாறும் தெரிவித்தனர்.



அத்துடன், இந்தக் கண்நோய் ஏற்பட்டு குறிப்பிட்ட சில நாட்களினுள் குணமடையுமென்பதால், கண்நோய் அறிகுறியுடைய நோயாளர்கள் தேவையற்ற மருந்துகளை மருத்துவர்களின் ஆலோசனையின்றி பாவிப்பதை தவிர்க்குமாறும் எதுவாயினும் மருத்துவர்களை நாடுமாறும், மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

## அக்கரைப்பற்றில் விசேட துஆ பிரார்த்தனை

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று ஸகாத் நிதியத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை (17) பிற்பகல் 3.45 மணிக்கு அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் விசேட துஆ பிரார்த்தனையுடன் 'எமது ஊரின் விவசாயத்தை வளப்படுத்துவோம்' எனும் தலைப்பில் விசேட உரை நிகழ்த்தப்படும்.

இதனைத் தொடர்ந்து, விருந்துபசாரமும் நடைபெறும். அக்கரைப்பற்று ஸகாத் நிதியத்தின் தலைவரும் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளருமான ஏ.எம்.றஹ்மத்துல்லா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அஷ்ஷேக் எஸ்.அப்துஸ் ஸமத்தின் துஆ பிரார்த்தனை நடைபெறும். பின்னர், பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹீர் விசேட உரையாற்றுவார்.

இதில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு, அக்கரைப்பற்று ஸகாத் நிதியம் அழைத்துள்ளது.

## ரயிலில் திரிபோஷா திருடிய மூவருக்கு விளக்கமறியல்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்புக்கு ரயிலில் கொண்டு வரப்பட்ட திரிபோஷா பக்கெட்டுகளை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை (14) உத்தரவிட்டது.

சுகாதார அமைச்சினுடைய தாய், சேய் நலன்புரித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு கொழும்பிலிருந்து ரயிலில் கொண்டு வரப்பட்ட திரிபோஷா பக்கெட்டுகளை இவர்கள் திருடி விற்பனை செய்துள்ளனர்.

1,413 திரிபோஷா பக்கெட்டுகள் கொண்ட 30 திரிபோஷா பக்கெட்டுகள் கொண்டு வரப்பட்ட நிலையில், 5 பக்கெட்டுகள் அடங்கிய 750 கிலோகிராம் நிறை கொண்ட 150 திரிபோஷா பக்கெட்டுகளை இச்சந்தேகநபர்கள் திருடியுள்ளனர்.



இந்நிலையில், மட்டக்களப்பைச் சேர்ந்த இச்சந்தேகநபர்களை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

கல்முனை சந்தை புனரமைப்பு;

## வர்த்தக சங்க பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல்

**கல்முனை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்**

கல்முனை பொதுச் சந்தையின் புனரமைப்பு நடவடிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல் கல்முனை மாநகர சபையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (14) மாலை நடைபெற்றது.



கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது, கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் தமது கருத்துகளை முன்வைத்தனர். கடைகளை நடத்தும் வர்த்தகர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், நிதி உதவியாளர் சசிகலா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கிண்ணியாவில் உலர் உணவு வழங்கல்



**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 31 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் கடந்த செவ்வாய்க்கிழமை (14) வழங்கி வைக்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி தலைமையில், கிண்ணியா ரஹ்மானியா கிராம அலுவலர் கட்டடத்தில் பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. உலக உணவுத் திட்டத்தின் செயற்றிட்டத்துக்கமைய, முதற்கட்டமாக ரஹ்மானியா நகர் மற்றும் சின்னக் கிண்ணியா கிராம அலுவலர் பிரிவுகளில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொருட்கள் கிண்ணியா பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தினூடாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 'கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் இடம்'

பேத்தாழையில் கலந்துரையாடல்

**பாசிக்குடா நிருபர்**

'கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் இடம்' எனும் தொனிப்பொருளின் கீழ் ஏ.எச்.ஆர்.சி.எனும் அரசசார்பற்ற நிறுவனத்தால் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை (16) பேத்தாழை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் உள்ளூர் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், உள்ளூராட்சிசபை உத்தியோகத்தர்கள் ஆகிய பங்குதாரர்களை ஒன்றிணைத்து இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதுடன், உறவை வலுப்படுத்துவதன் மூலம் உண்மைத்தன்மை, வெளிப்பாட்டுத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் எனும் விடயங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.



அத்துடன் கோறளைப்பற்று பிரதேச சபையால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள், மக்கள் சேவைப் பணிகள், நாளாந்தம் பொதுமக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

'கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் இடம்' எனும் கலந்துரையாடலை ஒவ்வொரு 45 நாட்களுக்கு ஒருமுறை ஜனநாயக பங்குதாரர்களை ஒன்றிணைத்து நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் இசைதீன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஹாரூன், கோறளைப்பற்று பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் எஸ்.வசந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தம்பலகாமத்தில்

## போதைப்பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்வொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (16) நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையிலும் கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் இயங்கும் பிராந்திய சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடுவதற்கான உளவளத்துணை செயற்பாடுகள் மற்றும் உடல், உள ரீதியான தாக்கம், இதனால் ஏற்படும் சமூகச் சீர்கேடு போன்றவை தொடர்பாக வளவாளர்கள் விளக்கமளித்தனர்.

கப்பல்துறை ஆயுர்வேத மருத்துவமனையின் சிரேஷ்ட பதிவாளரும் மருத்துவருமான சாஸ்வதா சிவபதிஸ், மருத்துவர் ஆர்.எம்.மல்சா ஜெயரட்ண ஆகிய வளவாளர்களே விளக்கமளித்தனர்.



இலங்கை அதிபர் சேவை தரம் மூன்றுக்கு நியமனம் பெற்ற அதிபர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையில் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் தலைமையிலும் பட்டிருப்பு கல்வி வலய அதிபர் சேவை சங்கத்தின் அனுசரணையிலும் அண்மையில் நடைபெற்றது. பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து அதிபர் சேவை பரீட்சைக்கு தோற்றியவர்களில் 21 பேர் அதிபர் சேவை தரம் மூன்றுக்கு நியமனம் பெற்றுள்ளனர். (படம்:பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

## 'உறவுகள் சொல்லும் உணர்வு' சிறுகதை நூல் அறிமுக விழா

**அன்புவழிபுரம் தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**

கதிர். திருச்செல்வத்தின் 'உறவுகள் சொல்லும் உணர்வு' சிறுகதை நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் புதன்கிழமை (15) மாலை கவிஞர் க.யோகானந்தன் தலைமையில் திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் கலந்து கொண்டு, நூலின் முதல் பிரதியை அதிபர் யு.சுஜந்தினிக்கு வழங்கி வைத்தார்.

நூல் அறிமுகத்தை மாகாண கல்வி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் ஏ.சி.எம்.முஸ்ஸில் நிகழ்த்தியதுடன், நூல் திறனாய்வை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறை பேராசிரியர் அ.ப.மு. அஸ்ஃரப் நிகழ்த்தினார்.

ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் கதிர் திருச்செல்வம் நிகழ்த்தினார்.

காரைதீவில்

## வேப்பம் கன்றுகள், பனம் விதைகள் நடும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

அம்பாறை, காரைதீவு கடற்கரைப் பிரதேசத்தில் பனம் விதைகள் மற்றும் வேப்பம் கன்றுகளை நடும் வேலைத்திட்டமொன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை நகர லயன்ஸ் கழகமும் காரைதீவு லயன்ஸ் கழகமும் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து ஐயாயிரம் பனம் விதைகள் மற்றும் ஐயாயிரம் வேப்பம் கன்றுகள் நடும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருவதன் ஓரங்கமாகவே, காரைதீவில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பனம் விதைகள் மற்றும் வேப்பம் கன்றுகளை நடுதல், கடற்கரையை சுத்தப்படுத்துதல், டெங்கு விழிப்புணர்வு பதாகையை காட்சிப்படுத்துதல், டெங்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல் ஆகியவற்றை உள்ளிடக்கிய இந்த வேலைத்திட்ட நிகழ்வில் பிரதம அதிதியாக சர்வதேச லயன்ஸ் மாவட்ட ஆளுநர் லயன் இஸ்மத் ஹமீத் கலந்துகொண்டார்.



அம்பாறை மாவட்டத்திலுள்ள சிறுவர்களை ஒன்றிணைத்து பொத்துவில், தாண்டியடிக் கடற்கரைப் பிரதேசத்தில் பட்டம் ஏற்றும் பொழுதுபோக்கு நிகழ்வொன்றை அம்பாறை ஸ்ரீலங்கா யுனைட்ஸ் செயற்பாட்டு மையம் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. சிறுவர்களை மகிழ்ச்சிகரமான சூழலில் வைத்திருக்கும் நோக்கிலேயே இந்த நிகழ்வை அம்பாறை ஸ்ரீலங்கா யுனைட்ஸ் செயற்பாட்டு மையம் நடத்தியது. இதில் சிறுவர்கள் பலர் கலந்துகொண்டு, ஸ்ரீலங்கா யுனைட்ஸ் செயற்பாட்டாளர்களுடன் தமது பொழுதை மகிழ்ச்சிகரமாக கழித்தனர். (படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## காத்தான்குடி ஸாவியா பாடசாலையில் சிறுவர் சந்தை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி ஸாவியா வித்தியாலயத்தில் சிறுவர் சந்தை நேற்று முன்தினம் புதன்கிழமை (15) நடைபெற்றதுடன், காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.எம்.ஹக்கீம் கலந்துகொண்டு சிறுவர் சந்தை வியாபாரத்தை ஆரம்பித்து வைத்தார். பாடசாலை மாணவர்கள் வர்த்தக நடவடிக்கையை மேற்கொண்டதுடன், பெற்றோர் மற்றும் பொது மக்கள் பொருட்களை கொள்வனவு செய்தனர்.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.முகம்மட் முஜீப் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்பக் கல்விக்கான ஆசிரிய ஆலோசகர் தஸ்லீமா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தொழில் தகைமைகளை பெற்றுக்கொண்டால் மாத்திரமே தொழில் வாய்ப்பை பெறமுடியும்

## வட மாகாண ஆளுநர் சார்ள்ஸ்





**(யாழ்ப்பாண குறூப், சாவகச்சேரி நிருபர்கள்)**

தொழில் தகைமைகளை பெற்றுக்கொண்டால் மாத்திரமே இலகுவில் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் மனைபொருளியல், ஆடை வடிவமைப்பு கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் யாழ்.சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பாடசாலை இடைவிலகல்கள் அதிகரிப்பதை காண்கின்றோம். வடக்கு மாகாணத்தில் 611 மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளதாக தெரியவருகின்றது.

இதேபோன்று கா.பொ.த சாதாரண தர பரீட்சை, கா.பொ.த உயர்தர பரீட்சை ஆகியவற்றில், சித்தியடையாத மாணவர்கள், பல்கலைக்கழக கல்வியை பெற முடியாதவர்கள் என பலர் வருடாந்தம் வேலைவாய்ப்பற்ற இளைஞர் தொகைக்குள் உள்ளடக்குகின்றனர்.

வடக்கு மாகாணத்தில், தங்களுடைய பிள்ளைகள் பொறியியலாளராக அல்லது வைத்தியராக வர வேண்டும் என பெற்றோர் கனவு காண்கின்றனர்.

அந்தக் கனவு தவறு என்றோ, குறை கூறவோ வில்லை. ஆனால் அதை எட்ட முடியாதவர்கள் அடுத்த கட்டமாக தங்களுடைய வாழ்க்கைக்கு தேவையான தொழில் தகைமைகளை பெற்றுக் கொள்வதற்கான வழியை நோக்கி பயணிக்க வேண்டும்.

அரசாங்கம் தொழில்நுட்ப கல்லூரிகளின் ஊடாக, கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக NVQ என்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தொழில் தகைமை என்பதற்கும் கல்வித் தகைமை என்பதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது.

நாங்கள் பல்கலைக்கழகங்களிலே பெற்றுக் கொள்ளுகின்ற பட்டங்கள் அனைத்தும் எங்களுக்கு தொழில் தகைமைகளை தருவதில்லை, அவற்றில் பெரும்பாலானவை கல்வித்தகைமை மட்டும் என அவர் தெரிவித்தார்.

# அமைச்சர் டக்ளஸ் – செல்வம் எம்.பி சந்தித்து கலந்துரையாடல்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடலொன்று அண்மையில் கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.

மன்னார் கோந்தைப்பிட்டிப் மீன்பிடி இறங்குதுறை , மன்னாரில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுபவர்களுக்கான அனுமதிகள் போன்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இறங்குதுறைப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் தடைகளின்றி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியதுடன், கடலட்டை பிடிப்பில் ஈடுபடுவதற்கான அனுமதி தொடர்பாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடுமாறும் தெரிவித்தார்.

# தமிழகத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் நாடு திரும்பிய மூவர் கைது

**(பருத்தித்துறை, யாழ்.விசேட நிருபர்கள்)**

தமிழகத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பிய யாழ்ப்பாணம், குடத்தனையைச் சேர்ந்த மூவரின் விளக்கமறியல் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

போர் காரணமாக குடத்தனை வடக்கைச் சேர்ந்த சின்னராஜா நாகேஸ்வரி , அவரது மகளான சின்னராஜா சுதர்சினி, மகனான சின்னராஜா சுதாகரன் ஆகியோர் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

33 வருடங்களின் பின்னர் மீண்டும் படகு மூலமாக தாயகம் திரும்பி குடத்தனை பகுதியிலுள்ள உறவினர் வீடொன்றில் தங்கியிருந்த போதே பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் மறுநாள் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் இவ்வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மூவரையும் மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# பாடசாலை மாணவர்கள் பாலியல் துஷ்பிரயோகம்

## முல்லைத்தீவில் ஆசிரியர் கைது

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு நெட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டியன்குளம் பகுதியில் தனியார் வகுப்பு ஆசிரியயொருவர் பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பாண்டியன்குளம் பிரதேசத்தில் கணிதபாடத்தில் சிறப்பு தேர்ச்சிப் பெற்ற ஆசிரியர் மாணவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதனால் 6 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. கடந்த ஒருவருடகாலமாக இவ்வாறு ஆசிரியர் நடந்துகொண்டுள்ளமை விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவன் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளானமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் ஆசிரியர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுதொடர்பிலான சட்டவைத்திய பரிசோதனை மற்றும் முதற்கட்ட விசாரணைகள் என்பன தற்போது இடம்பெற்று வருவதாக தெரியவருகின்றது.

# வடக்கின் உதயம்

# வவுனியாவில் சட்டவிரோத மாடு கடத்தல் முறியடிப்பு – இருவர் கைது

**(வவுனியா விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்)**



வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லப்பட்ட மாடுகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை 5 மணியளவில் மடுக்கந்தை பகுதியிலிருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சிறியரக லொறியொன்றை விசேட அதிரடிப் படையினர் வழிமறித்து சோதனைக்குட்படுத்திய போதே அதிலிருந்து சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட மாடுகள் மீட்கப்பட்டுள்ளன. இதனையடுத்து, வாகனத்தில் இருந்தவர்களை கைது செய்த விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர்களை வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அத்துடன் வாகனத்திலிருந்து 8 பசு மாடுகள் உட்பட 14 மாடுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், அவற்றை கடத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறியும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்தப்படவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# தமிழகத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் நாடு திரும்பிய மூவர் கைது

**(பருத்தித்துறை, யாழ்.விசேட நிருபர்கள்)**

தமிழகத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பிய யாழ்ப்பாணம், குடத்தனையைச் சேர்ந்த மூவரின் விளக்கமறியல் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

போர் காரணமாக குடத்தனை வடக்கைச் சேர்ந்த சின்னராஜா நாகேஸ்வரி , அவரது மகளான சின்னராஜா சுதர்சினி, மகனான சின்னராஜா சுதாகரன் ஆகியோர் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

33 வருடங்களின் பின்னர் மீண்டும் படகு மூலமாக தாயகம் திரும்பி குடத்தனை பகுதியிலுள்ள உறவினர் வீடொன்றில் தங்கியிருந்த போதே பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் மறுநாள் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் இவ்வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மூவரையும் மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.




வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லையம்பதி அலங்கார கந்தன் தேவஸ்தானத்தில் இரண்டாம் நாள் உற்சவ பூஜைகள் நேற்றுமுன்தினம் (15) சிறப்பாக இடம்பெற்றது. கந்த சஷ்டி விரத இரண்டாவது நாள் உற்சவத்தில் அலங்காரக்கந்தன் உள்வீதியூடாக இடவாகனத்தில் வீற்றிருந்து காட்சியளித்தார். மழை வெள்ளத்திலும் அடியவர்கள் கந்தனை தரிசிக்க கூட்டம் கூட்டமாக வந்து அருள்பெற்றனர். (படம்; கோப்பாய் குறூப் நிருபர்)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 160 குடும்பங்கள் இதுவரை மீள்குடியேற்றப்படவில்லை

## ஜனாதிபதி செயலகத்தின் வட மாகாண மேலதிக செயலாளர்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி மாவட்டத்தில் 160 வரையான குடும்பங்கள், மீள்குடியேற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு மாகாண மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி,பூநகரி, ஆகிய நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் இதுவரை 49ஆயிரத்து 950 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 288 பேர் இதுவரை மீள் குடியேறியுள்ளனர்.

இந்நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட முகமாலை மற்றும் கிளாலி ஆகிய பிரதேசங்களில் வெடிபொருட்கள் அகற்றப்படாத காரணத்தினால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இதுவரை மீள்குடியேற்றப்படவில்லை என தெரியவருகின்றது. சுமார் 27 வருடங்களுக்கு மேலாக இவர்கள் வாடகை வீடுகளிலும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அதாவது யுத்த சூனிய பிரதேசமாக கருதப்படும் முகமாலை தெற்கு (மடத்தடி), அம்பளாவளை , இந்திராபுரத்தின் ஒருபகுதி, கிளாலி சுடலைப்பிட்டி ஆகிய கிராமங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் வெடிபொருட்கள் நிறைந்த ஆபத்தான பகுதிகளாக காணப்படுகின்றன.

இப்பிரதேசங்களில் வெடிபொருள் அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் அவை சவால் நிறைந்த பகுதியாகவே காணப்படுவதாக கண்ணிவெடியகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் தன்னார்வ அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு வெடிபொருள் அச்சம் காரணமாக 160 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், மீள்குடியேற முடியாத நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில்

# பொலித்தீன் விழிப்புணர்வு பேரணி



**(கோப்பாய் குறூப் நிருபர்)**

யாழ்.மாவட்டத்தில் பொலித்தீன் பாவனை தொடர்பான சட்ட ஒழுங்குவிதிகள் பற்றிய விழிப்புணர்வு பேரணி சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தின் பிரதி பணிப்பாளர் து.சுபோகரன் தலைமையில் நேற்று (16) யாழில் இடம்பெற்றது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொலித்தீன், பிளாஸ்டிக் விற்பனையாளருக்கான பொலித்தீன் பாவனை தொடர்பான சட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டப்பட்டது.

இந்நிகழ்வில், யாழ்.திருக்குடும்ப கன்னியர் தேசிய பாடசாலையின் சுற்றாடல் முன்னோடி மாணவர்கள், பொறுப்பாசிரியர்கள், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கில் 1169 பேர் சுயதொழில் முயற்சியாளராக உருவாகியுள்ளனர்

## வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர்

**(யாழ். விசேட நிருபர்)**



வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இதுவரை 3127 யுவதிகள் மனைப்பொருளியல் கற்கைநெறியை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளதாகவும் அவர்களில் 1169 பேர் சுயதொழில் முயற்சியாளர்களாக உருவாகியுள்ளதாகவும் வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் இ.சசீலன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் மனைப்பொருளியல் கற்கைநெறியின் ஆடை வடிவமைப்பிற்கான தேசிய தொழில் தகைமை 4 ஆம் தரத்தில் சித்திப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு முதல், 3127 யுவதிகள் மனைப்பொருளியல் கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர்.

இவர்களில் 1169 பேர் சுயதொழில் முயற்சியாளர்களாக வடமாகாணத்தில் உருவாக்கியுள்ளனர்.

இவ்வருடம் 398 பேரில் தேசிய தொழில் தகைமை 4 ஆம் தரத்தில் சித்திப் பெற்ற 302 பேர் நேற்றைய தினம் தங்களுக்குரிய சான்றிதழை பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் பிரதேச மட்டத்தில் வரவேற்பை பெற்றுள்ளது. சிறந்த தொழில் முயற்சியாளர்களாக இன்று பல யுவதிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றார்கள்.

கொவிட் நெருக்கடியால் கடந்த காலங்களில், சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெறவில்லை.

அத்துடன் கடந்த இரண்டு வருடங்களாக சவாலுக்கு மத்தியில் பயிற்சி நெறிகளை கொண்டு நடாத்தினோம்.

இந்த மாணவிகளுக்கான உதவிக் கொடுப்பனவு கூட எமக்கு சவாலாக அமைந்தது. இருந்தும் எம்மால் தொடர்ச்சியாக முன்னெடுக்கமுடிந்தது. எதிர்காலத்தில் மேலும் இப்பாடநெறியின் செயற்பாட்டை அதிகரிக்க நாம் உதவுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு குருதிப்பரிசோதனை

**(பரந்தன் குறூப் நிருபர்)**



முல்லைத்தீவு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு குருதிப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மாதாந்த கிளினிக் சிகிச்சைகளுக்கு வருகை தரும் நோயாளர்களுக்கு நீரிழிவு தொடர்பான விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் குருதியில் குளுக்கோஸ் அளவு தொடர்பான குருதிப்பரிசோதனை என்பனவும் மேற்கொள்ளப்பட்டது.

# பழமையான மரம் முறிந்து விழுந்தது

**(யாழ்.விசேட நிருபர்)**



யாழ்.நகரில் நூற்றாண்டு கால பழமையான மரமொன்று சீரற்ற காலநிலை காரணமாக நேற்றுமுன்தினம் முறிந்து விழுந்தது.

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக வீதியோரமாகவிருந்த மலைவேம்பு மரமே இவ்வாறு முறிந்து விழுந்தது.

மரம் வீதிக்கு குறுக்காக விழாமல் வெற்றுக் காணிக்குள் விழுந்ததால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அண்மைக்காலமாக நாடளாவியரீதியில் வீதியோரமாக உள்ள மரங்கள் முறிந்து விழுகின்றமையால் இதுதொடர்பில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அக்குறணை மள்வானஹின்ன பிரதேசத்தில்

# கணினி கற்கை நிலையம் திறந்து வைப்பு

Smart Village
Malwanahinna



## தொழிலதிபர் நவாஸுக்கு பாடசாலை சமூகம் பாராட்டு

## முக்கிய பிரமுகர்களும் விழாவில் பங்கேற்பு

அக்குறணை மள்வானஹின்ன பிரதேச பாடசாலைப் பிள்ளைகளின் நலன்கருதி மள்வானஹின்ன ஜும்ஆப் பள்ளிவாசல் கட்டடத்தில் அமைந்துள்ள கணினி தொழில்நுட்ப கற்கை நிலைய திறப்பு விழா மற்றும் விசேட வைபவம் ஆகியன மள்வானஹின்ன பாடசாலை மண்டபத்தில் பிரதேச செயற்கை நுண்ணறிவு கிராமத்தலைவரும் தொழிலதிபருமான டி. எல். எம். நவாஸ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம் றிஸ்வி முப்தி மேற்படி கற்கை நிலையத்தை மாணவர்களின் பயன்பாட்டுக்காக வைபவரீதியாக திறந்து வைத்தார்.

இதில் சப்ரகமுவ பல்கலைக்கழகப் பேராசிரியர் எம்.எஸ்.எம். அஸ்லம், கொழும்பு பல்கலைக்கழக சட்டத் துறை சிரேட்ட விரிவுரையாளர் கலாநிதி சாமிலா தாவூத், முஸ்லிம் எயிட் பணிப்பாளர் எம்.சி. பைஸர் கான், பாடசாலை அதிபர் இம்ரான், ஆசிரியர், பெற்றோர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

**மள்வானஹின்ன செயற்கை நுண்ணறிவுக் கிராமத்தின் தலைவர் தொழிலதிபர் டி. எல். எம். நவாஸ் தனது தலைமையுரையில்;**

இக்கிராமத்தை ஒரு நுண்ணறிவு கிராமமாக மாற்றியமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் கடந்த நான்கு வருடங்களாக பல வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். இத்திட்டதின் மூலம் ஐந்து செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. முதலாவது இப்பிரதேசத்தின் தகவல்களைச் சேகரித்தல், பிரதேசத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், கல்வி மற்றும் விளையாட்டுத் துறையில் விருத்தியை ஏற்படுத்தல், பிரதேசத்தின் சுற்றுச் சூழலை அழகாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளல் போன்ற திட்டத்தின் கீழ் பொதுச் சிரமதானங்கள், சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வூட்டும் விளம்பரப் பதாகைகள் காட்சிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல், இறுதியாக வளங்களை அபிவிருத்தி செய்தலும், ஸகாத்தையும் ஒழுங்கான முறையில் நிர்வகித்தல் போன்ற முக்கியமான செயற்பாடுகள் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், எமது பிரதேச மாணவர்களின் மூன்றாம் நிலைக் கல்வியைக் கருத்திற் கொண்டு கணினி தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கான பயிற்சி கூடத்தை இன்று நாம் திறந்து வைத்துள்ளோம்.

விசேடமாக மள்வானஹின்ன முஸ்லிம் பாடசாலை என் தந்தை படித்த பாடசாலையாகும். நானும் அங்கு ஓரிரு வகுப்புக்கள் படித்துள்ளேன். இன்று இப் பாடசாலைக்கு சிறந்த அதிபரொருவர் கிடைத்திருக்கிறார். இப்பாடசாலையின் மேலதிக தேவையைக் கருத்திற் கொண்டு மூன்று மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியை விரைவில் நிர்மாணித்துக் கொடுக்கவுள்ளேன் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையில் கட்டட வளங்களை பெற்றுக் கொள்வது மாத்திரமல்ல, எதிர்காலத்தில் பிள்ளைகளிடத்தில் இருந்து நல்ல அறுவடைகளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இந்த ஊரைப் பொறுத்தவரையில், இந்த ஊரின் முன்னேற்றத்திற்காக பள்ளி நிர்வாகிகளும், ஊர் பிரமுகர்களும், அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஹுதா பள்ளிவாசலின் தலைவர் எஸ்.எச்.எம். பாயிஸ், மள்வானஹின்ன பள்ளிவாசல் தலைவர் நௌஷாட் ஹாஜியார் மற்றும் சாலிஹீன் பள்ளிவாசல் மௌலவி எஸ். எம். எம். பாயிஸ் ஆகியோர்களுடைய பங்களிப்பு மகத்தானதாகும்.

ஒவ்வொரு வாரமும் இந்தப் பிரதேசத்தில் ஏதாவது சமூகம் சார்ந்த விழிப்புணர்வூட்டல் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது உண்மையிலே வரவேற்கத்தக்க விடயம். ஆனால் அக்குறணையில் இப்படியான நிகழ்வுகளைக் காண்பது குறைவு.

மள்வானஹின்ன பிரதேசத்தின் நலனின் மேம்பாட்டுக்காக யார் யாரெல்லாம் தொடர்பு இல்லாமல் இருக்கின்றார்களோ அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்பட முன்வர வேண்டும். இளைஞர்களும் இணைந்து செயற்பட வேண்டும். அத்துடன் கணினி தொழில்நுட்ப கற்கை நிலையத்தை இங்கு கொண்டு வருவதற்கு அயராது பாடுபட்ட பைஸர் கான் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தப்



பிள்ளைகளுக்கு கற்றலை ஏற்படுத்திக் கொடுப்பது மட்டுமல்ல சர்வதேச சந்தையில் தொழில் வாய்ப்பினையும் பெற்றுக் கொடுக்கவுள்ளோம்.

சர்வதேச தகவல் தொடர்புகளை உள்ளடக்கிய அமைப்புக்களோடு இணைந்து தான் இந்தக் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அமெரிக்கா டொலரின் மூலம் ஊருக்குள் பெருந் தொகையிலான வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு






பிள்ளைக்கு சுமார் ரூபா 500 அமெரிக்க டொலர் சம்பளம் கிடைக்குமாயின் ஒரு மில்லியன் ரூபா அமெரிக்க டொலர் வருமானத்தை எமது பிரதேசத்திலுள்ள 100 பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. எனவே எமது பிள்ளைகள் நேரத்தை விணாக்காது கற்கை நெறியில் பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி உரையாற்றுகையில்;**

செயற்கை நுண்ணறிவு கிராமத்தின் தலைவர் தொழிலதிபர் நவாஸ் ஹாஜியாரைப் பொறுத்தவரையில் தகவல் தொழில் நுட்பத் துறையில் மிகுந்த நாட்டம் உடையவர் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

1976 இல் இந்த நாட்டில் தகவல் தொழில் நுட்பம் பற்றி யாரும் கவனத்தில் கொள்ளவில்லை. ஆனால் நவாஸ் ஹாஜியார் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில் நுட்பத் துறையில் ஒரு விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார். இவருக்கு இதன் பெறுமதி என்ன, பயன்பாடுகள் என்ன என்பது நன்கு தெரியும். தன் தந்தையும் தானும் கற்ற பாடசாலைக்கும் தம் பிரதேசத்திலுள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக கணினி தொழில்நுட்பக் கல்வியை வழங்கியமை மனதிற்கு சந்தோசத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியின் 50ஆவது முஸ்லிம் மஜ்லிஸின் ஆண்டு தினத்தை முன்னிட்டு பாடசாலையில் மாணவர்களின் பெரிய கலை கலாசார விழா இடம்பெற்றது. அதற்கு என்னை பிரதம அதிதியாக அழைத்திருந்தார்கள். அது என்னுடைய வாழ்க்கையில் சந்தோசமாக இருந்தது. ஏனென்றால் நான் கற்ற பாடசாலைக்குச் செல்வது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நவாஸ் ஹாஜியார் தன்னுடைய நீண்ட கனவை நனவாக்குவதற்கு தன்னுடைய ஊரையும் பாடசாலையினையும் தெரிவு செய்து ஒரு முன்மாதிரியான வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளமையினை இட்டு நாம் எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

ஒரு கிராமம் ஈமானையும் இறையச்சத்தையும் கடைப்பிடித்தால் நாம் வாழும் பூமியினுடைய அருள் இறைவனால் திறந்து விடப்படும். நபி (ஸல்) அவர்கள் மதீனா நகரை ஒரு முன்மாதிரிமிக்க நகரமாக மாற்றினார்கள். மதீனாவில் உருவாக்கப்பட்ட வடிவமைப்பை போன்று வேறு எந்த உலக நாட்டிலும் உருவாக்கப்படவில்லை. நபி (ஸல்) அவர்கள் இறையச்சமிக்க ஒரு முன்மாதிரியான நகரத்தை உருவாக்குவதில் அதிலும் பன்முக கலாசாரம், பன்முக மொழி, பன்முக வகுப்புக்கள் உள்ள மக்களை உருவாக்குவதில்தான் நபி (ஸல்) அவர்களுடைய திட்டங்கள் இருந்தன.

வீரமந்திரி எழுதிய புத்தகத்தை நாம் எல்லோரும் வாசிக்க வேண்டும். அப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பை வெளியிடுவதற்கு நவாஸ் ஹாஜியார் பங்களிப்புச் செய்துள்ளார். எமது முஸ்லிம் புத்திஜீவிகள் செய்யாத பங்களிப்பை அவர் எமது முஸ்லிம் சமூகத்திற்குச் செய்துள்ளார். அவர் எமது சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்காக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை விருது வழங்கி கௌரவித்துள்ளது. மக்களை மதிப்பது நபி (ஸல்) அவர்களது வழிகாட்டுதல் ஆகும்.

இப்பாடசாலைக்கு மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்தை வழங்கவுள்ளதாக நவாஸ் ஹாஜியார் கூறினார்கள். உண்மையிலே இப்படியான நல்ல காரியங்களைச் செய்பவர்களுக்குத்தான் அல்லாஹ் மென்மேலும் பரக்கத்துகளை வழங்கிக் கொண்டு இருக்கின்றான். அவர் கல்விக்காக ஆற்றுகின்ற பணி அளப்பரியது, பாராட்டத்தக்கது.

ஒரு கிராமத்தை முன்னேற்ற வேண்டும் என்றால் முதலில் அதன் தகவல்களைத் திரட்ட வேண்டும். ஊரில் எத்தனை விதவைகள், எத்தனை அநாதைப் பிள்ளைகள் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அது தெரியாமல் செய்ய முடியாது. அதற்கான பயிற்சிகளை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை வழங்கி வருகின்றது. உலமாக்கள் இந்தியாவுக்குச் சென்று செயற்பாட்டு ரீதியிலான பயிற்சிகளை பெற்று வந்துள்ளார்கள். மக்தப் பாடநெறிக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் மக்தப் மாணவர்களினால் மிகவும் முன்மாதிரியான கண்காட்சியினை ஒழுங்கு செய்திருந்தார்கள். அதில் இஸ்லாமிய பாரம்பரிய கலை கலாசார அம்சங்களுடன் கூடிய விடயங்கள் பிள்ளைகளினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததையும் ஷெய்க் ரிஸ்வி முப்தி இதன்போது ஞாபகப்படுத்தினார்.

**கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிலா தாவூத் உரையாற்றும் போது;**

நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் அக்குறணையிலாகும். இந்த இடத்திற்கு வந்த சமயம் என்னுடைய பாடசாலைக் காலம் என்ன மாதிரி அமைந்தது என்பது பற்றி பழைய நினைவலைகளை நான் மீட்டிப் பார்த்தேன். அக்குறணையில் நவாஸ் ஹாஜியார் என்றால் தெரியாதவர்கள் யாரும் இல்லை. அக்குறணை சாஹிராக் கல்லூரிக்கு பிரதம அதிதியாக வருகை தந்திருந்தார். நான் அங்கு பத்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தேன். அன்றுதான் முதன் முதலில் நவாஸ் ஹாஜியாருடைய உரையினைக் கேட்டேன். அவர் முதலில் அந்தப் பாடசாலைக்கு நூலகம் ஒன்றை நிர்மாணித்துத் தருகின்றேன் என்று கூறினார். அக்குறணையின் கல்வி வளர்ச்சிக்கு அவர் அன்று முதல் இற்றைவரைக்கும் ஆற்றி வருகின்ற அளப்பரிய சேவை எம்மால் மதிப்பீடு செய்ய முடியாது.

செயற்கை நுண்ணறிவுக் கிராமம் பற்றிச் சொல்வதானால் இங்குள்ள தனவந்தர்கள், புத்திஜீவிகள், பள்ளிவாசல்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்படுவார்களாயின் நிறைய சேவைகளை ஊரின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளலாம். அதற்கு ஒரு முன்மாதிரிமிக்க கிராமமாக மள்வானஹின்ன கிராமத்தை நான் பார்க்கின்றேன். இந்த கணினி தகவல் கற்கை நிலையத்தில் கல்வியினை மேற்கொள்வதற்காக 106 பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு பிள்ளைகளிடத்திலும் இருக்க வேண்டியது பண்பு திறந்த மனப்பாங்கும் சிறந்த சிந்தனையுமாகும். இப்படியான வசதியான வளங்கள் வழங்கப்படுமாக இருந்தால் இந்த வளத்தை என்னுடைய வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றேன். அதை எப்படித் திருப்பிக் கொடுக்கப் போகின்றேன் என்பதுதான் திறந்த மனப்பாங்காகும். திறந்த மனப்பாங்கு இருந்தால் சிறந்த சிந்தனை இருக்கும். என்னென்ன இலவசமாக வழங்கப்படுகிறதோ அதில் நிறைய மதிப்புக்கள் இருக்கின்றன. ஆனால் அவை இலவசமாகக் கிடைக்குமாயின் அதன் பெறுமதியை மறந்து விடுவோம். இலவசமாகப் பெற்றுக் கொண்டதை மீளவும் அதனை எந்த வகையில் திருப்பிக் கொடுக்க முடியுமோ அந்த வகையில் திரும்பிக் கொடுக்க நாம் தயாராக இருக்க வேண்டும். அந்த வகையில் திருப்பிக் கொடுப்பதாக இருந்தால் இந்த கற்கை நெறியினைத் திறம்படக் கற்று முடிக்க வேண்டும். ஏனென்றால் வாழ்க்கையில் எதையும் காலம் கடத்துவதற்காக மட்டும் நினைக்க வேண்டாம். கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை அழகாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.







ஒரு தடவை மல்வானஹின்னை என்ற ஊரைத் தாண்டிச் செல்லும் போது எனது பார்வையில் ஊர் மிகவும் சுத்தாகவும் மிகவும் ரம்மியமாகவும் இருக்கின்ற காட்சி தோன்றியது. அப்பொழுது செயற்கை நுண்ணறிவுக் கிராமம் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று தெரியாது. ஆனால் அக்குறணைக்குள் இந்த ஊர் வித்தியாசமாக இருக்கிறது என்பது மட்டும் புலப்பட்டது. ஆனால் வித்தியாசம் மிகத் துல்லியமாகத் தெரிந்தது. நிறையப் பேர் கதைப்பார்கள் நடைமுறையில் ஒன்றும் செய்யமாட்டார்கள். ஆனால்; அவர்கள் செயற்படுவதைப் பார்க்கின்ற போது தான் மாற்றம் தெரியும். இதில் நானும் ஓர் அங்கத்தராக இருப்பதில் மிகவும் மகிழ்ச்சிடைகின்றேன். இதுதான் நாங்களும் படிப்பது என்று அவர் மேலும் தெரிவித்தார்.





**சப்ரகமுவ பல்கலைக்கழக சுற்றுலா மற்றும் முகாமைத்துறைப் பேராசிரியர் அஸ்லம் உரையாற்றுகையில்;**

மள்வானஹின்ன என்ற ஊருக்கு இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். உலகத்தில் முக்கியமானது ஒன்றுதான் உருவாக்குதல் ஆகும். எந்த ஒரு விடயமும் எங்கு உருவாக்கப்படுகிறதோ அந்த விடயம்தான் உலகத்திற்கு புத்துயிர் கொடுக்கும். இதுதான் நாம் உலகில் காணும் உண்மை. உலகத்தில் ஒன்றை உருவாக்குவதுதான் மிகவும் கடினமானதும் முக்கியமானதும் ஆகும்.

ஆகவே அந்த வகையில் இலங்கையில் மள்வானஹின்னை ஒரு முக்கியமான கிராமமாக எதிர்காலத்தில் திகழும். செயற்கை நுண்ணறிவுக் கிராமம் உருவாவது என்றால் அது மள்வானஹின்ன கிராமமாகத்தான் இருக்கும். இந்த மல்வானஹின்னைக் கிராமத்தைப் பார்த்து அடுத்த மனிதர்கள் தங்களுடைய கிராமத்தையும் உருவாக்குவதற்கான முயற்சிகளைச் செய்தல் வேண்டும்.

கணினி தொழில் நுட்பத்தின் மூலம் இந்த கிராமத்தின் மாணவர் சமூகம் முழு பயனையும் அடைவதைப் போல ஏனைய கிராமங்களைச் சார்ந்தவர்கள் பயன்களை அடைய வேண்டும். செயற்கை நுண்ணறிவுக் கிராமம் என்று கூறும் போது இலங்கையில் முதன் முதலில் மள்வானஹின்ன பேசப்படும் கிராமமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். இந்த திட்டம் முழுமையானதாக நிறைவேறி உலகத்திற்கு முன்மாதிரியாக வர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இக்பால் அலி...**



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. முதலாவது படத்துடன் தொடர்புடையது அல்லாதது



i.  ii.  iii. 

02. இரண்டு இரட்டை எண்களையும் இரண்டு ஒற்றை எண்களையும் கூட்டினால் பெறப்படுவது?
i. ஒற்றை எண் ii. இரட்டை எண் iii. சரியாக கூறமுடியாது

03. 1 தொடக்கம் 50 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகள் எத்தனை?
i. 6 ii. 7 iii. 5

04. 
இதிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 9
ii. 11
iii. 12

05. இரண்டு தட்டையான முகங்களை மட்டும் கொண்ட திண்மவுரு எது?
i. சதுரமுகி ii. உருளை iii. கனவுரு

 = 10  = 06  = 04 எனில்,
**பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை தெரிக.**

06. 

i. 10 ii. 20 iii. 30

07. 

i. 20 ii. 22 iii. 24

08. 

i. 30 ii. 28 iii. 24

09. 

ஒரு நீளமான கம்பியால் படத்தில் காட்டியுள்ளவாறு செவ்வக வடிவ உரு ஒன்று செய்யப்பட்டுள்ளது. இதே அளவினைக் கொண்ட கம்பியைக் கொண்டு சதுர உருவொன்று அமைக்கப்படுமாயின் அச் சதுரத்தின் ஒருபக்க நீளம் யாது?
i. 8 cm ii. 6 cm iii. 4 cm

10. "குயில் கட்டிய கூட்டில் மூன்று முட்டைகள் இட்டன" இக்கூற்று தவறாக இருப்பதற்கு உரிய காரணமானது
i. குயில் மூன்று முட்டைகள் இடாது. ii. குயில் முட்டை இடாது.
iii. குயில் கூடு கட்டாது.

11. "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழியின் கருத்தானது.
i. கவலை உண்டாகும் ii. கவலை எல்லோருக்கும் உண்டாகும்
iii. அடுத்தடுத்து கவலை உண்டாகும்.

12. சபரியின் மகன் சுதனின் தந்தையெனில் சபரிக்கு சுதன் என்ன உறவு முறை?
i. பேரன் ii. மகன் iii. தாத்தா

13. 2008ஆம் ஆண்டு லீப் வருடத்தில் தனது 8ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார் எனில் அவர் பிறந்த ஆண்டு யாது?
i. 1980 ii. 2000 iii. 1996

14. 





i. 2 ii. 3 iii. 4

15. 250g சீனி ரூபாய் 75.00 ரூபாய் எனில் 3kg சீனி எவ்வளவு?
i. ரூபாய் 600.00 ii. ரூபாய் 900.00 iii. ரூபாய் 500.00

16. 

இவ்வுருவின் சுற்றளவு யாது?
i. 18 cm
ii. 36 cm
iii. 24 cm

17. 1*l* பெற்றோலில் 40 km தூரம் பயணம் செய்யும் ஒரு பேருந்து 100 km பயணம் செய்ய எவ்வளவு பெற்றோல் தேவை?
i. 2 ½ *l* ii. 2 *l* iii. 1 ½ *l*

18. மிதுர்ஷனியின் எதிரே சஸ்வின் வருகின்ற போது சஸ்வினின் நிழல் மிதுர்ஷனியின் மீது பட்டது. சஸ்வின் பயணம் செய்தது மேற்கு திசை எனில் அது ஒரு நாளின் எவ்வேளையாகும்?
i. காலை ii. பகல் iii. மாலை

19. 20900 இதனை எழுத்தில் எழுதினால்
i. இரண்டாயிரத்து தொள்ளாயிரம் ii. இருபதாயிரத்து தொள்ளாயிரம்
iii. இருபதாயிரத்து தொண்ணூறு

20. ஒரு பென்சிலும் புத்தகமும் சேர்ந்து 75 ரூபாய். பென்சிலின் விலை 25 ரூபா எனில் இரண்டு புத்தகங்களின் விலை என்ன?
i. ரூபாய் 50.00 ii. ரூபாய் 80.00 iii. ரூபாய் 100.00

21. 500 இன் 1/5 பங்குடன் 100 இன் 1/2 பங்கை கூட்டினால் கிடைப்பது?
i. 150 ii. 250 iii. 300

22. ஒரு நதியில் எப்போதும் இருக்கக் கூடியது
i. நீர் ii. மீன்கள் iii. ஓடம்

23. 
இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கையானது?
i. 14
ii. 16
iii. 18

24. ஒரு புத்தகத்திலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை 62. அதுபோல 7 புத்தகங்களிலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை யாது?
i. 444 ii. 434 iii. 424

25. 
இவ்வுருவிலுள்ள சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது?
i. 4
ii. 1
iii. இல்லை

26. மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரையுள்ள நாட்களின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 120 ii. 121 iii. 122

27. 
இது ஒரு சமபக்க முக்கோணி எனில் இந்த உருவை பூரணப்படுத்த இன்னும் எத்தனை வட்டங்கள் தேவைப்படும்?
i. 10
ii. 15
iii. 18

28. ஒரு மாம்பழத்தின் விலை ஒரு கொய்யாப்பழத்தின் விலையைப் போல மூன்று மடங்காகும். மாம்பழம் 30 ரூபாய் எனில் மூன்று கொய்யாப்பழங்களின் விலை யாது?
i. ரூபாய் 30.00 ii. ரூபாய் 60.00 iii. ரூபாய் 90.00

29. நள்ளிரவு 12 மணியை நியம நேரமாக எழுதினால்
i. 12 : 00 ii. 00 : 00 iii. 24 : 00

30. கடிகார முகம் ஒன்றில் நிமிடமுள்ளானது ஒரு நாளில் எத்தனை தடவை கடிகார முகத்தை சுற்றி வரும்
i. 12 தடவை ii. 20 தடவை iii. 24 தடவை

31. ஒரு சாதாரண வருடத்தில் 28 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை உள்ளன?
i. 12 ii. 7 iii. 1

32. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தோன்றும் எழுத்துக்களின் தொகுதியானது?
i. XLM ii. MNX iii. MAX

33. 





i. 41 ii. 29 iii. 19

34. 
இவ்வுருவிலுள்ள கடைசி கட்டத்தில் வட்டம் அமைந்துள்ள முறை எது?
i.  ii.  iii. 

35. 70, 80க்கும் இடையேயுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை
i. 450 ii. 480 iii. 400

36. வண்ணத்துப்பூச்சி – தேன் எனில் கம்பளிப்பூச்சி - .............
i. இலை ii. பூ iii. வேர்

37. 
இவ்வாறு ஒரு சதுர வடிவான காகிதம் நான்காக மடித்து வெட்டப்பட்டால் தோன்றும் உருவானது
i.  ii.  iii. 

38. தானே தன்னைப்பற்றி எழுதுவதை குறிக்கும் தனிச்சொல்
i. சுயவிபரம் ii. சுயசரிதை iii. சுயநலம்

39. 
நிறம் தீட்டப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்கு?
i. 6/12 ii. 6/10 iii. 4/10

40. ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்றுடன் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறினை கூட்டினால் வருவது
i. 3901 ii. 3981 iii. 3991

(12ஆம் பக்கம் பார்க்க)

(11 ஆம் பக்கத் தொடர்)

# கடந்த வார (10.11.2023) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01 காகம்
02. ஒற்றுமை
03. குயில் குஞ்சுக்கு
04. i. ஆகாயத்தில் ii. விழியை
05. i. வெள்ளை ii. அசுத்தம்
06. தாய்

**II.**
07. பேர்த்தி கதை கேட்டாள்
08. அவள் கதை எழுதினாள்
09. உழத்தி வயல் உழுதாள்

**III.**
10. கச்சல்
11. நாற்று
12. பொன்விழா
13. பண்ணை
14. i. உறுமும் ii. பேசும்
iii. சொல்லும் iv. கொக்கரிக்கும்
15. i. பற்பசை ii. மலரிதழ்
iii. நச்சுப்பாம்பு iv. பூந்தோட்டம்
16. i. இலங்கை மின்சார சபை
ii. முற்பகல்
17. i. முகத்தில் தெரியும் ii. சுடுகாடு மட்டும்
18. i. சண்டையிடல் ii. ஏமாற்றுதல்
19. i. யாளுவா ii. பெங்குவ
iii. விதுஹஸ்பதி iv. வதுர
20. i. உங்களுக்கு இது பிடிக்குமா?
ii. கவனமாக இருங்கள்

**IV.** i. Bat ii. Coconut
21. ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு
22. 25011, 25101, 25110, 25111
23. 16
24. 0.5
25. 16 : 24
26. 100
27. 80 வரிசைகள்
28. 10
29. 12

**V.**
30. 2
31. 3

| | | |
|---|---|---|
| 32. 2 | 41. 3 | 50. 1 |
| 33. 3 | 42. 3 | 51. 2 |
| 34. 3 | 43. 1 | 52. 3 |
| 35. 2 | 44. 2 | 53. 1 |
| 36. 1 | 45. 1 | 54. 3 |
| 37. 1 | 46. 1 | 55. 1 |
| 38. 1 | 47. 2 | 56. 1 |
| 39. 1 | 48. 3 | 57. 2 |
| 40. 2 | 49. 3 | 58. 1 |
| | | 59. 3 |




மலையகத்தில் தொடரும் பலத்த மழை;

## கிறிஸ்லபாம் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு



பெற்றோர் விசனம்



(ஹற்றன் விசேட நிருபர்)

கடும் மழை காரணமாக நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கொட்டகலை கிறிஸ்லபாம் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். இப்பகுதியிலுள்ள நான்கு தோட்டங்களைச் சேர்ந்த 350 ற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர். எனினும் அடிக்கடி மழை பெய்து வருவதால் வகுப்பறைகளுக்குள் வெள்ளநீர் புகுந்து கற்றல் உபகரணங்கள் உட்பட மாணவர்களின் புத்தகங்களை சேதப்படுத்துவதாக பெற்றோர் குற்றம்சாட்டுகின்றனர்.

கடந்த 10 திகதி இப்பிரதேசத்தில் பெய்த கடும் மழை காரணமாக பாடசாலை கட்டடத்தினுள் வெள்ள நீர் உட்புகுந்தமையால் கற்றல் உபகரணங்கள், தளபாடங்கள் என்பன சேதமடைந்தன. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பாடசாலையின் அருகாமையிலுள்ள ஓடை மழை நேரங்களில் நிரம்பி வழிவதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் ஓடையினை அகலப்படுத்தி அணை தடுப்பு சுவர் அமைக்கப்படுவதே இப்பிரச்சினைக்கு தீர்வாக அமையுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். வெள்ளம் ஏற்படும் போதெல்லாம் பெற்றோர்கள் வந்து சுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் பலரது தொழில் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இதுகுறித்து சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## சப்ரகமுவ ஆளுநரின் சீன விஜயம்



(காவத்தை தினகரன் விசேட நிருபர்)

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க சீனாவிலுள்ள Jiangsu Liangfeng Food சொக்லைட் மற்றும் கொக்கோ தொழிற்சாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க, நேற்று முன்தினம் (15) சீனாவிலுள்ள Jiangsu Liangfeng Food சொக்லைட் மற்றும் கொக்கோ தொழிற்சாலைக்கு விஜயம் செய்துள்ளார். இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க Jiangsu Liangfeng Food தொழிற்சாலை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், சப்ரகமுவ மாகாணத்திலும் இவ்வாறானதொரு தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராகவிருந்த காலத்தில் கொக்கோ பயிரின் பொருளாதார பெறுமதியை உணர்ந்து கொக்கோ பயிர்ச்செய்கையை இந்நாட்டில் பிரபலப்படுத்த பெரும் பாடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்திய மாகாணத்தில் பசும் பால் உற்பத்தியில் வீழ்ச்சி

(அக்குறணை குறூப் நிருபர்)

மத்திய மாகாணத்தில் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மாகாண கால்நடை உற்பத்தி மிருக வளர்ப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மத்திய மாகாண திரவப்பால் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக கால்நடை உற்பத்தி மிருக வளர்ப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2018ஆம் ஆண்டு இருந்த வருடாந்த பால் உற்பத்தி இவ்வருடம் பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது. மத்திய மாகாணத்தில் கண்டி, நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களில் பால் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாட்டின் பொருளாதார நிலை, கடந்தகால கொவிட் தொற்று மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு காரணங்களால் இந்நிலைமை ஏற்பட்டிருக்கலாம் என கால்நடை உற்பத்தி மிருக வளர்ப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## காணாமல் போன நபர் சாமிமலை வனப் பகுதியில் சடலமாக மீட்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)



மஸ்கெலிய ஹொரன பிளான்டேசனுக்கு உரித்தான ஓல்டன் தோட்ட நிலாவத்தை பிரிவிலுள்ள வன பகுதியில் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் ஐந்து மாதங்களுக்கு முன்னர் காணாமல் போன காளிமுத்து கிட்னசாமி (76) என்ற நபருடையது என தெரியவருகின்றது.

சடலத்தில் காணப்பட்ட ஆடை மற்றும் சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை வைத்து சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து சம்பவ இடத்திற்கு மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தலைமையிலான குழுவினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இதேவேளை உறவினர்களும் சம்பவ இடத்துக்கு வந்து சடலத்தை அடையாளம் காட்டினர்.

சம்பவ இடத்துக்கு சென்ற ஹற்றன் தடயவியல் பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரி, ஹற்றன் நீதிமன்ற பதில் நீதவான் ஆகியோர் வன பகுதிக்கு சென்று சடலத்தை டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தனர்.

அங்கு டி.என்.ஏ.பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

## நூல் வெளியீட்டு விழா

(அக்குறணை குறூப் நிருபர்)



அக்குறணையில் அப்துல் நாஸர் மௌலவி பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அந்தவகையில் அவர் எழுதிய மூன்று புத்தகங்களின் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் முன்னாள் செயலாளர் மௌலவி அஷ்ஷேக் அப்துல் நாஸர் (றஹ்மானி) எழுதிய மூன்று நூல்களான மணிமாலை, என் இதயக் கமலத்தில், இனியவர்கள் ஆகிய மூன்று நூல்களும் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன. இவர் ஏற்கவே 11 புத்தகங்களையும் எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பலாங்கொடையில் அதிகரிக்கும் தற்கொலை சம்பவங்கள்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

கஹவத்தை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் வைத்தியசாலை சூழலில் கடந்த மூன்று தினங்களில் தற்கொலை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக கஹவத்தை பிரதேச செயலக பிரிவின் திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பத் கொடகே தெரிவித்தார்.

தொடர்ச்சியாக மூன்று தினங்களும் தற்கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இவற்றில் 18, 28 மற்றும் 51 வயதுகளையுடைய மூவர் உயிரிழந்துள்ளனர்.

சிறிய விடயங்களுக்காக தற்கொலை போன்ற பாரதூரமான முடிவுகளை எடுப்பதாக திடீர் மரண விசாரணை அதிகாரி கவலை வெளியிட்டுள்ளார்.

கஹவத்தை பிரதேச செயலகப் பிரிவில் 17 கிராம பிரிவுகள் உள்ளதுடன் 2023 ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை 24 தற்கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். இவ்வருடத்தில் தற்கொலை செய்து கொண்டவர்களில் 12 பேர் 15 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என தெரியவருகின்றது.



நலிவுற்ற சமூகத்தை மேம்படுத்தும் அமைப்பின் ஏற்பாட்டில் இலவச கண்பரிசோதனை மற்றும் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு கிறிஸ்து நாதர் தேவாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பார்வைக் குறைப்பாடு உடைய 50க்கு மேற்பட்டவர்களுக்கு கண்சிகிச்சைகளுடன் மூக்குக்கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கதிரேசன் ஆரம்ப பாடசாலை 10ஆவது வருட நிறைவு விழா

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

கதிரேசன் மாதிரி ஆரம்ப பாடசாலையின் பத்தாவது வருட நிறைவு விழா எதிர்வரும் 19ஆம் திகதி நாவலப்பிட்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் பி.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சத்தியேந்திரா, கம்பளை வலயக் கல்விப் பணிப்பாளர் நிஹால் அழககோன், கம்பளை வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் உமேஷ்நாதன் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மண்சரிவில் தனது எஜமானை இழந்த நாய் சோகத்தில் தவிப்பு



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை கவரங்ஹேன பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தில் தனது எஜமானர்களை இழந்த நாய் பெரும் வேதனையுடன் அவர்களை தேடி அலையும் காட்சி அப்பகுதி மக்களை மேலும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

தனது வீட்டு எஜமானர்கள் நால்வரையும் மண்சரிவில் இழந்த அக்குடும்பத்தின் செல்ல பிராணியான நாய் உணவையும் உட்கொள்வதையும் தவிர்த்துவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பலாங்கொடை கவரங்ஹேன பிரதேசத்தில் மண்சரிவு அனர்த்தம் இடம்பெற்ற போது ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை இரண்டு மகள்மார்கள் என நால்வர் மண்ணில் புதையுண்டு உயிரிழந்தனர்.

இவர்களது இழப்பின் பின்னர் இவர்களது செல்லப் பிராணியான நாய் உணவும் உட்கொள்ளாமல் அவர்களின் வீடு இருந்த இடத்தில் சோகத்தில் காணப்படுவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். நாய் ஒரு நன்றியுள்ள மிருகம் என்பதற்கு இதுவொரு எடுத்துகாட்டாகும்.

# புத்தளம் சிறு கடல் பகுதியில் இறந்த நிலையில் சடலம் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் முள்ளிபுரம் பூவரசன் குடா சிறுகடல் பகுதியில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் மிதந்த நிலையில் நபர் ஒருவரின் சடலம் நேற்று காலை (16) மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுகடல் தொழிலுக்கு சென்ற மீனவர்கள் சிலர், கடலுக்குள் சடலம் ஒன்று கிடப்பதை அவதானித்து அதுபற்றி அந்த பகுதியிலுள்ள கிராம சேவகருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நீல நிற சேர்ட்டும், நீல நிற பாதணிகளும் அணிந்திருந்த நிலையில் காணப்பட்ட குறித்த சடலம், யாருடையது என்பது பற்றிய தகவல்கள் இதுவரை தெரியவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் சடலத்தை பார்வையிட்டதுடன், இந்த சடலம் யாருடையது எனவும், இவரது உறவினர்கள் தொடர்பிலும் கண்டறியுமாறும், அதன் பின்னர் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# களுத்துறை மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள் சங்கத்தின் கூட்டம்



அண்மையில் ஏற்பாட்டாளர் சுமித் பொதுபிடிய தலைமையில் களுத்துறை வடக்கு பொதுபிடிய கென்ரிச் ஹோட்டலில் நடைபெற்றது. மாவட்டத்தைச் சேர்ந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக, சமூக வலைத்தளங்கள் சார்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்

*(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)*

# கம்பஹா மாவட்டத்தில் நீர் விநியோகத் தடை




சப்புகஸ்கந்த மின்சார சபையின் அவசர திருத்த வேலைகள் காரணமாக, பியகம நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான மின் விநியோகம் தடைப்படுவதால் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8:30 முதல் பி.ப. 8:30 வரையிலான 12 மணி நேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

பேலியகொட, வத்தளை, ஜா–எல, கட்டுநாயக்க – சீதுவ நகரசபை பகுதிகள், களனி, வத்தளை, பியகம, மஹர, தொம்பே, ஜா–எல, கட்டானை, மினுவாங்கொடை ஆகிய பிரதேசசபை பகுதிகள் மற்றும் கம்பஹா பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சில பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசெளகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# வட மத்திய மாகாணத்தில் வாண்மை விருத்தி செயலமர்வு

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி ( SBPTD) நடைமுறைப்படுவது சம்பந்தமாக வடமத்திய மாகாண கெகிராவ, தமுத்தேகம, கலென்பிந்துனுவெவ ஆகிய கல்வி வலயங்களில் உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கு தெளிவூட்டும் செயலமர்வு வடமத்திய மாகாண கல்வி திணைக்கள கேட்போர் கூடத்தில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் ஆசிரியர் வாண்மை விருத்தி என்றால் என்ன என்பது பற்றியும் இதனை பாடசாலைகளில் நடைமுறைப்படுவது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.


## காலி மாநகர சபை

## 2024 ஆம் ஆண்டுக்கான வரிப்பணம் வரி விதித்தல்

நகராட்சி ஆணையாளர் என்ற முறையில், நகராட்சி ஆணையின் 286(அ) பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, 04.10.2023 திகதியிட்ட நிதிக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவு எண் 2023/10/04/1182, படி பொதுஜனத்திற்கு அறிவிக்கப்படுகின்றது.

1. 2024 ஆம் ஆண்டுக்கான சட்டமாக்கப்பட்ட வரிப்பணம் வரி மார்ச் 31 ஜுன் 30 செப்டெம்பர் 30 டிசம்பர் 31 ந் திகதிகளில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குள்ளும் சமமான தவணை பாங்கில் காலி மாநகர சபைக்கு செலுத்த வேண்டும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.
2. 2024 ஆம் வருடத்திற்கான மொத்த வரிப்பண வரி 2024 ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் காலி மாநகர சபை காரியாலயத்திற்கு செலுத்தப்படுமாயின் மொத்த வரித் தொகையில் பத்து வீத (10%) கழிவும் ஒவ்வொரு காலாண்டுக்குரிய வரிப்பண வரி அந்த ஒவ்வொரு காலாண்டின் முதலாம் மாதத்தின் கடைசித் திகதி அல்லது அதற்கு முன் காலி மாநகர சபைக்கு செலுத்துவதாயின் அக்காலாண்டு வரிப்பணத் தொகையின் ஐந்து வீத (5%) கழிவும் கொடுக்கப்படும்.
3. மேற்குறிப்பிடப்பட்ட காலி எல்லைக்குள் வரிப்பண வரி செலுத்தப்படாத உரிய தரிசு நிலங்கள் மற்றும் இருப்பிடங்களுக்கான நூற்றுக்கு பதினைந்து வீத (15%) பிடியாணைக் கட்டணமும் தரிசு நிலங்கள் இருப்பிடங்களும் அல்லது ஏனைய ஆதனங்களுக்காக நூற்றுக்கு இருபது வீத (20%) பிடியாணைக் கட்டணமும் அறவிடப்படும்.

04.10.2023ஆம் திகதி
காலி மா நகர சபை அலுவலகத்தில்.

ஆர்.எம்.டி.கே.ரஸ்நாயக்க,
நகராட்சி ஆணையாளர்,
தலைமை நிர்வாக அதிகாரி.
காலி மாநகர சபை.

**பிரேரணை**

252 ஆவது அதிகாரமாகிய மாநகர சபை ஆணைச் சட்டத்தின் 238 ஆவது பிரிவின் (1) வது உப பிரிவின் மாநகர சபையால் செய்யப்பட்ட உத்தரவின் பிரகாரம் காலி மா நகர சபை அதிகாரப் பிரிவிற்குள் அமைந்துள்ள அனைத்து வீடகளில் கட்டிடங்களில் காணிகள் மற்றும் ஏதாவது குடியிருப்புக்களில் வருடாந்த பெறுமதி 2024 ஆம் ஆண்டுக்கான பெறுமதி எனவும் ஏற்றுக் கொள்ளவும். குறிப்பிட்ட மா நகர சபை ஆணைச் சட்டத்தின் 230 ஆவது பிரிவின் (1) காலி மா நகர சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் குறிப்பிட்ட ஆதனங்கள் வருடாந்த பெறுமதியின்

(அ) வதிவிடங்களுக்கு நூற்றுக்கு ஏழு (7%) வீதமும்.

(ஆ) வியாபாரம் அல்லது வணிக காரியங்களுக்கு பாவிக்கப்படுமாயின் நூற்றுக்கு பன்னிரண்டு (12%) வீதம் வரிப்பணமும்

(இ) ஏனைய அனைத்து அரச ஆதனங்கள் மற்றும் வெற்று நிலங்களுக்கு நூற்றுக்கு இருபத்திரண்டு

(22%) வீதமும் வரிப்பணமும்

அவ்வரிப்பணங்கள் குறிப்பிட்ட மா நகர சபை ஆணைச் சட்டத்தின் 230 வது பிரிவின் (2) வது உப பிரிவின் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் குறிப்பிட்ட வருடத்தின் மார்ச் மாதம் 31 ஜூன் 30, செப்டம்பர் 30, டிசம்பர் 31 திகதிகளில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைவதற்கு முன் சமமான தவணைகள் நான்கில் காலி மாநகர சபைக்கு கட்டுவதற்கு உத்தரவிடுவதற்கும் காலி மாநகர சபை பிரேரிக்கின்றது.


# சீனன்கோட்டை அல் ஸலாஹில் புது மாணவர்களை சேர்ப்பதற்கு 19ஆம் திகதி நேர்முக பரீட்சை

பேருவளை, சீனன்கோட்டையில் இயங்கி வரும் அல் ஸலாஹ் அரபுக்கல்லூரியில் 2024ஆம் கல்வியாண்டிற்கு புது மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி கல்லூரியில் கிதாபு மற்றும் ஹிப்ழ் பிரிவுகளுக்கு புது மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முக பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நேர்முக பரீட்சைக்கு சமுகமளிக்கும் மாணவர்கள் தமது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப் பிரதியையும், இறுதியாக சித்தியடைந்த பாடசாலையின் தேர்ச்சி அறிக்கையின் ஒரு பிரதியுடன் சமுகமளிக்குமாறு மத்ரஸா நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். மேலதிக விபரங்களுக்கு மத்ரஸா அதிபரை தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## விசேட தேவையுடைய...

(04ஆம் பக்கத் தொடர்)

எனவே, எமது பாடசாலையிலும் சாதாரண மாணவர்களுக்கு கல்வி புகட்டப்படுவதைப் போன்றே விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் விசேட கல்வி அலகொன்றை ஆரம்பிப்பதற்கான தேவை அதிபர் M.Z.M. இர்பான் அவர்களினால் வலியுறுத்தப்பட்டதற்கிணங்க, விசேட கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியையான பஸீலாவின் பொறுப்பின் கீழ் விசேட கல்வி அலகு நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கேற்ப வலயக் கல்விப் பணிமனை, தென்மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் தொடர்ந்து இடம்பெற்று வந்த கூட்டங்கள், ஆலோசனைகள், வழிகாட்டல்களுக்கு அமைவாக அதன் அனுமதியுடன் வலயக்கல்விப் பணிமனையின் பிரதி கல்வி பணிப்பாளர் A.D. வசந்த அவர்களினால் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி 7 மாணவர்களுடன் விசேட கல்வி அலகு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதுவே தென் மாகாணத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் காணப்படும் ஒரே ஒரு விசேட கல்வி அலகுமாகும்.

'விசேட தேவையுடைய மாணவர்களின் சிறந்த எதிர்காலத்தை நோக்கி' எனும் கருப்பொருளில் அமையப்பெற்றுள்ள இவ்விசேட அலகு, விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்பு வழங்கல், அவர்களையும் சமூகத்தின் உறுப்பினர்களாக மதித்து நடத்தல், அவர்களின் திறமைகளையும் வெளிக்கொணர்தல் மற்றும் அவர்களும் தனித்து இயங்குவதற்கான பயிற்சியை வழங்கல் போன்ற பல குறிக்கோள்களை கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இவ்வலகு ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்தினுள் தென்மாகாணக் கல்வித்திணைக்களத்தின் விசேட கல்விப் பிரிவினால் இப்பாடசாலையின் விசேட கல்வி அலகுக்காக மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் இவ்வலகு தேவையான வசதிகள் செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டது.

மேலும், விசேட கல்வி அலகின் தற்போதைய பொறுப்பாசிரியர்களான டீ.கு. பஸீலா மற்றும் ஞ.ஞ. சிலாசா ஆகியோரது கடின உழைப்பின் விளைவாக விசேட தேவையுடைய பிள்ளைகளும் கலை, கலாசார நிகழ்வுகளில் நடனம், நடிப்பு என அழகியல் சார்ந்த துறைகளில் தமது திறமைகளையும் வெளிக்கொணர்ந்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளதோடு விசேட கவனத்திற்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.


## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் லைசியம் எடியுகேசன் (பிரைவட்) லிமிட்டெட் அதனது பெயரை லைசியம் எடியுகேசன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டெட் என 2023 நவம்பர் 03ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்தின் 8ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக மாற்றியுள்ளதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**கம்பனியின் முன்னைய பெயர்** : லைசியம் எடியுகேசன் (பிரைவட்) லமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பிவி 121172
பதிவு அலுவலகம் : இல. 3/1, ரேமன்ட் வீதி, நுகேகொட.
கம்பனியின் புதிய பெயர் : லைசியம் எடியுகேசன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**சேனாலி நிரஞ்சசலா சிரிகிருஷ்ணராஜா துணுவில்ல**
**செயலாளர்,**
**லைசியம் எடியுகேசன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

### உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்காக

### Perimeter and Inner Firewalls இன் பராமரிப்பு

**ஒப்பந்த இலக்கம்: IR/PAM/28/123/2024**

1. “உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்காக Perimeter and Inner Firewalls இன் பராமரிப்புக்காக” தகுதிபெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள, ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (சிரேஷ்ட), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பராமரிப்புக் காலம் 1 ஆண்டும்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர்,
   a. விலைக்கேட்பு நேரத்தில் மற்றும் ஒப்பந்தம் வழங்கப்படும் நேரத்தில் ஒப்பந்ததாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு இது தொடர்பில் உறுதிமொழித்தாள் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
   b. இலங்கையில் செல்லுபடியான வர்த்தகப் பதிவை வழங்குதல் வேண்டும்.
   c. அரச திணைக்களங்கள்/ நிறுவனங்கள் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனங்களில் இந்த ஆவணத்தில் பட்டியலிடப்பட்ட ஒத்த வன்பொருள் உருப்படிகளின் பராமரிப்பில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
   d. கடந்த 03 ஆண்டுகளில் சராசரி ஆண்டுப் புரள்வு குறைந்தது 75 மில்லியன் இருத்தல் வேண்டும்.
4. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா பன்னிரண்டு ஆயிரத்து ஐந்நூறை (ரூபா 12,500) செலுத்தி 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை 2023.11.17 ஆம் திகதி தொடக்கம் 2023.12.07 ஆம் திகதி வரை கொழும்பு 02, சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள, ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டண கொடுப்பனவு ரொக்கப்பணத்தில் மாத்திரம் இருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்களை 2023.12.08 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (சிரேஷ்ட), பெறுகை மற்றும் ஆதன முகாமைப் பிரிவு, 15ஆவது மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சேர் . சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2024.03.08 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட, விலைமனு ஆவணத்தில் தரப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வடிவத்தின்படி வங்கி உத்தரவாத வடிவில் மாத்திரம் இலங்கை ரூபா ஐந்நூறாயிரம் (ரூபா 500,000.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிரேஷ்ட),**
**பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ பிரிவு,**
**15ஆவது மாடி,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02**
**திகதி 2023.11.17**

## பெறுகை அறிவித்தல்

## ஹாலிஎல பிரதேச சபை வசமுள்ள ஆதனங்களை குத்தகைக்கு விடுதல் 2024

ஹாலிஎல பிரதேச சபைக்கு சொந்தமான கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுதல்.

**விலைமனு வழங்கல் - 2023.11.15 ஆம் திகதி தொடக்கம் 2023.12.04 ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை ஹாலிஎல பிரதேச சபை அலுவலகத்தில்**

**விலைமனு ஏற்கும் இறுதித் திகதி - 2023.12.05 ஆம் திகதி பி.ப. 1.30**

**விலைமனுக்களை திறப்பது - 2023.12.05 ஆம் திகதி பி.ப. 2.00க்கு ஹாலிஎல பிரதேச சபை அலுவலகத்தில்**

விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் பங்கேற்பது கட்டாயமாகும். விலைமனுக்கள் தொடர்பில் இறுதி முடிவு எடுப்பது பெறுகைக் குழு வசமானது. மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கேட்டறிந்துகொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம்: 055-2294275)

**அறிவுறுத்தல்கள்**

1. விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்களாக இருத்தல் வேண்டும்.
2. விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது தொடர்பில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும். எதிர்ப்பு இருந்தால் பெறுகைக் குழுவினால் வழங்கப்படுகின்ற நேரத்தில் அந்த எதிர்ப்பை முன்வைத்தல் வேண்டும் என்பதோடு, அதனை பரிசீலித்த பின் பெறுகைக் குழுவினால் வழங்கப்படும் முடிவு பின்னர் எந்த ஒரு வகையிலும் மாற்றப்படமாட்டாது.
3. இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை விலைமனுவை வெவ்வேறாக கடித உறைகளில் இட்டு மூலப்பிரதி மற்றும் இரண்டாவது பிரதி என குறிப்பிட்டு பின்னர் அந்த இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு முத்திரை இடுதல் வேண்டும். அனைத்து கடித உறைகளினதும் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் சமர்ப்பிக்கும் விலைமனு எதற்காக என்பதை குறிப்பிட்டு (“............ (இடம்) ............ (இலக்கம்) ஆதனங்களுக்கான விலைமனு”) 2023.12.05 ஆம் திகதி பி.ப. 1.30க்கு முன்னர் தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சபை, ஹாலிஎல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது சபை செயலாளர் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு கைகளால் கொண்டுவந்து இடுவதன் மூலம் சமர்ப்பிக்க முடியும்.
4. அறிவுறுத்தலுக்கு அமைய செயற்படாத அனைத்து விண்ணப்பதாரர்களினதும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை**

| பிரிவு இலக்கம் | ஆதனத்தின் பண்பு | கேள்விமனு படிவக் கட்டணம் ரூபா (மீளளிக்கப்படாதது) | கேள்விமனு பிணை ரூபா (மீளளிக்கப்படும்) | குறைந்தபட்ச விலைமனு ரூபா |
|---|---|---|---|---|
| 01 | ஹாலிஎல நுவரெலியா வீதியில் மாட்டிறைச்சிக் கடை (வர்த்தக உரிமை) | 10,000.00 | 50,000.00 | 1,461,075.00 |
| 02 | ஹாலிஎல வாரச்சந்தை புதன்கிழமை | 5,000.00 | 10,000.00 | 1,720,680.00 |
| 03 | ஹாலிஎல வாரச்சந்தை சனிக்கிழமை | 5,000.00 | 10,000.00 | 1,522,200.00 |
| 04 | எடம்பிடிய வாரச்சந்தை | 5,000.00 | 10,000.00 | 26,620.00 |
| 05 | ஹாலிஎல பொது கழிப்பறை | 1,000.00 | 3,000.00 | 178,200.00 |
| 06 | எடம்பிடிய பொது கழிப்பறை | 1,000.00 | 3,000.00 | 26,620.00 |
| 07 | ஸ்பிரிங்வெலி பொது கழிப்பறை | 1,000.00 | 3,000.00 | 64,800.00 |
| 08 | தம்புல்கொட கடை அறை இலக்கம் 01 | 2,500.00 | 5,000.00 | 24,420.00 |
| 09 | தம்புல்கொட கடை அறை இலக்கம் 02 | 2,500.00 | 5,000.00 | 25,410.00 |
| 10 | ஹாலிஎல பிட்டவெட்டிய வீதி கடை | 2,500.00 | 5,000.00 | 187,000.00 |
| 11 | ஹாலிஎல பிரதேச சபை பால் கடை | 2,500.00 | 5,000.00 | 240,000.00 |

**2023.11.15**
**பெறுகைக் குழு தலைவர்,**
**பிரதேச சபை, ஹாலிஎல**

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024

**மாகாண இயந்திரத் திணைக்களம்**

கஹகொல்ல – பண்டாரவளை

# ஊவா மாகாண சபை

எமது நிறுவனத்திற்கு 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்வதற்காக அறிவித்தல் மற்றும் விண்ணப்பப்படிவத்தை www.pdmupc.lk என்ற இணைய தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன், விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி **2023.12.31** என தயவுடன் அறியத்தருகின்றேன்.

**பொறியிலாளர் எம்.டி.ஜீ.ஏ.என். லக்மால்**
**மாகாண இயந்திர பணிப்பாளர்,**
**மாகாண இயந்திர திணைக்களம்,**
**கஹகொல்ல - பண்டாரவளை**
**தொலைபேசி இல : 0572233017 / 0574932094**
**பெக்ஸ் இலக்கம் : 0572222446**
**மின்னஞ்சல் முகவரி : www.pdmechanicaleng@gmail.com**

## பொருட் கொள்வனவு அறிவித்தல்
## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N- 096

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் கீழ்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து / வழங்குநர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| No | Item | Bid Reference No | Bid Security (Rs.) |
|---|---|---|---|
| **01** | Automatic Double Head Eyeleting Punching Machine | SCP05/A.E./NCB18/2023-07 | 150,000.00 |

2023.11.17 ஆம் திகதி முதல் 2023.12.06 ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை மேற்குறிப்பிட்ட உருப்பிற்கு ரூபா 7,500.00 வீதம் மீளளிக்கப்படாத மனு கட்டணம் செலுத்தி, கீழே தரப்பட்டுள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உள்நாட்டு வழங்கல் பிரிவில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

முன் விலைமனு கூட்டம் தினம் 2023.11.28 ஆந் திகதி நேரம் - மு. ப. 10.30 மணி
விலைமனு ஏற்றுக்கொள்ளும் மற்றும் விலைமனு திறக்கப்படும் இறுதி தினம் 2023.12.07 ஆந் திகதி நேரம் - பி.ப. 2.00 மணி

மேலதிக விபரங்களுக்கு கடமை நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.15 மணி வரை 011-2694898 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது www.documents.gov.lk இணையதளத்தினூடாக தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 08.**
**2023.11.17**

தொலைபேசி : 011 - 2694898
இணையதளம் : www.documents.gov.lk

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.09.12 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திரு. ஜே.எம்.சீ.எச். ஜயவர்தன அத்தாட்சிப்படுத்திய 2021.10.15 திகதியிட்ட ஈட்டு முறி இல. 743 இன் பேரில் நுகேகொட, கந்தவத்த றோட், இல. 32/2 இல் அமைந்த செரமிக் ஹோம் (பிரைவேட்) லிமிடெட்டிடமிருந்து (பணிப்பாளர்கள்: நுகேகொட கந்தவத்த றோட் இல.120/1 ஐச் சேர்ந்த திரு மொஹமட் மிப்ளார் மொஹமட் நளீம், ஹம்பாந்தோட்டை, சிப்பிகுளம், இல. 120/1 ஐச் சேர்ந்த திரு ரிள்வான் ஜெய்னுதீன் மொஹமட், மற்றும் மாத்தறை, தர்மபால மாவத்தை, இல. 206/20 ஐச் சேர்ந்த திரு மொஹமட் மிப்ளார் மொஹமட் அஸ்கர்) நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது 2023.08.14 வரை வருமதியாக உள்ள. முதலும் வட்டியும் ரூ. 55,440,700.00 (ஐம்பத்து ஐந்து மில்லியன் நாநூற்று நாற்பது ஆயிரத்து எழு நூறு ரூபாய்களும்) அத்துடன் ரூ. 51,100,000.00 (ஐம்பத்தொரு மில்லியன் நூறு ஆயிரம் ரூபாய்கள்) மீது ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து (29.25%) வீதத்தில் 2023.08.15 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மற்றும் தவணைன் கடன் மீது 2023.08.14 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 115,490,549.05 (நூற்றுப் பதினைந்து மில்லியன் நாநூற்றுத் தொண்ணூறு ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது ரூபாய்களும் ஐந்து சதங்களும்) அத்துடன் ரூ. 96,550,000.00 (தொண்ணூற்றாறு மில்லியன் ஐந்நூற்று ஐம்பது ஆயிரம் ரூபாய்கள்) மீது ஆண்டுக்கு இருபது தசம் ஏழு பூச்சியம் (20.70%) வீதத்தில் 2023.08.15 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட 2021.10.15 திகதியிட்ட ஈட்டு முறி இல. 743 இன் பேரில் நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது ரூ. 55,440,700.00 (ஐம்பத்து ஐந்து மில்லியன் நாநூற்று நாற்பது ஆயிரத்து எழு நூறு ரூபாய்களும்) மற்றும் தவணைக் கடன் மீது ரூ. 115,490,549.05 (நூற்றுப் பதினைந்து மில்லியன் நாநூற்றுத் தொண்ணூறு ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது ரூபாய்களும் ஐந்து சதங்களும்) அத்துடன் 2023.08.15 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நுகேகொடை அதிமேற்தரக் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட அட்டவணை.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லே பற்றுவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை, பிரதேச செயலகப் பிரிவில், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைகளுள் நாவல கிழக்கு கிராம சேவகர் பிரிவு இல. 520B இல் நாவல கிராமத்தில் அமைந்த நாவல றோட், வரி மதிப்பிலக்கம் 196 ஐக் கொண்ட "தெல்கஹவத்த மற்றும் பெலென்கஹவத்த அல்லது அருசியா எஸ்டேட்டின் வெலிஹேன்துடுவகுருந்து வத்த பாகம்" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.எம். எஸ்.அத்தநாயக்க தயாரித்த 2017 மே 23 திகதியிட்ட வரைபடம் இல. 5199 இல் காணித்துண்டு இல. 1 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் பி.எஸ் . யாப்பா உரிமை கோரும் நாவல றோட், வரி மதிப்பு இல. 198 உம், கிழக்கில் எச்.பி ரத்நாயக்க உரிமை கோரும் நாவல றோட் வரி மதிப்பு இல. 198/15 உம், தெற்கில் எம். மாக்ரெட் பீரிஸ் உரிமை கோரும் நாவல றோட், வரி மதிப்பு இல. 196/1 உம், மேற்கில் நாவல றோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 5199 இன் பிரகாரம் பதினெட்டு தசம் ஒன்று ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0,பே. 18.15)அல்லது ஹெக்டெயார் 0.0459 விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும்.

மேற்கூறிய காணித்துண்டு 1 கீழ் விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்ட நாவல கிராமத்தில் அமைந்த "தெல்கஹவத்த மற்றும் பெலென்கஹவத்த அல்லது வெல்ஹேன்துடுவகுருந்து வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.எப். சமீர் தயாரித்த 1980 செப்டெம்பர் 02 திகதியிட்ட வரைபடம் இல. 2360 இல் காணித்துண்டு 4A என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் பி.எஸ். யாப்பா உரிமை கோரும் நாவல றோட், வரி மதிப்பு இல. 198 ஐக் கொண்ட நிலமனையும், கிழக்கில் எச்.பி. ரத்நாயக்க உரிமை கோரும் நாவல றோட், வரி மதிப்பு இல. 198/15 ஐக் கொண்ட நிலமனையும், தெற்கில் எம். மாக்ரெட் பீரிஸ் உரிமை கோரும் நாவல றோட், வரி மதிப்பு இல. 196/1 ஐக் கொண்ட நிலமனையும் மேற்கில் நாவல றோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2360 இன் பிரகாரம் பதினெட்டு தசம் ஒன்று ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.18.15) அல்லது ஹெக்டெயார் 0.0459 விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நுகேகொட தெல்கந்த காணிப்பதிவகத்தில் A398/15 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திருமதி H.T.S. மொஹொட்டி**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**அதிமேற்தரக் கிளை**
**நுகேகொடை.**

1975 BOC www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# போதனா வைத்தியசாலை – இரத்தினபுரி

## 2024ம் ஆண்டிற்கான கட்டிடங்களைப் பராமரித்தல்

**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

01. இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரால் கீழ்க்காணுமாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்துள்ள தகைமையுள்ள மற்றும் திறன் உடைய கட்டிட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ரூபா. இரண்டு மில்லியன் பெறுமதிக்கு (ரூ. 2,000,000.00) மேற்படாத ஒப்பந்தங்களுக்காக முன் தகைமை ஆவணங்களைப் பரீட்சித்து பதிவு செய்துகொள்வதற்காக அழைப்பு விடுக்கப்படுகின்றது.
02. முன் தகைமை ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூபா. 3500.00 ஐ வைத்தியசாலை காசாளர் பிரிவிற்கு காசாக செலுத்திய பின்பு பணிப்பாளர் பணிமனையில் 2023.11.16 முதல் 2023.12.12 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கிடையிலான காலத்திற்குள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. பூர்த்தி செய்யப்பட்ட முன் தகைமையுடனான விண்ணப்பங்கள் இரு பிரதிகளாக 2023.12.13 மு.ப 10.30 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, இரத்தினபுரி என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களுடன் பொறியிடப்பட்ட மூல உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கட்டிடங்களைப் பராமரித்தல் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் - 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

| தொடர் இல. | உருப்படி | தகைமை | மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 2024ம் ஆண்டிற்காக இரத்தினபுரி போதனா வைத்தியசாலை மற்றும் தாதியர் கல்லூரிக்கு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் | கட்டிட நிர்மாணத்திற்காக குறைந்தபட்ச தகைமை C9 மற்றும் மின் பழுதுபார்த்தலுக்காக குறைந்தபட்ச தகைமை EM5 | ரூ. 3,500.00 |

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி : 045-2224490 மூலம் கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். முன் தகைமை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**
**2023.11.14**

# உடபலாத பிரதேச சபை

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் தகைமை பெற்ற நிபுணர்களை பதிவு செய்தல்

உடபலாத பிரதேச சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு 2024ஆம் வருடத்தில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் இந்த அறிவித்தல் பிரசுரமான திகதி முதல் 2024.01.15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இயைபுடைய விடயங்களின் பிரகாரம் பதிவு செய்துகொள்வதற்கு ஆர்வம் காட்டும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக தங்களாலே தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுக் கட்டணமாகிய பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கு 1000.00 ரூபாவையும் சேவைகளுக்கு 1250.00 ரூபா தொகைக்கான காசுக்கட்டளை அல்லது காசோலையை தலைவர், / செயலாளர், உடபலாத பிரதேச சபை, தெல்பிட்டிய, அடபாகே, கம்பொல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்கள் 0812352218 தொலைபேசி ஊடாக விசாரித்து அறிந்து கொள்ள முடியும்.

2023-11-11 **ஆம் திகதி**
**உடபலாத பிரதேச சபையில்.**

**செயலாளர்,**
**உடபலாத பிரதேச சபை.**

**அலுவலக உபகரணங்கள் - பதிவுக் கட்டணம் ரூ. 1000.00**

| | |
|---|---|
| 01 | கட்டிடப் பொருட்கள் (கருங்கல், மணல், சீமெந்து, செங்கல், கூரைத்தகடு, அஸ்பெஸ்டஸ் சீட், ஏனைய நிர்மாண பொருட்கள்) |
| 02 | சுகாதார உபகரணங்கள், குப்பை வண்டி, வீல்பெரோ, சவல், மண்வெட்டி, முள்ளு, தாச்சி, கத்தி, தும்புத்தடி, விளக்குமாறு மற்றும் ஏனையவை |
| 03 | கணனி மற்றும் அச்சுப்பொறி உட்பட அனைத்து கணனி துணைப்பாகங்கள் வழங்குதல். |
| 04 | மரம் மற்றும் உருக்கு உபகரணங்கள் வழங்குதல் (வீடு / அலுவலகம் |
| 05 | அலுவலக உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் |
| 06 | வீதி விளக்கு மற்றும் அனைத்து வகையான மின்சார உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் வழங்குதல் |
| 07 | நீர் உபகரணங்கள் |
| 08 | காகிதாதிகள் |
| 09 | அனைத்து வகையான அச்சு வேலைகள். |
| 10 | புளொக், இறப்பர் முத்திரைகள் போன்றன |
| 11 | பெயர்ப் பலகை. இலக்கத் தகடு, பெனர், ஞாபகச் சின்னங்கள் (பித்தளை / கருங்கல்.) |
| 12 | சைக்கிள், வண்டி, வரிப்பண இலக்கத் தகடு. |
| 13 | சீருடை, மற்றும் ஏனைய துணி வகைகள். |
| 14 | டயர், டியுப் இறப்பர் பொருட்கள் மழை அங்கிகள், கையுறை. |
| 15 | கம்பூட்ஸ், சப்பாத்து மற்றும் தோற் பொருட்கள் |
| 16 | புஸ்ஸல்லாவ தகனச்சாலைக்குத் தேவையான எரிவாயுவை குறித்த இடத்திற்கு வழங்குதல். |
| 17 | இரும்பு, உருக்கு, முறுக்குக்கம்பி, போன்ற அனைத்து உலோகப் பொருட்கள் |
| 18 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள். |
| 19 | கொங்கிறீட் உற்பத்திகள் (தூண்கள், மலர்ச் சாடிகள், குப்பைத் தொட்டிகள் உட்பட அனைத்து வகையான கொங்கிறீட் உற்பத்திகள்) |
| 20 | மருந்துகள் வழங்குதல் (மருந்து வகைகள், செனிடைசர் உட்பட துப்புரவேற்பாட்டுப் பொருட்கள்) |
| 21 | சக்கைக் கல் வழங்கல். |
| 22 | கண்ணாடி மறைப்புகள் மற்றும் கண்ணாடி வழங்குதல் |
| 23 | மட்பாண்டப் பொருட்கள் வழங்குதல் |
| 24 | குப்பைகளை சேகரிப்பதற்கான கொம்போஸ்ட் பைகள் வழங்குதல் |
| 25 | நீர் சுத்திகரிப்புக்குத் தேவையான குளோரின் வழங்குதல் |

**சேவைகள் - பதிவுக் கட்டணம் ரூபா 1250.00**

| | |
|---|---|
| 01 | வாகன திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்தல் (நிறுவனம் மற்றும் நிபுணர்கள்) |
| 02 | ரோனியோ இயந்திர திருத்தவேலை நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள். |
| 03 | தட்டச்சுப் பொறி திருத்தவேலை நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள். |
| 04 | புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள் |
| 05 | தச்சுத் தொழில் நிறுவனம் மற்றும் மர ஆலை அனுபவமுள்ள தச்சு தொழிலாளர்கள். |
| 06 | உலோகப் பொருட்கள், இரும்பு மற்றும் உருக்கைப் பயன்படுத்தி பொறியியல் ரீதியான வேலைகள் செய்யக் கூடிய நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள். |
| 07 | கட்டிட மின்சார முறைமை அமைத்தல் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள். |
| 08 | வெல்டிங் தொழில் நிறுவனம் மற்றும் நிபுணர்கள். |
| 09 | கணனி திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்யும் நிறுவனம் அந்த அறிவுள்ள தகைமை பெற்ற நிபுணர்கள். |
| 10 | டயர்களை மீள நிரப்பும் நிறுவனம். |
| 11 | கனரக வாகனம் வழங்கல் (பெகோ இயந்திரம், புல்டோசர்) |
| 12 | தகனச்சாலை தொடர்பான வேலைகள் செய்யக் கூடிய நிறுவனம் மற்றும் அனுபவமுள்ள தகைமை பெற்ற நிபுணர்கள். |
| 13 | காணிகள் அளத்தல் சம்பந்தமான தகைமை பெற்ற நிபுணர்கள். |
| 14 | நீர் மோட்டார் திருத்தவேலை நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற நிபுணர்கள். |
| 15 | மதிப்பீடு செய்யப்பட்ட நியமக் குறியீடுகளுக்கு அமைவாக நிர்மாணம் மற்றும் சேவை வழங்கக் கூடிய தகைமை பெற்ற ஒப்பந்தக்காரர்கள். |
| 16 | ஒலிபெருக்கி இயந்திரங்கள், மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் வழங்குதல் |
| 17 | வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல் (வேன் வாகனம், முச்சக்கர வண்டி, கெப் வாகனம், லொறிகள், ஆகியன.) |
| 18 | தையற்காரர் சேவை வழங்கல் |
| 19 | புகைப்படங்கள் பிரேம் இடுதல் |
| 20 | குப்பை போக்குவரத்து டிராக்டர், டிரெயிலர் மற்றும் கை வண்டிகளின் திருத்தவேலைகள் |
| 21 | உணவு பானங்கள் போன்றன வழங்கல் |
| 22 | சலவை சேவைகள் தொடர்பான தகுதிவாய்ந்த நிபுணர்கள் |
| 23 | தீயணைப்பு உபகரணங்களை மீள் நிரப்புதல் தொடர்பில் தகைமை வாய்ந்த நிறுவனம் |

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

113
சுசூகி கார்கள் விற்பனைக்கு
CAA-8783 SUZUKI ALTO, 2013, CAR அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 075128

122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு
QU-5554 BAJAJ, 2009, QR-6951 BAJAJ, 2008, THREE-WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711210810. 075054
YG-4750 BAJAJ, 2010, THREE WHEEL அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0705999163. 075047

Repeat Your Ad For Better Offers

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

**கேள்விகோரல்**

## தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு டபிள் கெப் 20, வேன் 06 மற்றும் மோட்டார் கார் 01 வாடகைக்கு வழங்கும் அடிப்படையில் வழங்குதல் சம்பந்தமான பெறுகை

### IFB இல - S2/A3/2023/10

தேசிய கணக்காய்வு அலுவலகம் சார்பாக பெறுகைக் குழுவின் தலைவரால் கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ளவாறு வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு டபிள் கெப் 400WD 20, வேன் 06 மற்றும் மோட்டார் கார் 01 பெற்றுக்கொள்ளல் சம்பந்தமான பெறுகைக்காக தகைமையுள்ள, துறையில் அனுபவம் பெற்றுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்விதாரர்கள் கீழ்க்காணும் தகைமைகள் கொண்ட குறைந்தபட்ச தகவுத்திறனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - கேள்விதாரர் வாகனங்களின் உரிமையாளர் ஆவதுடன், வாகன உரிமையாளர்கள் இலங்கையில் உள்ள உலகப் புகழ்பெற்ற வாகன குழு நாமங்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள், இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்துள்ள நிதி நிறுவனங்கள் அல்லது மோட்டார் வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் சேவை நிறுவனங்கள் (அதாவது மோட்டார் வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் கம்பனிகள்) ஆக இருப்பதுடன் அவ்வியாபாரம் வியாபார பெயர் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது கம்பனிகள் கூட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும். வாகன மொடல் 2016 ஆண்டிற்குப் பின்னரான வருடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மிகவும் சிறந்த ஓட்ட நிலையிலான வாகனமாக இருத்தல் வேண்டும்.
   - தேர்தெடுக்கப்படும் குறைந்தபட்ச கேள்விதாரரால் பரீட்சிப்பதற்காக வாடகைதாரரால் தீர்மானிக்கப்படும் இடத்தில் வாகனத்தை வழங்குதல் வேண்டும்.
3. கேள்வி வைத்தல் தேசிய பெறுகை வழிகாட்டல்களில் தரப்பட்டுள்ள தேசிய போட்டி கேள்வி வைத்தல் (NCB) முறைமையின் ஊடாக இடம்பெறுவதுடன், வழிகாட்டல்களில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமையுள்ள சகல கேள்விதாரர்களுக்கும் கேள்வி வைத்தல் திறக்கப்பட்டுள்ளது.
4. ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய கேள்விதாரர்களுக்கு, 2023 நவம்பர் 17 முதல் வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணிவரை பிரதி கணக்காய்வாளர் (ITP) இடம், தொ.பே.இல: +94112887037 ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சித்தல் மாத்திரம் கேள்வி ஆவணம் NAO இணையதளத்தில் (http://www.auditorgeneral.gov.lk) ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. வியாபார கடிதத் தலைப்பில் எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து மற்றும் இலங்கை ரூபா. 3000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்பு, ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத்தொகுதியை கொள்வனவு செய்ய முடிவதுடன் கொடுப்பனவு விடயங்களை காசாக மேற்கொள்ளல் வேண்டும்.
6. கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ளவாறு சாரதிகள் மற்றும் எரிபொருள் இன்றி வாடகைக்குப் பெறும் அடிப்படையில் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.
7. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மற்றும் தேவைப்படும் ஆவணங்களை 2023 டிசம்பர் 08 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன் பத்தரமுல்ல, பொல்துவ வீதி இல. 306/72 எனுமிடத்தில் அமைந்துள்ள தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் முதலாம் மாடியில் அறை இல. 101 இற்கு அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் 2023 டிசம்பர் 08ம் திகதி 14.00 மணிக்கு சமுகமளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். சகல கேள்வியுடனும் டபிள் கெப் வாகனத்திற்கு இலங்கை ரூபா. முப்பத்தைந்தாயிரம் (ரூ. 35000.00) உம், வேன் இற்கு மற்றும் மோட்டார் கார் இற்கு இலங்கை ரூபா இருபத்தைந்தாயிரம் (ரூ. 25000.00) இற்கு குறையாத கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்திருத்தல் வேண்டும். இக்கேள்விப் பிணை கணக்காய்வாளர் நாயகம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பெயரில் 2024.03.09 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தேசிய கணக்காய்வு அலுவலகம்,**
**இல. 036/72, பொல்தூவ வீதி**

www.adz.lk
it's what you want

## பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி

# பாதுகாப்பு சேவைக்காக கேள்வி பத்திரங்கள் கோரல்

கீழ்காணும் சேவைக்காக முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் கேள்விச்சபையின் தலைவரால் 2023 டிசம்பர் மாதம் 05ம் திகதி மு.ப.10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே மு.ப.10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் அல்லது அவரின் சார்பாக ஒருவர் கட்டாயமாக அன்றைய தினம் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

02. தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் விபரங்கள் பின்வறுமாறு.

**(அ) பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் - 01**
**(ஆ) சிரேஸ்ட பாதுகாப்பு அலுவலர்கள் - 03**
**(இ) பாதுகாப்பு ஊழியர்கள் (ஆண்கள்) - 13**
**(ஈ) பாதுகாப்பு ஊழியர் (பெண்கள்) - 02**

03. தெரிவு செய்யப்படும் கேள்வி மனுதாரர் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(அ) பாதுகாப்பு சேவை ஊழியர்கள் அனைவரும் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டியதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களுக்கு தங்கள் நிறுவனத்தினால் கடமை பொறுப்பேற்க முன்னர் சீருடை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பிரதான பாதுகாப்பு அலுவலரும்,சிரேஸ்ட பாதுகாப்பு அலுவலர்களும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சிறப்புத்தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) உணவும் தங்குமிட வசதியும் எந்தவொரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட மாட்டாது.

(ஈ) பன்னிரண்டு (12) மணித்தியாலங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் இரண்டு (02) பணி சுழற்சிகள் இருக்க வேண்டும்.

(உ) தெரிவு செய்யப்படும் கேள்வி மனுதாரர் மீளளிக்கப்படும் ஒப்பந்த பணமாக ரூபா ஒரு மில்லியன்(ரூபா 1,000,000.00) ஐ ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பதிவாளர் நாயகத்திடம் வைப்பிலிட வேண்டும்.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட கேள்வி மனுதாரரின் சேவை ஒரு வருட காலம் மாத்திரமே (365 நாட்கள்)

(எ) இதைத் தவிர பாதுகாப்புச் சேவை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை திருப்திகரமான முறையில் நிறைவேற்ற வேண்டும்.

04. சம்பள கட்டுபாட்டுச் சபை கட்டளைச் சட்டத்திற்கு ஏற்புடைய மற்றும் திருப்திகரமான சேவை வரலாற்றைக் கொண்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

05. தங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வி மனுவை ஏற்றுக்கொள்ளல் தொடர்பான முழு அதிகாரமும் ஸ்ரீபாத தேசியகல்வியியற் கல்லூரியின் கேள்வி மனு குழுவிற்கே உரித்துடையதாகும்.

06. கேள்விப் படிவத்தை மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு பணம் ரூபா 6000/= னை செலுத்தி ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரியின் பதிவாளரிடம் 2023 டிசம்பர் மாதம் 04ஆம் திகதி பி.ப.2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**பீடாதிபதி**
**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி**
**பத்தனை.**

## சுகாதார அமைச்சு

# ஆதார வைத்தியசாலை அக்கரைப்பற்று

## வழங்குநர்களை பதிவு செய்தல் 2023

கீழ்வரும் பொருட்கள், சேவைகளைப் பெற வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் உற்பத்தியாளர்கள் / முகவர்கள் / வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனங்கள் / அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார தாபனங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார்களிடமிருந்தும் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் "தவிசாளர், பெறுகைக்குழு, ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று" என்ற முகவரிக்கு 2023.12.13ம் திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செயதல் - 2023" என குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

| இல | பொருட்கள் / வழங்கல் |
|---|---|
| 01 | எல்லா வகையான காகிதாதிகளும் ii. நிழற்பிரதி செய்யும் இயந்திரத்துக்கான மை கொள்கலன்கள் (cartridges), iii. இலத்திரனியல் அச்சு இயநதிரத்துக்கான மை கொள்கலன்கள் (Toner),கணனி அச்சு இயந்திரத்துக்கான பட்டிகள் (ribbons) மற்றும் ஏனைய தேவையான பொருட்கள், நிழல் பிரதி இயந்திரத்திற்கான (Toner) |
| 02 | மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் மற்றும் எல்லா வகையான அலுவலக தளபாடங்களும் (உலோக / உருக்கு, மற்றும் மரம்) கணனிகள், laptops, அச்சு இயந்திரங்கள் (printers), நிழற்பிரதி செய்யும் இயந்திரங்கள் Photocopy), தொலைநகல் இயந்திரங்கள் (fax),மற்றும் உதிரிப்பாகங்களும் மின்னனு பொருட்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் |
| 03 | கட்டிடப் பொருட்கள், i. நீர் குழாய் இணைப்புப் பொருட்கள், மின் இணைப்பு உபகரணங்கள் ii. அலுமினிய கட்டிடப்பொருட்கள், iii. இரும்புப்பட்டம், பார் மற்றும் ஏனையவை. தீந்தை, தீந்தை பூசுவதற்கான உபகரணங்கள், கலவைகள், தூரிகைகள்., காற்றுச் சீராக்கிகளும் குளிர் சாதனப் பெட்டிகளும். |
| 04 | ஆய்வுகூட பரிசோதனை பொருட்களும் திரவியங்களும். பிராண வாயு மற்றும் வைத்திய நுகர்வுப் பொருட்கள் |
| 05 | ஆரோக்கிய நுகர்வுப்பொருட்கள் (சவர்க்காரம், சலவைத்தூள், விம், மின்கலம், கை மற்றும் கார் கழுவும் திரவம், கழிவுப்பை, நுளம்பு வலை தொற்று நீக்கிகள்) பொதுவான களஞ்சிய பொருட்கள், சமையல் அறை உபகரணங்கள். |
| 06 | i. வாகன பற்றரிகளும் ii. டயர்களும் டியூப்களும் |
| 07 | இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் அறிவித்தல் பலகைகள், அச்சு வேலைகள் மற்றும் வில்லை உறைகள். |
| 08 | எல்லா வகையான துணிகளும் திரைச்சீலைகளும். |
| 09 | சப்பாத்துக்களும் (shoes) சத்திர சிகிச்சைக்கூட சப்பாத்துக்களும். |
| 10 | வைத்தியசாலைக் கட்டில்கள், பெட்டகங்கள்(Lockers), தள்ளுவண்டிகள்(Trolleys), மெத்தைகள், கால் தட்டிகள் போன்ற விடுதிகளுக்குத் தேவையான ஏனைய பொருட்கள் |
| | **சேவைகளும் திருத்தங்களும்** |
| 11 | LP Gas |
| 12 | கண்காணிப்பு கமரா திருத்தவேலையும் பராமரிப்பும். |
| 13 | 500KVA மின் பிறப்பாக்கி திருத்தவேலையும் பராமரிப்பும். ஏனையமின் பிறப்பாக்கி |
| 14 | குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம் திருத்தவேலை. |
| 15 | i. கணனி ii. தொலைநகல் இயந்திரம் iii. தையல் இயந்திரம் iv. பிரதியெடுக்கும் இயந்திரம் மற்றும் Duplicator v. தொலைக்காட்சி போன்றவற்றுக்கான திருத்த வேலைகளும் பராமரிப்பு, அச்சு இயந்திரம் |
| 16 | ஆய்வுகூட, சத்திர சிகிச்சை மற்றும் இணைந்த வைத்தியசாலை மருத்துவ உபகரணங்கள் திருத்த வேலை. |
| 17 | நீர் ஏற்றும் இயந்திரம் மற்றும் எல்லா மின் உபகரணங்களுக்குமான திருத்தம். |
| 18 | கட்டிடம் திருத்தல் மற்றும் புதுப்பித்தல் வேலை. கட்டிட மின் இணைப்பு திருத்த வேலை. |
| 19 | அலுமினிய பொருத்து வேலை. |
| 20 | மரத் தளபாட வேலைகள் |
| 21 | வாகனப் பராமரிப்பு. (servicing) வாகனத் திருத்த வேலை. |
| 22 | இறந்த உடல்களை கொண்டு செல்வதற்கான வாகனங்களை வாடகைக்கு வழங்குதல். |
| | **கழிவுப் பொருட்கள் சேகரித்தல்** |
| 23 | வைத்தியசாலையிலிருந்து பாவனைக்குதவாதென ஒதுக்கப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள், சேலையின் போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், 5L, 10L பிளாஸ்ரிக் கலன்கள், மரத்துண்டுகள், இரும்பு, கணனி, குளிரூட்டி போன்ற உபகரணங்கள, காட்போட் |
| | **ஒப்பந்த வேலைகள்** |
| 24 | கட்டிட ஒப்பந்த வேலைகள் |

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம் அல்லது ஆதார வைத்தியசாலையினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பத்தின் ஊடாக பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு பதிவிற்கும் தலா ரூபா 1000.00 வீதம் செலுத்த வேண்டும். செல்லுபடியான வியாபார பதிவுச்சான்று, வரி பதிவுச்சான்று, மீளளிக்கப்படாத தொகையினை செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். வைத்திய அத்தியட்சர், ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று எனும் பெயருக்குரிய காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வகை பதிவிற்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை,**
**அக்கரைப்பற்று.**
Tel: 0672277213/0672277213 -506

## ரம்பேவ பிரதேச சபை

# 2024ம் ஆண்டிற்காக சொத்துக்களை குத்தகைக்குவிடல் கேள்வி கோரல்

ரம்பேவ பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வர்த்தக நிலையங்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி கோரல்

1. மாதிரிகள் விநியோகித்தல் - 2023.11.17 முதல் 2023.12.06 பி.ப. 3.00 வரை (ரம்பேவ பிரதேச சபை)
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் - 2023.12.07 பி.ப. 04.00 வரை.
3. திறத்தல் - 2023.12.07 பி.ப. 4.15 இற்கு

கேள்வி கோரல் மாதிரிப் பத்திர கட்டணம் மற்றும் கேள்விக்கான பிணை வைப்பு கீழ்க்காணுமாறு அமையும்.

**அட்டவணை**

| தொடர் இல. | வியாபாரத்தின் பெயர் | குறைந்த பட்ச கேள்வி ரூ. | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூ. | படிவக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ரம்பேவ வாரச்சந்தை | 1,200,000.00 | 24.000.00 | 3,000.00 |
| 2 | பிஹிம்பியகொல்லேவ வாரச்சந்தை | 20,000.00 | 1,000.00 | 3,000.00 |
| 3 | இக்கிரிகொல்லேவ மாட்டிறைச்சிக்கடை | 1,500,000.00 | 30,000.00 | 3,000.00 |
| 4 | சாலாம்பபுர மாட்டிறைச்சிக்கடை | 850,000.00 | 17,000.00 | 3,000.00 |
| 5 | தல்கஹவெவ மாட்டிறைச்சிக்கடை | 625,000.00 | 12,500.00 | 3,000.00 |
| 6 | கொலின்பெந்தவெவ மாட்டிறைச்சிக்கடை | 500,000.00 | 10,000.00 | 3,000.00 |

இக்கேள்வி கோரல் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுத்தல் ரம்பேவ பிரதேச சபை கேள்விக் கமிட்டிக்கு உரியது. இது சம்பந்தமாக ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படின் 025-2266606 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள்.

**எஸ்.டீ. ஜயவர்தன**
**செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**ரம்பேவ பிரதேச சபை,**
**ரம்பேவ.**

NLB
NATIONAL LOTTERIES

# தேசிய லொத்தர் சபை

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**தேசிய லொத்தர் சபைக்காக 20,000 எண்ணிக்கையான விற்பனை உதவியாளர் டீ-சேர்ட்கள், 1,350 எண்ணிக்கையான ஊழியர் டீ-சேர்ட்கள், 1,000 எண்ணிக்கையான வாடிக்கையாளர் ஊக்குவிப்பு டீ-சேர்ட்கள், 8,125 எண்ணிக்கையான ஆடவர் குடைகள், 2,000 எண்ணிக்கையான மகளிர் குடைகள், 610 எண்ணிக்கையான அலுவலகப் பைகள், 12,000 எண்ணிக்கையான கீ டெக்குகள், 26,000 எண்ணிக்கையான பொலிப்ரொப்பிலீன் பைகளை வழங்குவதற்கான பெறுகை**

01. தேசிய லொத்தர் சபைக்காக கீழ் குறிப்பிடப்பட்ட உருப்படிகளின் வழங்கலுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய லொத்தர் சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

02.

| உருப்படி | விலைமனு இலக்கம் | அளவு | விலைமனு பிணை (ரூபா) | ஆவணக் கட்டணங்கள் (ரூபா) (பெ.சே. வரியுடன் மீளளிக்கப்படாதது) |
|---|---|---|---|---|
| விற்பனை உதவியாளர் டீ-சேர்ட்கள் | NLB/PRC/05/T-Shirt/20230126 | 20,000 | 400,000.00 | 3,500.00 |
| ஊழியர் டீ-சேர்ட்கள் | NLB/PRC/04/ Casual Dress/20230057 | 1,350 | 60,000.00 | 1,000.00 |
| வாடிக்கையாளர் ஊக்குவிப்பு டீ-சேர்ட்கள் | NLB/PRC/04/C T-Shirt/20230120 | 1,000 | 18,000.00 | 1,000.00 |
| ஆடவர் குடைகள் | NLB/PRC/05/ GUMB/20230140 | 8,125 | 162,500.00 | 3,500.00 |
| மகளிர் குடைகள் | NLB/PRC/05/ LUMB/20230141 | 2,000 | 24,000.00 | 1,000.00 |
| அலுவலகப் பைகள் | NLB/PRC/05/ BAG/20230127 | 610 | 35,500.00 | 1,000.00 |
| கீ டெக்குகள் | NLB/PRC/18/Key Tags/20230139 | 12,000 | 54,000.00 | 1,000.00 |
| பொலிப்ரொப்பிலீன் பைகள் | NLB/PRC/09/ PB/20230128 | 26,000 | 52,000.00 | 1,000.00 |
| **விற்பனை உதவியாளர் டீ-சேர்ட்களின் ஆய்வுகூட சோதனைக்கான 28,584.69 ரூபாவை விலைமனுதாரர் செலுத்த வேண்டும் என்பதோடு விலைமனுவுடன் சேர்த்து அது தொடர்பான கொடுப்பனவின் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.** | | | | |

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

04. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, 01ஆவது மாடி, பெறுகைப் பிரிவு, உதவி பொது முகாமையாளர் (பெறுகை) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. 0114607020/ 0114607021/ 0114607023) என்பதோடு கீழ் குறிப்பிடப்பட்ட காலத்தில் எந்த ஒரு வேலை நாட்களிலும் **9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை** கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

05. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2023.11.17 ஆம் திகதி தொடக்கம் 2023.12.07 ஆம் திகதி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாள் ஒன்றில் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.

06. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.12.08 ஆம் திகதி 14.30 மணி அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது, நிராகரிக்கப்படும். நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, "கூட்ட அறை", 06ஆவது மாடியில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் நிறைவடைந்த பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் தரப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, தலைவரை பயனாளியாகக் குறிப்பிட்டு மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் மாத்திரம் வழங்கப்பட்ட மேலுள்ள 02 இன் கீழான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

07. வெற்றிகரமான விலைமனுதாரர் ஒப்பந்தப் பெறுமதியின் 10% செயல்திறன் பிணையை வழங்குதல் வேண்டும்.

08. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "....................... (உருப்படி பெயர்) இன் வழங்கலுக்கான விலைமனு மற்றும் "விலைமனு இலக்கத்தை" குறிப்பிட்டு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் ஆவணங்களை அனுப்புதல் வேண்டும்.

09. 610 எண்ணிக்கையான அலுவலகப் பைகளின் கொள்வனவு தொடர்பிலான விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபையில் 2023.11.30 ஆம் திகதி 14.00 மணிக்கு இடம்பெறும்.

10. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்ட விலைமனுதாரர்களினால் ஏற்படும் எந்த ஒரு செலவு அல்லது இழப்புக்காகவும் தேசிய லொத்தர் சபை பொறுப்பேற்காது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல. 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01.**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# பாக். அணித் தலைவர் பாபர் அஸாம் விலகல்



பாகிஸ்தான் அணித் தலைமை பொறுப்பில் இருந்து பாபர் அஸாம் விலகியதை அடுத்து அதன் டி20 அணித் தலைவராக ஷஹீன் ஷா அப்ரிடி நியமிக்கப்பட்டிருப்பதோடு டெஸ்ட் அணித் தலைவராக ஷான் மசூத் நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் ஒருநாள் அணித் தலைவரை பாக். கிரிக்கெட் சபை உடன் நியமிக்கவில்லை.

அணித் தலைமை பெறுப்பில் இருந்து அஸாம் இராஜினாமாவை அறிவித்ததை அடுத்து அவரை டெஸ்ட் அணித் தலைமை பொறுப்பில் தொடர்ந்து நீடிக்கும்படி பாக். கிரிக்கெட் சபை கேட்டபோதும் அதனை அவர் மறுத்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ணப் போட்டியில் சோபிக்கத் தவறியதை அடுத்து பாகிஸ்தான் அணியின் பணிப்பாளர் மிக்கி ஆத்தர் உட்பட ஒட்டுமொத்த பயிற்சியாளர்களும் நீக்கப்பட்டனர். முன்னாள் அணித் தலைவர் மற்றும் சகலதுறை வீரரான மொஹமட் ஹாபிஸ் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் எதிர்வரும் டிசம்பரில் இடம்பெறவுள்ள அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து சுற்றுப்பயணத்திற்கு புதிய பயிற்சியாளர் குழாம் நியமிக்கப்படவுள்ளது.

உலகக் கிண்ண போட்டியில் பாகிஸ்தான் அணி நான்கு வெற்றி ஐந்து தோல்விகளுடன் ஐந்தாவது இடத்தைப் பிடித்தது.

29 வயதான பாபர் அஸாம் 2019இல் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளுக்கு தலைவராக நியமிக்கப்பட்டதோடு தொடர்ந்து 2021 இல் டெஸ்ட் அணித் தலைவரானார்.

# சிட்னி மைதானத்தில் சமரியின் பெயரில் இருக்கை வளாகம்



இலங்கை மகளிர் அணியின் தலைவி சமரி அதபத்துவின் பெயரில் பிரத்யேக இருக்கை வளாகம் ஒன்று பிரபலமான சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் அமைக்கப்படவுள்ளது.

சமரி அதபத்து அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மகளிருக்கான பிக் பேஷ் லீக்கில் சிட்னி தண்டர்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றார்.

இதில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள சிட்னி சிக்ஸர்ஸ் அணிக்கு எதிரான போட்டியின் போது, சமரி அதபத்துவை கௌரவப்படுத்தும் நோக்கத்தில் சிட்னி மைதானத்தில் “சமரி பே” என்ற பெயரில் பிரேத்யேக இருக்கை வளாகம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக கிரிக்கெட்டில் பல்வகை கலாச்சாரங்களை உட்செலுத்துவதற்கும், இலங்கை கிரிக்கெட் ரசிகர்களுக்கு மறக்க முடியாத தருணங்களை உருவாக்கும் முகமாக சிட்னி தண்டர்ஸ் அணி நிர்வாகம் இந்த ஏற்பாடை செய்துள்ளது.

சிட்னி தண்டர்ஸ் அணிக்காக சிறப்பாக விளையாடி வரும் சமரி அதபத்து இதுவரையில் 9 போட்டிகளில் மாத்திரம் விளையாடி 41.55 என்ற சராசரியில் 374 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இதுவரையில் சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் எந்தவகை போட்டிகளிலும் விளையாடாத சமரி அதபத்து தன்னுடைய கன்னி போட்டிக்காக சிட்னி சிக்ஸர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை கிரிக்கெட்:

# கல்முனை ஸாஹிரா அணிக்கு முதல் போட்டியிலேயே வெற்றி



**மாளிகைக்காடு குறுப் நிருபர்**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நடாத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்குட்பட்ட பிரிவு மூன்று கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி அணி முதல் ஆட்டத்தில் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. காரைதீவு விபுலானந்த தேசிய பாடசாலை மைதானத்தில் தொடரின் முதலாவது சுற்றின் முதலாவது போட்டியில் ஏறாவூர் மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலை அணியை கல்முனை ஸாஹிறா எதிர்கொண்டது.

முதலில் துடுப்பபடுத்தாடிய ஏறாவூர் மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலை அணி 23.5 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 59 ஓட்டங்களை பெற்றது. பதிலெடுத்தாடிய கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அணி 6.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 60 ஓட்டங்களை எட்டியது.

# சம்பியனானது ஜொலிபோய்ஸ்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று சம்பியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரில் அக்கரைப்பற்று ஜொலிபோய்ஸ் விளையாட்டுப் கழகம் சகல போட்டிகளிலும் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை (13) நடைபெற்ற இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று ஜொலி போய்ஸ் அணியினரும், அக்கரைப்பற்று சம்பியன் அணியினரும் மோதினார்கள்.

## சர்வதேச செய்திகள்

# காசா மருத்துவமனைக்குள் இஸ்ரேல் தொடர்ந்து சுற்றிவளைப்பு நடவடிக்கை

## பலஸ்தீன போராளிகளுடன் உக்கிர மோதல்: உயிரிழப்பு 11,500ஐ தாண்டியது





காசாவின் மிகப்பெரிய மருத்துவமனைக்குள் ஊடுருவிய இஸ்ரேலிய துருப்புகள் அங்கு நேற்றும் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டதோடு அந்த மருத்துவமனைக்கு அருகாமையில் இஸ்ரேலிய படைகளுக்கும் பலஸ்தீன ஜிஹாத் போராளிகளுக்கும் இடையே கடும் மோதல் வெடித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இராணுவ டாங்கிகளுடன் அல் ஷிபா மருத்துவமனைக்குள் நுழைந்த இஸ்ரேலியப் படை அங்கு சுற்றிவளைப்பு தேடுதல்களில் ஈடுபட்டு வருகிறது. அந்த மருத்துவமனையை ஹமாஸ் போராளிகள் ஒரு கட்டளை மையமாகப் பயன்படுத்தியதாக இஸ்ரேல் சுமத்தும் குற்றச்சாட்டை அந்த அமைப்பு மறுத்துள்ளது.

அங்கு ஹமாஸ் சுரங்கப்பாதைகள் இருப்பதாக இஸ்ரேல் கூறிவந்த நிலையில் இரண்டாவது நாளாகவும் அந்த மருத்துமனையில் தீவிர சோதனையில் ஈடுபட்ட இஸ்ரேல் இராணுவம் அவ்வாறான சுரங்கப்பாதை ஒன்றை கண்டுபிடித்தது பற்றி எந்த விபரத்தையும் வெளியிடவில்லை.

“துருப்புக்கள் துல்லியமான, உளவுத்துறை அடிப்படையிலான முறையில் மருத்துவமனையில் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டுள்ளது” என்று இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் ரியர் அட்மிரல் டானியேல் ஹகரி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். எனினும் மருத்துமனையில் இருந்து ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் கட்டாரைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஹமாஸ் மூத்த உறுப்பினர் இஸ்ஸத் அல் ரஷ்க் இஸ்ரேலின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ளார். அதில் அவர், “ஆக்கிரமிப்புப் படை தொடர் பொய் கூறி வருகிறது. அவர்கள் சில ஆயுதங்கள், ஆடைகள் மற்றும் கருவிகளை மருத்துவனைக்குள் எடுத்துச் சென்று குற்றம்சாட்டும் நோக்கில் அங்கே வைத்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்பாளர்களின் இந்தப் பொய்களை ஐக்கிய நாடுகள், உலக சுகாதார அமைப்பு மற்றும் செம்பிறை சங்கம் சரி பார்க்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்” என்றும் தெரிவித்துள்ளார்.

காசாவில் இயங்கும் மற்றொரு பலஸ்தீன போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு மருத்துவமனை வளாகத்திற்கு அருகில் இஸ்ரேலிய படைகளுடன் தொடர்ந்து உக்கிர சண்டையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது. காசாவில் மேலும் இரு இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் உறுதி செய்துள்ளது.

22 வயதான கெப்டன் அசாப் மாஸ்டர் மற்றும் 22 வயதான கெப்டன் கிபிர் இன்சக் பிரான்கோ ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர். இதன்படி காசா மீது இஸ்ரேல் தரைவழி நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது.

மறுபுறம் காசா மீதான இஸ்ரேலிய வான் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்து நீடித்தது. மத்திய காசாவில் இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்தது 9 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் பலரும் அடைக்கலம் பெற்றிருக்கும் கான் யூனிஸ் பள்ளிவாசல் ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல்களில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதன்போது ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மைல் ஹனியேவின் வீட்டின் மீது இஸ்ரேல் குண்டு வீசியுள்ளது. குடியிருப்புப் பகுதி மீது இஸ்ரேலிய போர் விமானம் தாக்குதல் நடத்தும் வீடியோவை வெளியிட்டு இஸ்ரேல் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஹனியே கட்டாரை தளமாகக் கொண்டே இயங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இடைவிடாது நடத்தப்படும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 11,500ஐ தாண்டியுள்ளது. இதில் 4,710 சிறுவர்கள் மற்றும் 3,160 பெண்கள் அடங்குகின்றனர். மருத்துவ பணியாளர்களின் உயிரிழப்பு 200ஐ எட்டி இருப்பதாகவும் பலஸ்தீன சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 22 சிவில் பாதுகாப்பு பணியாளர்கள் மற்றும் 51 ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டிருப்பதோடு காயமடைந்தோர் எண்ணிக்கை 29,800ஆக அதிகரித்துள்ளது. இதில் 70 வீதமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

காசாவின் அரச ஊடக அலுவலகம் கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பின்படி, இஸ்ரேலிய தாக்குதல்களில் 95 அரச கட்டடங்கள், 255 பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன. சுமார் 74 பள்ளிவாசல்கள் முற்றாக அழிப்பட்டிருப்பதோடு மேலும் 162 பள்ளிவாசல்கள் பகுதி அளவு அழிக்கப்பட்டுள்ளன. தவிர மூன்று தேவாலயங்களும் தாக்கப்பட்டுள்ளன.

55 சுகாதார மையங்கள் மற்றும் 55 அம்புலன்ஸ்களை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி இருப்பதோடு அங்கு 25 மருத்துவமனைகள் செயலிழந்துள்ளன. இந்நிலையில் போருக்குப் பின் ஹமாஸ் அமைப்பு மீண்டெழுவதை தவிர்ப்பதற்கு குறுகிய எதிர்காலத்தில் காசாவில் வலுவான படை ஒன்று நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று இஸ்ரேலிய ஜனாதிபதி இசாக் அர்சொக் தெரிவித்துள்ளார். ஆனால் காசாவை ஆக்கிரமிப்பது பெரும் தவறு என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

“நாம் பின்வாங்கினால், பின்னர் யார் பொறுப்பேற்பது? நாம் இடைவெளி ஒன்றை விட முடியாது. பொறிமுறை ஒன்று பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பல ஆலோசனைகளும் கூறப்படுகின்றன” என்று எப்.டீ. பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஹெர்சொக் குறிப்பிட்டுள்ளார்.

“என்றாலும் இந்த காசாவை பயங்கரவாதத் தளமாக மாற்றுவதை யாரும் விரும்பமாட்டார்கள்” என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். போருக்குப் பின்னரான காசா தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் அமெரிக்கா மற்றும் அண்டை நாடுகளை தொடர்புபடுத்தி பொருக்குப் பிந்திய ஒழுங்கு பற்றி ஆலோசிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இஸ்ரேல் பலஸ்தீன பிரச்சினைக்கு இரு நாட்டு தீர்வே ஒரே வழி என்றும் காசாவை ஆக்கிரமிப்பது பெரும் தவறு என்றும் பைடன் புதனன்று தெரிவித்திருந்தார்.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் ஹமாஸ் அமைப்பு ஆட்சி புரிந்து வரும் காசா பகுதி என்பது எதிர்கால பலஸ்தீன நாட்டின் ஓர் அங்கமாகவே இருக்கும் என்று ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் சுயாட்சி புரிந்து வரும் பலஸ்தீன அதிகார சபை வலியுறுத்தியுள்ளது.

ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதாக சூளுரைத்திருக்கும் இஸ்ரேல், போருக்குப் பின்னரான காசாவின் எதிர்காலம் பற்றிய திட்டத்தை வெளியிடவில்லை. காசாவின் ஒட்டுமொத்த பாதுகாப்புக்கும் இஸ்ரேல் பொறுப்பாக இருக்கும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

## காசா தொடர்பில் ஐ.நா தீர்மானம்



காசாவில் அவசர மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கும் தீர்மானம் ஒன்று ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காசா தொடர்பில் இதற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட நான்கு தீர்மானங்கள் தோல்வியடைந்த நிலையில் நிறைவேற்றப்பட்டிருக்கு இந்தத் தீர்மானத்தில் காசா பகுதிக்கு உதவி விநியோகங்களை அனுமதிப்பதற்கும் மருத்துவ உதவிக்காக மக்களை அப்புறப்படுத்துவதற்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மோல்டாவினால் கடந்த புதன்கிழமை (15) கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு 12 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐக்கிய இராச்சியம் வாக்களிப்பதை தவிர்த்துக் கொண்டன.

இதில் போர் நிறுத்தம் ஒன்று பற்றி குறிப்பிடப்படவில்லை என்பதோடு ஹமாஸ் அமைப்புப் பற்றியும் எதுவும் கூறப்படவில்லை. இந்நிலையில் இந்தத் தீர்மானம் அர்த்தமற்றது மற்றும் யதார்த்தத்திற்கு புறம்பானது என்று ஐ.நாவுக்கான இஸ்ரேலிய தூதுவர் கிளாட் ஏர்டன் தெரிவித்துள்ளார்.

# அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்புவதற்கு எதிராக தீர்ப்பு




பிரிட்டனுக்கு உரிய ஆவணங்களின்றி வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பிவைக்கும் அந்த நாட்டு அரசின் சார்ச்சைக்குரிய திட்டம் சட்டவிரோதமானது என்று உச்சநீதிமன்றம் புதன்கிழமை அறிவித்துள்ளது.

இது, பிரிட்டனை நோக்கிய அகதிகள் படையெடுப்பைத் தடுப்பதாக உறுதியளித்துள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான அரசுக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ருவாண்டாவுக்கு அகதிகள் அனுப்பப்படுவது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த லண்டன் மேல்முறையீட்டு நீதிமன்றம், பிரிட்டனில் அடைக்கலம் தேடி வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பினால், அந்த நாடு அவர்களை பாதுகாப்பற்ற மூன்றாவது நாட்டுக்கு அனுப்பி வைக்கும் என்பதற்கான தர்க்கம் உள்ளது என்று கூறியது. இதனை உச்சநீதிமன்றமும் ஆமோதிக்கிறது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

எனவே, அகதிகளுக்கு ருவாண்டா பாதுகாப்பானது இல்லை என்ற அகதிகள் தரப்பு வாதத்தை நீதிமன்றம் ஏற்கிறது. இதன் மூலம், அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பி வைப்பதற்கான அரசின் முடிவு சட்டவிரோதம் என்று அறிவிக்கப்படுகிறது என்றும் அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பைடன்–ஷி சந்திப்பு



அமெரிக்க மற்றும் சீனத் தலைவர்கள் இரு நாட்டுக்கும் இடையிலான பதற்ற நிலையைக் குறைப்பதற்கு உறுதியளித்துள்ளனர்.

சான் பிரான்ஸிஸ்கோவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் சந்தித்தனர். சுமார் ஓராண்டுக்குப் பின்னர் இருவரும் முதல்முறையாக நேரில் சந்தித்துள்ளனர்.

இருதரப்புக்கும் இடையிலான விரிசல், மோதலாக மாறிவிடக்கூடாது என்று பைடன் கூறினார். அமெரிக்க–சீன இரு தரப்பு உறவு உலகிலேயே மிக முக்கியமானது என ஷி வர்ணித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் புறக்கணிக்க முடியாது என்றார் அவர்.

தாய்வான், வர்த்தகம், மத்திய கிழக்கு, உக்ரைன் போர், பருவநிலை மாற்றம் போன்ற விவகாரங்களில் இருதரப்புக்கும் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

பல மாத இராஜதந்திர முயற்சிக்குப் பின் இரு தலைவர்களும் சந்தித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# தினகரன் கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் (IFB)

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | வடிகால் அமைப்பு கட்டுமானம், மாத்தறை – அக்குரஸ்ஸ (2+000 – 3+000 km) வீதி ஒப்பந்த இல- RDA/MM/SP/GOSL/2023/40 |

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.11.17 ஆம் திகதி முதல் 2023.12.07 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை www.rda.gov.lk பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,





SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343



OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


## போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024

2024ஆம் வருடத்திற்காக இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து (உற்பத்தி நிறுவனங்கள்/ அதிகாரம் பெற்ற முகவர் நிறுவனங்கள் / ஏக விநியோகஸ்தர்கள் / அரச நிறுவனங்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. கணனிகள், கணனி துணைப்பாகங்கள், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி அச்சு மை மற்றும் கணனி ரிபன்கள்
02. புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் சகல வகைகளிலான காகிதாதிகள்
03. எக்ஸ்ரே படங்களை உள்ளிடும் உறைகள், சீடி உறைகள், மருந்து உறைகள், மெமொகிரபி அறிக்கைகள் உள்ளிடும் உறைகள்
04. சகல வகையான கிருமிநாசினித் திரவங்கள், சவர்க்காரம், சுத்திகரிப்புத் தூள்கள், சுத்திகரிப்புத் திரவங்கள்
05. குப்பைகள் போடும் பொலித்தீன் உறைகள்
06. அனைத்து வகையான துணிகள், சீருடைத் துணிகள், கட்டம் போட்ட துணிகள், திரைச்சீலைகள், ஜீ. எஸ். துவாய்கள், படுக்கை விரிப்புகள், மெகின்டோஸ், நுளம்பு வலைகள், சத்திரசிகிக்சை அங்கிகள், மேற்சட்டைகள், முன் மறைப்புகள்.
07. காலணிகள், Half Shoes, கம் பூட்ஸ்கள், கென்வாஸ் சப்பத்துகள், இறப்பர் செருப்புகள் போன்ற காலணிகள்
08. அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் - மரம், உருக்கு மற்றும் பதப்படுத்தப்பட்ட மரம்
09. அலுவலக உபகரணங்கள் - புகைப்படப்பிரதி இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், கல்குலேட்டர் போன்ற உபகரணங்கள்
10. தும்பு மெத்தைகள், இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள், பஞ்சுத் தலையணைகள், இறப்பர் நுரை மெத்தைகள், ரெக்ஸின் உறையுடன் கூடிய இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள்
11. மின்சார உபகரணங்கள் - வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள், மின் விசிறிகள், மின் கேத்தல்கள், கொதிகலன்கள், எலிமண்ட் போன்ற மின்சார உபகரணங்கள்
12. வாகனங்களுக்கான டயர், டியூப்கள் மற்றும் பெட்டறிகள்
13. வாளிகள், பிடிச்சட்டி, வீட்டுத்தோட்ட உபகரணங்கள், இரும்பு, கெல்வனைஸ், அலுமினியம், எனாமல் பொருட்கள், ய்பாண்டப் பொருட்கள், பிளாஸ்டிக் மற்றும் சகல சமையலறை உபகரணங்கள்
14. சவர அலகுகள்
15. சகலவகையான மின்சார பராமரிப்பு துணைப்பாகங்கள், மின் குமிழ்கள், வயர்கள் போன்றன
16. சகல வகையான கட்டிடப் பராமரிப்புப் பொருட்கள்
17. சகல வகையான நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள்
18. திரவ எரிவாயு (LP gas)
19. மருந்துகள்
20. மருந்து கட்டுத்துணிகள்
21. சத்திரசிகிச்சை உபகரணங்கள்
22. மருத்துவ உபகரணங்கள்
23. ஆய்வுகூட பொருட்கள்
24. ஆய்வுகூட உபகரணங்கள்.
25. மருத்துவ உபகரண உதிரிப்பாகங்கள்
26. சத்திரசிகிச்சைப் பொருட்கள்
27. நோயாளர் கட்டில்கள், நோயாளர் காவிகள், ட்ரொலி, உணவு கொண்டு செல்லும் ட்ரொலிகள், சக்கர நாற்காலிகள், சேலைன் ஸ்டேன்ட்கள், ஒட்சிசன் ஸ்டேன்ட்கள்
28. டிஜிட்டல் அச்சு வேலைகளுடனான பதாகைகள், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்டிக் பெயர்ப் பலகைகள்
29. சமைத்த உணவுகள்
30. பால்மா வகைகள்
31. மாற்று உடற்பாகம் மற்றும் செயற்கை உடற்பாகப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்

**சேவைகள்**

01. கட்டிட மின்சார திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
02. வளிச்சீராக்கி திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
03. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள்
04. கணனிகளுக்கான திருத்தவேலைகள்
05. வாகன திருத்தவேலைகள்
06. வாகனம் சேர்விஸ் செய்தல்
07. சமையலறைக்கான எரிவாயு அடுப்புகள், எரிவாயு முறைமைகளின் திருத்தவேலைகள்
08. போக்குவரத்து (மருந்துகள், ஒக்சிசன், குப்பைகள்)
09. கதிரை பின்னல்கள், பூச்சு வேலைகள், மினுக்கிகள் பூசுதல், ரெக்சின் மற்றும் போர்மிகா இடுதல்
10. ஆய்வுகூட உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள், வைத்தியசாலை உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரண திருத்தவேலைகள்
11. சலவை இயந்திரங்கள், உலர்த்தும் இயந்திரங்கள் போன்ற மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள்
12. பொதுமக்கள் தொடர்பு உபகரணங்களை பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல்
13. திணைக்கள அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
14. உரிமை கோரப்படாத சடலங்களை அகற்றுதல்
15. எரிவாயு கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள்
16. CCTV கெமரா பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள்

**நிபந்தனைகள்**

01. பதிவு செய்து கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு உருப்படிக்காகவும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா தொகையை வைத்தியசாலைச் சிறாப்பரிடம் வைப்புச் செய்ததன் பின்னர் வழங்கப்படும் பற்றுச்சீட்டை இங்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
02. 2023-11-20ஆம் திகதி முதல் 2023-12-19ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் சிறாப்பர் பிரிவில் பண வைப்புகளை மேற்கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
03. வருகை தந்து பணத்தைச் செலுத்த முடியாத வழங்குநர்கள் பணிப்பாளரின் பெயரில் இலங்கை வங்கியின் அதிமேற்தரக் கிளையில் பேணப்படும் 7040217 எனும் கணக்கிலக்கத்திற்கு 2023-12-19ஆம் திகதி வரையில் மட்டும் பணத்தை வைப்புச் செய்யலாம். (குறித்து பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்) பணத்தை வைப்புச் செய்யக்கூடிய இறுதி நாள் 2023-12-19ஆம் திகதி என்பதுடன் அந்தத் திகதியின் பின் பதிவுசெய்து கொள்வதற்காக பணம் வைப்புச் செய்யும் நிறுவனம் எக்காரணம் கொண்டும் பதிவுசெய்து கொள்வது தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.)
04. சகல விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் நேரில் கொண்டு வரும் விண்ணப்பப் படிவங்களை பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். 2023.12.20ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு விண்ணப்பங்கள் மூடப்படும்.
05. சகல விண்ணப்பதாரர்களும் பிராந்திய பெறுகைக் குழு மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு இணங்குதல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோருதல் அல்லது கோராமல் விடும் முழுமையான அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
06. மேலதிக விபரங்கள் அறிந்துகொள்வதற்கு மற்றும் தேவையற்ற தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு 045-2222261 (314) எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**

## விண்ணப்பப் படிவம்
### வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024

01. நிறுவனத்தின் பெயர்:..........
02. நிறுவனத்தின் முகவரி:..........
03. நிறுவனத்தின் தொலைபேசி இலக்கம்: .......... தொலைநகல் இல:
04. உரிமையாளர் / உரிமையாளர்களின் பெயர்: ..........
05. வியாபார பெயர்ப் பதிவிலக்கம்:..........
(சான்றுபடுத்திய பிரதியை இணைத்தல் வேண்டும்)
06. வெட் வரி செலுத்தும் நிறுவனமானால் அதன் இலக்கம்:..........
07. பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் உருப்படிகள்:..........

பொருட்கள்.......... சேவைகள்:..........

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவைம் சரியானவையும் என உறுதிப்படுத்துவதோடு அரசாங்கத்தின் மற்றும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு செயலாற்றுவதற்கு இணக்கம் தெரிவிக்கின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்:. ..........
திகதி:..........
**உத்தியோகபூர்வ முத்திரை**

# இலங்கை வங்கி

## இலங்கை வங்கி மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதியில் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.)

| இலங்கை வங்கி | நகைகள் அடகு வைக்கப் பட்டுள்ள காலப்பகுதி | மீட்பதற்கான இறுதித் திகதி | ஏல விற்பனைத் திகதியும் இடமும். |
|---|---|---|---|
| கம்பஹா மேற்தரக் கிளை<br>கடவத்தை மேற்தரக் கிளை<br>மீரிகமை மேற்தரக் கிளை<br>திவுலப்பிட்டிய<br>மினுவாங்கொட மேற்தரக் கிளை<br>கிரிந்திவெல<br>நிட்டம்புவ மேற்தரக் கிளை<br>வெயாங்கொடை<br>பட்டுவத்தை<br>கனேமுல்லை<br>நயிவலை<br>பூகொட<br>யக்கல<br>கடவத்தை 2ஆம் கிளை<br>துனகஹ | 2022.08.30 ஆம் திகதி வரை 12 மாதங்களுக்கும் 2022.08.30 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2023.12.15 | கடவத்தை 2ஆம் கிளை 2023.12.16 |
| நீர்கொழும்பு மேற்தரக் கிளை<br>ஜாஎல மேற்தரக் கிளை<br>எலகந்த<br>சீதுவை<br>ஆண்டியம்பலம<br>வத்தளை<br>வெலிசர<br>நீர்கொழும்பு நகரக்கிளை<br>கட்டுநாயக்க IPZ<br>ரத்தொலுகமை<br>போபிட்டிய<br>தெமன்ஹந்திய<br>மஹாஉனுப்பிட்டிய<br>கந்தானை | 2022.08.30 வரை 12 மாதங்களுக்கும் 2022.08.30 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2023.12.15 | ஜாஎல மேற்தரக் கிளை 2023.12.16 |
| பேலியகொட மேற்தரக் கிளை<br>கிரிபத்கொடை மேற்தரக் கிளை<br>கொலன்னாவை<br>எந்தரமுல்லை<br>வெலிவேரிய<br>தலுகம்<br>தெல்கொட<br>கொதட்டுவ புதிய நகர்<br>முல்லேரியாவை புதிய நகர்<br>பியகம<br>ராகமை<br>மாகொல | 2022.08.30 வரை 12 மாதங்களுக்கும் 2022.08.30 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2023.12.15 | ராகமை கிளை 2023.12.17 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏல விற்பனைகளை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை இலங்கை வங்கிக்குண்டு.

**இலங்கை வங்கி**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**(அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயற்பாட்டு வீச்சு - II)**
**தலைமை அலுவலகம், கொழும்பு 01.**
**தொலைபேசி 0112399568, 0112204545**


1975 BOC CALL CENTRE www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| C E S / F P / 0 3 / PT/6540(MP) | Spares for Cummins NTA 855 Engines fitted with Mitsui Paceco RTG Cranes | 200,000.00 | 3,500.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6541(MAR) | Spares for attending the repairs of main engine (Man B & W, 405-26V0) of Tug Indra | 150,000.00 | 3,500.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6543(EL) | Analog Input Output module for PLC system of JCT Cranes | 50,000.00 | 1,000.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6544(EL) | Input Output modules for PLC system of JCT Cranes | 50,000.00 | 1,000.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6547(MP) | 02 Nos. Break Thruster and 04 Nos. Repair Kit for Mitsui and ZPMC STS Cranes at JCT | 32,000.00 | 1,000.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6545(EL) | 06 Nos. 215 RIOR Communication Modules for PLC System of JCT Cranes | 75,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6546(MP) | Hydraulic components of Multifunction system of ZPMC STS at ECT | 70,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6548(MP) | 24 Nos. of complete Twist Lock Assy for Spreader of Mitsui RTG Cranes at JCT | 28,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| Ces/FP/02/ PT/6444(MAR) | Spares for Propeller Shaft Arrangements of the Pilot Launches pilot 17 & 18 | 28,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உப முகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவம்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 நவம்பர் 17 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள் : 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

## 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

### மாவட்ட செயலகம் – திருகோணமலை

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் அதனுடன் இணைந்த 11 பிரதேச செயலகங்கள் வரிசை அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கான 2024 ஆம் ஆண்டிற்கான வேலைகள், வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், முகவர் நிறுவனங்கள், விநியோகஸ்தர்கள், வர்த்தகர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 17.11.2023 முதல் 15.12.2023 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான விபரக்குறிப்புக்களையும், விண்ணப்பப்படிவங்களையும் மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இணையதளத்திலும் **(trincomalee.dist.gov.lk)** மற்றும் மாவட்ட செயலக கணக்கு கிளையிலும் அல்லது பிரதேச செயலகங்களின் கணக்குக் கிளைகளிலும் 14.12.2023 இற்கு முன்னர் அலுவலக நாட்களில் காலை 10.00 மணியிலிருந்து பி.ப.2.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 026-2223555 தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

**சாமிந்த ஹெட்டியாராச்சி**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்**
**திருகோணமலை மாவட்டம்.**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## D N P Garments Lanka (Pvt) Ltd – PV 8628
**(Under Creditors Voluntary Liquidation)**

### கலைப்பாளரின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 338 ஆம் பிரிவின் கீழான கடனாளிகளின் கூட்டம் தொடர்பாக அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 338ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறான நோக்கத்திற்காக பின்வரும் சாதாரண தீர்மானமானது உரிய முறையில் 2023 நவம்பர் 15 ஆம் திகதியன்று பி.ப. 4 மணிக்கு கொழும்பு-06, ஹவ்லொக் வீதி, 291/2 ஆம் இலக்கத்தில் உரிய முறையில் கூட்டப்பட்டு நடைபெற்ற மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கடனாளிகளின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 338 ஆம் பிரிவின் பிரகாரம், Ms கீதாஞ்சலி சேகரத்தின் பதவி விலகல் காரணமாக உருவாக்கப்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக கம்பனியின் முடிவுறுத்தலின் நோக்கத்திற்காக கொழும்பு-12, நீதிமன்ற வீதி, 38ஆம் இலக்கத்திலுள்ளவரும் 622001209V என்ற இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டையையுடையவருமான பட்டயம் பெற்ற கணக்காளரான திரு. மொஹமெட் சுஹைர் மொஹமெட் அஷ்ரவ் என்பவரை கலைப்பாளராக இத்தால் நியமிக்கப்பட்டுள்ளாரென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கலைத்தல் தொடர்பாக கணக்காய்வு செய்யப்பட்ட டி என் பி கார்மெண்ட்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட் இன் கணக்குகள் அல்லது டி என் பி கார்மெண்ட்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட் இன் வேறேதாவது ஆவணங்களை கையொப்பமிடவும் அங்கீகாரம் இத்தால் வழங்கப்பட்டுள்ளது.

2023 நவம்பர் 16 ஆம் திகதியாகிய இன்று திகதியிடப்பட்டது.

**பணிப்பாளர்கள் சபை,**
**டி என் பி கார்மெண்ட்ஸ் லங்கா பீவீடி எல்டிட,**
**(Under Creditors Voluntary Liquidation)**

## கல்நேவ பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

கல்நேவ பிரதேச சபைக்குச் சொந்தமான வர்த்தக உரிமைகளை 2024ம் ஆண்டிற்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக உங்களது கேள்வி விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் செயலாளர், கல்நேவ பிரதேச சபை, கல்நேவ என்ற முகவரிக்கு, அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

02. கேள்வி விண்ணப்பங்களை 2023.11.20 முதல் 2023.12.07 பி.ப 3.00 வரை பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2023.12.08 மு.ப 10.00 இற்கு முடிவடைவதுடன், கேள்விகள் திறத்தல் அன்றே மு.ப 11.00 முதல் கல்நேவ பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும்.

03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை இப் பிரதேச சபைக்கு உரியது. குறித்த கேள்வி நிபந்தனை கோவை மற்றும் ஏனைய விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம் : 025 - 2269575**
**025 - 2269127**

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**கல்நேவ.**

## சுகாதார அமைச்சு

### போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு

### 2024 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

2024 ஆம் ஆண்டுக்காக இந்த மருத்துவமனையின் கீழ் பதிவு செய்வதற்கு அரசு அங்கீகரித்த வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் நபர்கள் உட்பட உற்பத்தியாளர்கள்/ முகவர்கள்/ பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்/ கூட்டுத்தாபனங்களிடம் இருந்து பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பங்களை 2023.12.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, தலைமை கணக்காளர் அலுவலகத்திற்கு நேரடியாக சமர்ப்பிப்பதற்கு வேண்டும். விண்ணப்பங்களை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''2024 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

| உருப்படி இல. | பொருட்கள் / சேவைகள் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|
| G-1 | பொதுவான எழுதுபொருட்கள் (டோனர், கார்ட்ரிட்ஜ்கள், ரோணியோ மை, கணினி அச்சுப்பொறி ரிப்பன்கள், ஓப் கட் காகிதம், மருந்து உறைகள், பென் ட்ரைவ், நிழல்பிரதி இயந்திர டோனர், ரிப்பன்கள் மற்றும் ஏனையவை) | 1,500.00 |
| G-2 | மேசை கணினிகள், மடிக்கணினி, டெப்லெட், பல்லூடக எறியம், அச்சுப்பொறிகள், ஸ்கேனர், UPS, மாநாட்டு உபகரணம், கணினி கூறுகள் மற்றும் End User Peripheral Devices/ துணைப்பொருட்கள் | 1,000.00 |
| G-3 | வலைப்பின்னல் மற்றும் வலைப்பின்னல் சாதனங்கள், ரவுட்டர்கள், சுவிட்சுகள், சர்வர்கள், சேமிப்பகங்கள், பயர்வோல்கள் உள்ளிட்ட தகவல் பாதுகாப்பு தொடர்பான சாதனங்கள், ஊடுருவல் தடுப்பு அமைப்புகள், பயோ மெட்ரிஸ்கள், IP கண்காணிப்பு மற்றும் ஏனைய துணைப்பொருட்கள். | 1,000.00 |
| G-4 | மென்பொருள் மேம்பாடு, இறுதி பயனர் மென்பொருள் (மைக்ரோசொப்ட் இறுதி பயனர் மென்பொருள், கூட்டிணைவு மற்றும் ஏனைய மென்பொருட்கள்), செயற்பாட்டு அமைப்புகள், தரவுகள் மற்றும் தகவல் பாதுகாப்பு தொடர்பான மென்பொருள் (பயர்வோல், வைரஸ் கார்ட், அன்டி-ஸ்பாம், கொன்டென்ட் பில்டரிங் முதலியன) | 1,000.00 |
| G-5 | சுவிட்சுகள், கெமரா, ஸ்டோரேஜ்கள், தொலைக்காட்சி, NVR, வடமிடல் மற்றும் அது தொடர்பான துணைப்பொருட்கள் உட்பட சீ.சீ.டி.வி கெமரா அமைப்பு | 1,000.00 |
| G-6 | வன்பொருள், தொலைநகல் இயந்திரம் மற்றும் துணைப்பொருட்கள், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் துணைப்பொருட்கள், எறியம் மற்றும் துணைப் பொருட்கள், ரோணியோ இயந்திரம் மற்றும் துணைப்பொருட்கள் மற்றும் ஏனைய இலத்திரனியல் துணைப்பொருட்கள் | 1,500.00 |
| G-7 | மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் மற்றும் அதுபோன்ற அலுவலக உபரணங்கள் (உருக்கு, மரப்பலகை மற்றும் பிளாஸ்டிக்) லொக்கர்கள், இரும்பு சேமிப்புகள் | 1,500.00 |
| G-8 | ஊட்டச்சத்து பால் மாவின் வழங்கல் | 1,000.00 |
| G-9 | மெத்தைகள், பாய்கள், தரை விரிப்புகள் மற்றும் கதவு விரிப்புகள் (இறப்பர், நார் மற்றும் ஏனையவை) | 1,000.00 |
| G-10 | உலோகம், மணல், சீமந்து, பலகை, செங்கல், டைல்கள், இரும்பு, கூரைத் தகடு, கம்பிகள் மற்றும் துணைப்பொருட்கள், மின்சார விளக்குகள், விளக்கு பொருத்துவதற்கான பாகங்கள், கழுவும் பாத்திரம், நீர்குழாய்கள், மருத்துவ தளபாடங்களுக்கான பொருத்துதல் உருப்படிகள், அலுவலக உபகரணம் மற்றும் ஏனையவைகள் போன்ற கட்டிட பொருட்கள், வண்ணப்பூச்சு, மெல்லிய தூரிகை, வண்ணப்பூச்சு பயன்பாட்டுப் பொருட்கள், தூரிகைகள் | 1,000.00 |
| G-11 | பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினிய பொருட்கள் | 1,000.00 |
| G-12 | சவர்க்காரம், பாத்திரம் கழுவும் திரவம், சலவைத் தூள், கழிப்பறை சுத்தம் செய்யும் திரவம், மீத்தைலேற்ற சாராயம், தீப்பெட்டிகள், கத்திகள், பெட்டரிகள், கை கழுவும் மற்றும் ஏனைய பொதுவான உருப்படிகள் போன்ற துப்புரவுப் பொருட்கள். துணி சலவை செய்யும் இரசாயனங்கள் (திரவ மற்றும் தூள்) மற்றும் குப்பை பைகள் | 1,000.00 |
| G-13 | வாகனங்களின் துணைப்பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் (டயர், டியுப், பெட்டரி மற்றும் ஏனையவை) உதிரிப்பாகங்கள் | 1,000.00 |
| G-14 | அனைத்து ஆடைகள் மற்றும் திரைச்சீலை பொருட்கள், சீருடை பொருட்கள், ரெக்சின், நீர்புகாதுணி, நுளம்பு வலை, துவாய், படுக்கை விரிப்பு முதலியன. | 1,000.00 |
| G-15 | இறப்பர் முத்திரை, திகதி முத்திரை, பிளாஸ்டிக் பெயர் பலகை மற்றும் திணைக்கள அடையாள அட்டைகள், புகைப்பட சட்டகம், சின்னங்கள் | 1,000.00 |
| G-16 | மருந்து மற்றும் சத்திரசிகிச்சை ஆடை உருப்படிகள், சத்திரசிகிச்சை கருவிகள் | 1,000.00 |
| G-17 | பொதுவான மருத்துவ சத்திரசிகிச்சை நுகர்வுப்பொருட்கள் | 1,000.00 |
| G-18 | பொதுவான சத்திரகிசிச்சை கருவிகள், பொதுவான மருத்துவ உபகரணங்கள் | 1,000.00 |
| G-19 | ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள், ஆய்வுகூட இரசாயனம் மற்றும் கண்ணாடி பொருட்கள் | 1,000.00 |
| G-20 | பாதணிகள், சத்திரசிகிச்சை பாதணிகள், செருப்பு, கையுறை, முகக்கவசம், தொப்பி மற்றும் ஏனையவை | 1,000.00 |
| G-21 | எரிவாயு அடுப்பு, Gas Burner Regulator, Burner Sparing, சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் ஏனைய சமையலறை உபகரணங்கள், ஸ்டீமர், பிளெண்டர், ஹீட்டர், ரைஸ் குக்கர், இண்டஸ்ட்ரியல் பிளெண்டர், சில்வர் வாளிகள், பேசின்கள் | 1,000.00 |
| G-22 | மருத்துவமனை படுக்கைகள், லொக்கர்கள், தள்ளுவண்டிகள், IV Stands, சக்கர நாற்காலி மற்றும் வார்டுகளுக்கான அதனை ஒத்த உபகரணம், தூக்குப்படுக்கை | 1,000.00 |
| G-23 | ஸ்பிலிட் வளிச்சீராக்கி மற்றும் துணைப்பொருட்கள், குளிர்சாதனப்பெட்டி மற்றும் துணைப்பொருட்கள், கூலர் மற்றும் துணைப்பொருட்கள் மற்றும் மைய வளிச்சீராக்கி துணைப்பொருட்கள், உரர்த்தி மற்றும் துணைப்பொருட்கள் | 1,000.00 |
| G-24 | தொலைக்காட்சி, மின் விசிறி, மின் கேத்தல் மற்றும் Torches, முதலிய இலத்திரன் பொருட்கள், ஒலி அமைப்புகள், தூசி உறிஞ்சி, ஒலிவாங்கி, Public transferring systems | 1,000.00 |
| G-25 | உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளுக்கான உணவு வழங்கல் (சிற்றுண்டி, தேநீர், பகலுணவு மற்றும் Deserts முதலியன) பு.ஃ.பே அடிப்படையில் மற்றும் பெட்டிகள் | 1,000.00 |
| **சேவைகள் மற்றும் பழுதுபார்த்தல்கள்** | | |
| S-1 | இரும்பு/ உலோகம்/ மரப்பலகை தளபாடங்களின் பழுதுபார்த்தல், உருக்கியொட்டல், வண்ணப்பூச்சு மற்றும் பளபளப்பூட்டல் மற்றும் மருத்துவமனை உபகரணங்களை செயற்படுத்தல் | 1,000.00 |
| S-2 | வளிச்சீராக்கிகள், குளிர்சாதனப்பெட்டிகள், கூலர்கள், மிக்குளிர் பெட்டகம் மற்றும் சலவை இயந்திரங்கள், உலர்த்திகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 1,000.00 |
| S-3 | கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் End User Peripheral Devices/ துணைப் பொருட்களின் பழுதுபார்த்தல் | 1,000.00 |
| S-4 | வலைப்பின்னல் மற்றும் வலைப்பின்னல் சாதனங்கள், ரவுட்டர்கள், சுவிட்சுகள், சர்வர்கள், சேமிப்பகங்கள், பயர்வோல்கள் உள்ளிட்ட தகவல் பாதுகாப்பு தொடர்பான சாதனங்களின் பழுதுபார்த்தல் | 1,000.00 |
| S-5 | சுவிட்சுகள், கெமரா, ஸ்டோரேஜ்கள், தொலைக்காட்சி, NVR, வடமிடல் மற்றும் அது தொடர்பான துணைப்பொருட்கள் உட்பட சீ.சீ.டி.வி கெமரா அமைப்பின் பழுதுபார்த்தல் | 1,000.00 |
| S-6 | தொலைநகல் இயந்திரம், ரோணியோ இயந்திரங்கள், சேவிங் இயந்திரங்கள், நிழற்பிரதி இயந்திரங்கள் மற்றும் தொலைக்காட்சி | 1,000.00 |
| S-7 | மின்சார மோட்டார்கள், மின்மாற்றிகள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் மின் சாதனங்களை பழுதுபார்த்தல் | 1,000.00 |
| S-8 | பிணவறையின் குளிரூட்டப்பட்ட பெட்டகங்கள் மற்றும் பிணவறை குளிரூட்டிகளின் பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் நன்னிலைப்படுத்தல் | 1,000.00 |
| S-9 | Gas Burners, எரிவாயு அடுப்பு, Rice Steamer, சக்கர நாற்காலி, தூக்குப் படுக்கை மற்றும் ஏனையவற்றின் பழுதுபார்த்தல் | 1,000.00 |
| S-10 | அலுமினியம் பொருத்துதல் | 1,000.00 |
| S-11 | வாகனங்களை நன்னிலைப்படுத்தல் | 1,000.00 |
| S-12 | வாகனங்களை பழுதுபார்த்தல் | 1,000.00 |
| S-13 | அச்சு வேலைகள் | 1,000.00 |
| S-14 | வைத்தியசாலை மருத்துவர்கள் மற்றும் பொது சிற்றுண்டிச்சாலைகளை வாடகை அடிப்படையில் நடத்திச் செல்லல் | 1,000.00 |
| S-15 | உள்ளக மின் விநியோகம் மற்றும் மின் சீரமைப்பு வேலை | 1,000.00 |
| S-16 | வைத்தியசாலை சாக்கடை அமைப்பை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | 1,000.00 |
| S-17 | உரிமை கோராத சடலங்கள், தாய்வழி பிரசவ கழிவுகள், சத்திரசிகிச்சை அறை கழிவுகளை அகற்றல் | 1,000.00 |
| S- 18 | வாடகை அடிப்படையில் இருப்பிடம், வீடுகள், அறைகள் ஆகிய தங்குமிடங்கள் | 1,000.00 |
| S- 19 | தனியார் ஆய்வுகூட சோதனை சேவைகள் | 1,000.00 |
| S- 20 | மேசன் வேலைகள், வண்ணப்பூச்சு வேலைகள், தச்சு வேலைகள், மின் வேலைகள், குழாய் வேலைகள், உருக்கியொட்டல் வேலைகள், மரங்களை வெட்டல் | 1,000.00 |
| **கொள்வனவுகள்** | | |
| P-1 | கண்ணாடி, பிளாஸ்டிக் கொள்கலன்கள், சேலைன் போத்தல்கள், சிரட்டை, எக்ஸ்ரே அட்டைகள், மரம் ஆகிய அகற்றப்பட்ட உருப்படிகளை கொள்வனவு செய்தல் | 1,000.00 |
| **பணிகள்** | | |
| W-1 | போதனா வைத்தியசாலையில் சிவில் பொறியியல் வேலைக்கான நிர்மாணம், புனரமைப்பு, மேம்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள். | 1,500.00 |

### போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு
### வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் - 2024

01. விண்ணப்பதாரரின் பெயர்: ..................................................
02. வர்த்தகப் பெயர் மற்றும் முகவரி: .........................................
.........................................................................
03. வர்த்தகப் பதிவின் திகதி மற்றும் இலக்கம் (வர்த்தகப் பதிவு சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்): .........................................
04. தொ. இலக்கம்: .................. தொலைநகல் இலக்கம்: ...............
கைபேசி இலக்கம்: ........................ வாட்ஸ்அப் இல.: .........
மின்னஞ்சல் முகவரி: ........................
05. பதிவுக்கு கோரப்படும் பொருட்களின் (பொருட்கள்/ சேவை/ கொள்வனவு/ பணி) எண்ணிக்கை:

| பதிவு இல. | | | | காசுக் கட்டளை/ பற்றுச்சீட்டு இல. |
|---|---|---|---|---|
| பொருட்கள் | சேவை | அகற்றப்பட்ட உருப்படி கொள்வனவு | பணிகள் | |
| G- | S- | P- | W- | |

இந்த நிறுவனத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதில் கடன் வசதிகளை நீடிக்கும்போது விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் கட்டுப்பட்டுள்ளேன் என்பதை இங்கு நான் உறுதி செய்கிறேன்.

திகதி: ................... முகாமைத்துவ பணிப்பாளர்: ...................

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1. பொருட்கள் அல்லது சேவைகளின் ஒவ்வொரு உருப்படிக்காகவும் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்தை மட்டக்களப்பு தள வைத்தியசாலை, கணக்கு பிரிவு, நிதி உதவியாளருக்கு ரொக்கப்பணமாக செலுத்தியதன் மூலம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக்கட்டளை ஒன்றை (மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு பெறத்தக்கதாக காசுக்கட்டளை இருத்தல் வேண்டும்) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
2. காசோலைகள் ஏற்கப்படமாட்டாது.
3. மேல் குறிப்பிடப்பட்ட வடிவத்தின்படி விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். 2023.12.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கல்கள் சேவைகளின் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. நிர்ணயிக்கப்பட்ட விபரக்குறிப்புகள், தரங்கள் மற்றும் மாதிரிகளுக்கு இணங்க பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படுதல் வேண்டும்.
5. விண்ணப்பிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் பிரிவின் கீழ் குறித்த நிறுவனங்கள் செல்லுபடியான வர்த்தகப் பதிவு சான்றிதழ், உற்பத்திப் பட்டியல் மற்றும் மருந்துகளுக்கான NMRA சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும் (பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்).
6. நிறுவனமானது ஏக முகவராக பொருட்கள்/ சேவைகளை வழங்குவதாயின் முதன்மையாளரிடம் இருந்து அங்கீகாரக் கடிதத்தை இணைத்தல் வேண்டும்.
7. தொடர்புடைய உருப்படியின் (பொருட்கள்/ சேவைகள்/ பணிகள்) வழங்கலில் நிறுவனமானது குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
8. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட VAT பதிவு அல்லது VAT விலக்குச் சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்.
9. வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு வெளியில் கூறுவிலைகளுக்காக அழைப்பு விடுக்கும் உரிமை நிறுவனத் தலைவர் வசமானதாகும்.
10. கேள்விமனு நடைமுறையின்படி பொருட்கள்/ சேவைகளை வழங்க தவறுகின்ற மற்றும் 03 க்கு மேற்பட்ட தொடர்ச்சியான நேரங்களுக்காக கேள்விமனுவில் பங்கேற்பதற்கு தவறுகின்ற பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் எந்த அறிவித்தலும் இன்றி பதிவுப் பட்டியலில் இருந்து அகற்றப்படுவார்கள்.
11. 065 2222261, 065 2222262 என்ற தொலைபேசி இலக்கங்கள் வழியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, தலைமை கணக்காளரிடம் இருந்து எந்த ஒரு தெளிவினையும் பெற்றுக்கொள்ளலாம்.
12. தாமதிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு.**

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

**கட்டிடங்கள் திணைக்களம்**

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

### பொலன்னறுவவில் அஞ்சல் கட்டிட தொகுதிக்காக புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்

**II** ஆம் கட்டம்

**[Contract No.: BD-31-Z4/20/CT37/2023]**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 37.7 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான ''பொலன்னறுவவில் அஞ்சல் கட்டிட தொகுதிக்காக புதிய கட்டிடத்தை நிர்மாணித்தலுக்காக (II ஆம் கட்டம்)'' தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
நிர்மாணக் காலப்பகுதியானது 147 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் உத்தேசிக்கப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவுள்ளதினால், பிராந்திய முன்னுரிமை மற்றும் *CIDA* தர முன்னுரிமைகள் *04/2016(iv)* மற்றும் *03/2020* ஆகிய இலக்கங்களையுடைய அரச நிதி சுற்றறிக்கைகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் சி-6, சி-5 அல்லது சி-4 ஆகிய தரங்களில் பதிவு பெற்றவராகவும் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். மேலும், பதிவு செய்தலானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் விலைமனுதாரர்கள் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். பதிவு செய்தலின் மூலப்பிரதி சான்றிதழானது (பிசிஏ-03) விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்பட மாட்டாது.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை மட்டக்களப்பு, திராய்மடு, பணிச்சாயடி, 1 ஆம் வலயம், கட்டிடங்கள் திணைக்கள பிரதான பொறியியலாளரிடமிருந்து (4 ஆம் வலயம்) பெற்று எந்தவொரு வேலை நாளிலும் அதே முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு:
தொலைபேசி: 065-2229808. தொலைநகல்: 065-2229807
5. 2023.11.17 ஆம் திகதியிலிருந்து 2023.12.06 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக எட்டாயிரம் ரூபாவை (8000 ரூபா) செலுத்திய பின்னர், மட்டக்களப்பு, திராய்மடு, பணிச்சாயடி, 1 ஆம் வலயம், கட்டிடங்கள் திணைக்கள பிரதான பொறியியலாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுக்கள் 2023.12.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம். 2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', 2 ஆம் மாடி, கட்டிடங்கள் திணைக்களம், ஒப்பந்தக் கிளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட கால எல்லையிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவிருத்தல்.
   - 565,000 ரூபா தொகைக்காகவிருத்தல்.
   - 2024 ஏப்ரல் 3 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் ITB உட்கூறு 16.2 இல் குறித்துரைக்கப்பட்டவாறான முகவராண்மை ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
9. விலைமனுக்களை மூடுவதற்காக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள நேரத்திற்கு ஆகக் குறைந்தது 1 மணித்தியாலத்திற்கு முன்னராக ''செத்சிரிபாய'' இடப்பரப்பில் உட்புகுமாறு விலைமனுதாரர் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**பொறியியலாளர் (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'',**
**பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

# அறிவித்தல்

## கேள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளும் காலத்தை நீடித்தல்

## சிறிய அளவான விவசாய வர்த்தக மற்றும் மீள் மேம்பாட்டுத் திட்டம் (SARP) ஒத்துழைப்பு கமநல அபிவிருத்தித் திணைக்களம்

மேற்படி விடயமாக 2023.10.30 தினமின, டெய்லி நியூஸ், தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுடன் சம்பந்தப்பட்டது.

மேற்படி அறிவித்தலில் குறிப்பிடப்படும் 2023.11.22 பி.ப. 02.00 இற்கு முடிவடைவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் 2023.11.23 மு.ப. 10.00 வரை நீடிப்பதற்கு திணைக்கள பெறுகைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் கேள்விகள் திறத்தல் 2023.11.23ம் திகதி கேள்விப்பத்திரம் கோரும் நேரம் முடிவடைந்தவுடன் இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

இது பற்றி 2023.10.30ம் திகதிய பத்திரிகை அறிவித்தலில் தரப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் இனிமேலும் அவ்வாறே இருக்கும் என்பதைக் கவனியுங்கள்.

**ஆணையாளர் நாயகம்,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 42, சேர் மார்க்கஸ் பெர்னான்டோ மாவத்த,**
**கொழும்பு-07.**

# இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.07.28 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

1. பிரசித்த நொத்தாரிசு சந்தனிமா ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2019.07.26ஆம் திகதிய 1739ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு எச்.எம்.என்.எஸ். உப்புல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2021.09.17ஆம் திகதிய 1284ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று மீது 2023.06.22 வரையான வட்டியும் முதலுமாக 26,167,904.21 ரூபாயும் (இருபத்தாறு மில்லியன் நூற்று அறுபத்தேழாயிரத்துத் தொள்ளாயிரத்து நான்கு ரூபாய் இருபத்தொரு சதம்) அத்துடன் 2023.06.23ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து வீதப்படி (29.25%) 20,000,000.00 ரூபாய் (இருபது மில்லியன் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் தவணைக் கடன் மீது 2023.06.22 வரையான வட்டியும் முதலுமாக 2,253,422.53 ரூபாயும் (இரண்டு மில்லியன் இருநூற்று ஐம்பத்து மூவாயிரத்து நானூற்று இருபத்திரண்டு ரூபாயும் இருபத்திரண்டு ரூபாய் ஐம்பத்து மூன்று சதம்) அத்துடன் 2023.06.23ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு ஏழு வீதப்படி (7.00%) 2,062,500.00 ரூபாய் (இரண்டு மில்லியன் அறுபத்திரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல. 332/A, ஜல்தர, ராணல என்ற முகவரியிலுள்ள அபேறிய பொல ராணல என்ற நிறுவனத்தாரிடமிருந்து (இல. 334C, அவிசாவளை வீதி, ராணல என்ற முகவரியைச் சேர்ந்த திரு. சேனாதீர பத்திரகே போதன சேனாதீர, இல. 332/A, ஜல்தர, ராணல என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஹேனதீர பத்திரகே ஐயது சேனாதீர ஆகியோர் இதன் பங்காளர்களாவர்) வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறித்த 2019.07.26ஆம் திகதிய 1739ஆம் இலக்க ஈட்டுமுறி, 2021.09.17ஆம் திகதிய 1284ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று மீதான 26,167,904.21 ரூபாயையும் (இருபத்தாறு மில்லியன் நூற்று அறுபத்தேழாயிரத்துத் தொள்ளாயிரத்து நான்கு ரூபா இருபத்தொரு சதம்) தவணைக் கடன் மீதான 2,253,422.53 ரூபாயையும் (இரண்டு மில்லியன் இருநூற்று ஐம்பத்துமூவாயிரத்து நானூற்று இருபத்திரண்டு ரூபாய் ஐம்பத்து மூன்று சதம்) அத்துடன் 2023.06.23ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி ஹன்வெல்ல கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

"கீலகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.சி. அத்தநாயக்க தயாரித்த 2010.05.24ஆம் திகதிய 735ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம கோரளை மெத பற்று ஹோமகம பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல. 449 ஜல்தர கிராம செயலகர் பிரதேச பிரிவிலுள்ள ஜல்தர கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் களனி கங்கையையும் கிழக்கில் யு.பி. மாதம்பெருமவின் காணியையும் தெற்கில் லோ லெவல் வீதியையும் மேற்கில் ஏ.பி. ஹூலத்துவவின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 735ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ரூட் இருபத்தாறு தசம் நான்கு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0-ரூ1-பே 26.40) பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் பக்கம் A 1148/03இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**திருமதி. ரி.கே.என். பண்டுவாவல**
**வங்கிமுகாமையாளர்**

**இலங்கை**
**ஹன்வெல்ல கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
BOC தேசத்தின் வங்கியாளர்



# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| AAN-9887 | பஜாஜ் | 2013 | சிலாவ் |
| AAA-9698 | பஜாஜ் | 2012 | ராகம |
| AAF-1352 | பஜாஜ் | 2012 | நுவரேலியா |
| YP-8522 | பஜாஜ் | 2011 | ராகம |
| YS-8427 | பஜாஜ் | 2011 | ராகம |
| YR-4389 | பஜாஜ் | 2011 | பாணடுரா |
| YT-9631 | பஜாஜ் | 2011 | ராகம |
| QV-0286 | பஜாஜ் | 2009 | ராகம |
| QK-7615 | பஜாஜ் | 2007 | பாணடுரா |
| QB-0174 | பஜாஜ் | 2005 | ராகம |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CAD-3683 | ஹோண்டா | 2014 | பாணடுரா |
| HE-2171 | டொயோட்டா | 2000 | குருநாகல் |

| மோட்டார லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LJ-4953 | டாடா | 2012 | மாதரா |
| 43-0711 | ISUZU | 1992 | பாணடுரா |

| மோட்டார சைக்கிள் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| BAF-4279 | பஜாஜ் | 2013 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0778 523 285
பாணடுரா 0775 215 263
குருநாகல் 0764 425 205
சிலாவ் 0770 288 804
மாதரா 0743 601 121
நுவரெலியா 0777 717 562


# வெளிமடை பிரதேச சபை

## 2024 ஆண்டிற்கான வரவு ஆவணம் தொடர்பாக அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் குடிமக்களுக்கும் முன்வைக்கும் அறிவித்தல்

இலக்கம் 2199/25 கொண்ட 2020ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதியினை கொண்ட இலங்கை ஜனநாயக வர்த்தமானிப் பத்திரத்தின் அதிவிஷேட அறிவித்தலுடன் தொடர்புடையது.

இச் சட்டம் 10(2)(ஆ) அத்தியாயத்தின் கீழ் 2024ம் ஆண்டிற்கான வெளிமடை அதிகார எல்லைக்குள் வெளிமடை பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட வரவு - செலவு ஆவணத்தினை மதிப்பீடு செய்வதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கான சந்தர்ப்பம் இதனுடன் அறிவிக்கின்றேன்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**வெளிமடை.**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல் இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இலக்கம்: 86647855, 86647982, 86665553

   சமகி மாவத்தை, வந்துரகல, குருணாகல் என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. ஹேரத் முதியன்சேலாகே சுவர்ண குமாரி ஹேரத் என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

2. இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.04.28 ஆம் திகதி 2330 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.05.10 ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் உரிமம் பெற்ற ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 2023. 12. 12 ஆம் திகதி பி.ப. 1.00மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

1. "கொடகும்புர இப்போது வத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.டபிள்யு. அஷோக ஜயலால் தயாரித்த 2017.08.06ஆம் திகதிய 1193ஆம் இலக்க வரைப்படத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 மற்றும் காணித்துண்டு 2 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வட மேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், வேயுடவில்லி ஹத் பற்று குருணாகல் பிரதேச செயலகர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 182 வந்துருகல கிராம சேவகர் பிரிவிலுள்ள அக்கரகனே என்ற இடத்தில் அமைந்துள்ளது. குறித்த காணித்துண்டு 1 மற்றும் 2 வடக்கில் 03/1660 என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1ஐயும் கிழக்கில் இல. 828 என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1ஐயும் எச். வந்துரகல உரிமைகோரும் நெல் வயலையும் தெற்கில் சுனில் என்பவர் உரிமைகோரும் நெல் வயலையும் எச். வந்துரகல உரிமைகோரும் நெல் வயலையும் மேற்கில் குறித்த வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 12 அடி அகலப் பாதையான காணித்துண்டு 3ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ரூட் பதினான்கு தசம் இரண்டு பேர்ச்சுகள் (ஏ.0, ரூ.01, பே.14.2) பரப்பளவையும் அதன்கன் காணப்படும் மண், மரங்கள், தாவரங்கள், கட்டடங்கள் என அனைத்துடன் 03/1660 என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4இல் உள்ள 12 அடி அகலப் பாதையைப் பயன்படுத்துவதற்கான உரிமையையும் கொண்டுள்ள இக்காணி குருணாகல் காணிப் பதிவகத்தில் பக்கம் G 223/10 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் டெபாசிட் செய்த ரூ. 315,000 /- சேமிப்புக் கணக்கு எண்ணுக்கு 84845746 இன் என்.எஸ். முயுசிக்கல் வாரிய அனுமதியைப் பெற்ற பிறகு விலைகூறுவோர் மேற்கூறப்பட்டுள்ள ஆதனத்துடன் தொடர்புடைய உரிமைத்துவ உறுதிகளையும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஆவணங்களையும் இலங்கை வங்கி (பொதுஹர கிளை) முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடமுடியும். தொடர்புகளுக்கு 037-2237619

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**திருமதி. ஜி.ஏ.வை.ஏ. கனேபொல**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**பொதுஹர**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**கடன் தொடர்பு இலக்கம்: 80896435**

கலாகேத, குளியாப்பிட்டிய வீதி, தம்பதெனியா என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அபேசிங்க அப்புஹாமிலாகே சந்தன செனரத் அபேசிங்க என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் 09.06.2023ஆம் திகதிய 2336 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 12.06.2023 ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 12.12.2023 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

"மல்வான மற்றும் (மரடகொல்ல தோட்டத்தின்) ஒரு பகுதியான சுதுமதுவம்" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.ஏ.பி. ஜயந்த பெரேரா தயாரித்த 1995.07.20ஆம் திகதிய 660ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 30 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று உடுகஹ கோரளை மேற்கு நாரம்மல பிரதேச சபை எல்லைகட்குட்பட்ட நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவின்கீழுள்ள இல. 1037, மரண்டகொல்ல கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தல்கஸ்முனுவ கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் இதே வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 31ஐயும் கிழக்கில் இதே வரைபடத்தில் உள்ள காணித்துண்டு R1ஐயும் (20 அடி அகலமுள்ள பாதைக்கான ஒதுக்கம்) தெற்கில் இதே வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 29ஐயும் மேற்கில் இதே வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 14ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணியானது அதன்கன் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் பதினைந்து பேர்ச்சுகள் (ஏ0- ரூ0- பே15) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு குளியாப்பிட்டிய காணிப் பதிவகத்தில் F1248/259 c/o T 110/75 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இக்காணி, காணித்துண்டு R1 (20 அடி அகலமுள்ள பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பாதை மற்றும் குறித்த 660ஆம் இலக்க வரைபடத்தில் ஏனையோருடன் இணைந்து பொதுவாகப் பயன்படுத்தவென குறிப்பிடப்பட்டுள்ள 182ஆம் இலக்கக் காணித்துண்டு (பிரதேச சபைப் பாதைக்கான ஒதுக்கம்) என்பவற்றின் மீதான வழி உரிமையையும் கொண்டுள்ளது.

ஏலவிலை கூறுவோர் மேற்குறித்த ஆதனத்தின் உரிமைத்துவ உறுதியையும் அதனோடு இணைந்த ஆவணங்களையும் தம்பதெனியா இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளருடன் தொடர்பு கொள்வதன் மூலம் பார்வையிடலாம்.

**தொடர்புகளுக்கு - 037-2266144**

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**இலங்கை வங்கி**
**தம்பதெனியா**

**திரு. K.N.M.D.P. தர்மகீர்த்தி**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

## மாநாகர சபை – பொலன்னறுவ

2024ம் ஆண்டிற்காக பொலன்னறுவ மாநகர சபைக்குத் தேவையான நிர்மாணப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கு விரும்பும் அரச / கூட்டுத்தாபன / அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் / வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / விநியோகிப்பவர்கள் / மற்றும் நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 2023.11.16 முதல் 2023.12.29 வரை அலுவலக நாட்களில் இவ் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும்.

- விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 500 ஆவதுடன் கோரப்படும் ஒவ்வொரு உருப்படி இலக்கம் சகலதும் ஒரே விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும், அத்துடன் ஒரு உருப்படி ரூ. 500 வீதமான தொகை அறவிடப்படும்.
- இதற்கான மேலதிக விபரங்கள் தேவைப்படின்

  தொ.பே. இல: 027-2222275 / 027-2057052 / 075-5579818 ஐ அழையுங்கள்.

  www.mcpolonnaruwa.lk இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்.

  WhatsApp : 0272222275 குறுஞ்செய்தியை அனுப்புங்கள்

**மாநகர ஆணையாளர்,**
**பொலன்னறுவ மாநகர சபை,**
**பொலன்னறுவ.**

# களனிப் பல்கலைக்கழகம் – இலங்கை

## வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் 2023.11.30ம் திகதி வரை என்னால் ஏற்கப்படும்.

**மருத்துவ பீடம்**

சத்திரசிகிச்சை மருத்துவ கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத) /
சிரேஷ்ட விரிவுரையாளர் II/I
அங்கவீன கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத) /
சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**வர்த்தக மற்றும் முகாமைத்துவ கல்விப் பீடம்**

கணக்கியல் கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத) /
சிரேஷ்ட விரிவுரையாளர் II/I
நிதி கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத) /
சிரேஷ்ட விரிவுரையாளர் II/I
சந்தைப்படுத்தல் முகாமைத்துவ கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத) /
சிரேஷ்ட விரிவுரையாளர் II/I
மனித வள முகாமைத்துவ கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத) /
சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**மானிடவியல் பீடம்**

வாஸ்துசாஸ்திர கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத) /
சிரேஷ்ட விரிவுரையாளர் II/I
நவீன மொழி கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத) /
சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் சேர்த்துக் கொள்ளும் தன்மைகள் மற்றும் குறித்த சகல தகவல்களையும் https://www.kln.ac.lk/vacancies மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**சம்பள அளவு**

1. விரிவுரையாளர் (பயிலுநர்)
   ரூ. 54,600 - 10x1335 - 67,590 p.m (U - AC 3 (IV) ) (கிட்டிய திரட்டிய சம்பளம் ரூ. 141,110/-)
2. விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத)
   ரூ. 69,580 - 5x1,630 - 77,730 p.m (U - AC 3 (II) )(கிட்டிய திரட்டிய சம்பளம் ரூ. 187,445/-)
3. சிரேஷ்ட விரிவுரையாளர் - II
   ரூ. 79,360 - 11x1,630 - 97,290 p.m (U - AC 3 (II) ) (கிட்டிய திரட்டிய சம்பளம் ரூ. 227,865/-)
4. சிரேஷ்ட விரிவுரையாளர் - I
   ரூ. 91,310 - 7x2,170 - 106,500 p.m (U - AC 3 (I) ) (கிட்டிய திரட்டிய சம்பளம் ரூ. 260,250/-)

**விண்ணப்பிக்கும் முறை**

இப் பதவிக்காக குறித்த விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதிப் பதிவாளர் / நிறுவனக் கல்வி இடம் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறே இணையதளத்தில் https://www.kln.ac.lk.vacancies பல்கலைக்கழக இணையதளத்திற்கு பிரவேசித்து குறித்த விண்ணப்பம் மற்றும் தகவல்களை பதிவிறக்கம் (Downloads) செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற்றுக் கொள்வதற்கு தேவையாயின் அதற்காக வேண்டுதலுடன் முகவரி எழுதப்பட்ட முத்திரையுடனான 20 x 10 செ.மீ. அளவான உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகளால் ஒவ்வொரு பதவிக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியதுடன், விண்ணப்பங்களை குறித்த சான்றிதழ்களின் பிரதியுடன் 2023.11.30 அல்லது அதற்கு முன்பு பிரதிப் பதிவாளர்/ நிறுவனக் கல்வி, களனிப் பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் மற்றும் கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, திணைக்கள மற்றும் மின்னஞ்சல் முகவரி மூலம் விண்ணப்பங்களை அனுப்பும் போது தலைப்பை (Subject) குறிப்பிடும் நிரலில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களத்தை குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியற்ற, தெளிவற்ற அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| | |
|---|---|
| **மருத்துவ பீடம்** | **- applyme@kln.ac.lk** |
| **வர்த்தக மற்றும் முகாமைத்துவ கல்விப் பீடம்** | **- applycm@kln.ac.lk** |
| **மானிடவியல் பீடம்** | **- applyhu@kln.ac.lk** |

**அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை குறுகிய பட்டியலிடும் முழுமையான உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரியது.**

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**களனி.**
**2023.11.17**

# தேசிய லொத்தர் சபை

# 2024 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவு செய்தல்

2024 ஆம் ஆண்டுக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவை வழங்கலுக்கு தேசிய லொத்தர் சபையுடன் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள், உற்பத்தியாளர்கள், உள்நாட்டு முகவர்கள், வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்கள் மற்றும் வர்த்தக நிறுனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் இங்கு கோரப்படுகின்றன. 2023.11.17 ஆம் திகதி தொடக்கம் 2023.12.07 ஆம் திகதி வரை கடமை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் விண்ணப்பங்கள் தேசிய லொத்தர் சபையின் தலைமை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் அல்லது, அறிவித்தலில் கீழ் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் படிவ மாதிரிக்கு அமைய முறையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

தேசிய லொத்தர் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் இருந்து **(www.nlb.lk)** Tender அறிவித்தல் தலைப்பின் மூலம் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

பொருட்கள் மற்றும் சேவை உருப்படிகளுக்காக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரர்கள் பதிவுக்கு தொடர்புடைய விண்ணப்பங்களை பெறுதல்/ சமர்ப்பிப்பதற்கு வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் தேசிய லொத்தர் சபையின் காசாளருக்கு மீளளிக்கப்படாத 500 ரூபா (வரி உடன்) கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். வங்கி வரைவு, காசோலை அல்லது காசுக் கட்டளை பதிவுக்காக ஏற்கப்படமாட்டாது. எந்த ஒரு வழங்குநரும் பொருள் அல்லது சேவை தலைப்பின் கீழ் உள்ள ஒரு உருப்படிக்கு மேல் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாயின், அதற்காக விண்ணப்பங்களை வெவ்வேறாக அனுப்ப வேண்டும் என்பதோடு, அவ்வாறு அனுப்புகின்ற அனைத்து விண்ணப்பங்களுடனும் மீளளிக்கப்படாத ரூபா 500.00 (வரி உடன்) செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை வெவ்வேறாக விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

வழங்கல் பிரிவு மற்றும் இலக்கம், உப வழங்கல் தலைப்பு மற்றும் இலக்கம் மற்றும் அதன் கீழ் குறிப்பிடப்பட்ட உருப்படியின் இலக்கம் மற்றும் விபரங்கள் விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

## 01) பொருட்கள்/ உருப்படிகளின் வழங்கல்

**A. மோட்டார் வாகனங்கள் தொடர்பானவை**

01. மோட்டார் உதிரிப்பாகங்கள்
02. டயர்கள், டியூப்கள் மற்றும் பெட்டரிகள் (Tyre Changing, wheel balancing, wheel Alignment உட்பட சேவைகளையும் வழங்கல் வேண்டும்).
03. வாகன செவிப்புல மற்றும் கட்புல உபகரணம்
04. ஏனைய வாகனத் துணைப்பொருட்கள் ( உதா. Steering wheel Covers, central locking systems முதலியன)

**B. ஊக்குவிப்பு தொடர்பானவை**

01. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான குடைகள்
02. பீங்கான், களிமண் மற்றும் கண்ணாடி உருப்படிகள் - முத்திரை பெயருடைய/ அல்லாதது
03. கீ டெக் (Key tags) மற்றும் அதனையொத்த உருப்படிகள்
04. முத்திரைப் பெயருடனான பேனாக்கள்
05. மின் மற்றும் இலத்திரன் ஊக்குவிப்பு உருப்படிகள்
06. தோல் மற்றும் தோல் அல்லாத அலுவலக மற்றும் பயணப் பைகள்
07. முத்திரைப் பெயருடன் கெப்/ தொப்பிகள்/ டீ சேர்ட்கள்
08. சூடு/ குளிர் போத்தல்கள் மற்றும் கொள்கலன்கள்
09. திறன்பேசிகள் மற்றும் துணைப்பொருட்கள் (Smart Phones)
10. கோபரேட் பரிசுகள்
11. தங்க ஆபரணம் மற்றும் உருப்படிகள் வழங்கும் நிறுவனம்

**C. விற்பனை உதவி உருப்படிகள்**

01. சுவரணை சட்டகம், விளம்பரப் பலகை உள்ளக மற்றும் வெளிப்புற ஊக்குவிப்பு பொருட்கள்
02. மிதவைகள் மற்றும் காட்சி வாகனங்கள்
03. டிக்கெட் விற்பனை சாவடிகள்/ விற்பனைக் கூடங்கள்
04. குடைகளுடன் கூடிய விற்பனை பலகைகள்
05. லொத்தர்களை தொங்கவிடும் பலகைகள்/ Point of Sale Items
06. பெரிய கூடாரம், மேற்கவிகை மற்றும் சிறு குடில்கள்
07. விற்பனைக் கூடத்தின் சீரமைப்பு மற்றும் ஸ்டிக்கர் ஒட்டுதல்
08. மிதிவண்டிகள் மற்றும் முச்சக்கரவண்டிகள்
09. லொத்தர் விற்பனை பலகைகள்

**D. தகவல் தொழில்நுட்பம் தொடர்பானவை**

01. கணினிகள் மற்றும் கணினி துணைப்பொருட்கள்
02. அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், தொலைநகல் இயந்திரங்கள், நிழற்பிரதி இயந்திரங்கள் மற்றும் அச்சுப்பொறி துணைப்பொருட்கள்
03. வலைப்பின்னல் உபகரணம் மற்றும் துணைப்பொருட்கள்
04. கண்காணிப்பு அமைப்புகள் (Surveillance Systems)
05. மின் உற்பத்தி மற்றும் அது சார்ந்த முகாமைத்துவ உபகரணங்கள்

(01–05: அதிகாரம் பெற்ற பிரதி நிதிகள் மாத்திரம்)

**E. அச்சு தொடர்பானவை**

01. டுப்ளோ, ஓப்செட், பிலெக்சோ மற்றும் ஸ்கீரீன் அச்சு பொருள்
02. டிஜிட்டல் அச்சு பொருள்

**F. கட்டிடம் தொடர்பானவை**

01. அலுவலகம் மற்றும் வீட்டு மரச் சாமான்கள்
02. வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் உபகரணங்கள்

**G. எழுதுபொருள் தொடர்பானவை**

01. டோனர் காட்ரிட்ஜ்கள் மற்றும் அச்சு நுகர்வு உருப்படிகள் (அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் மாத்திரம்)
02. பொதுவான எழுதுபொருள் உருப்படிகள்
03. இறப்பர் முத்திரை, நாள் முத்திரை மற்றும் பெயர் பலகை, Etc
04. பொக்ஸ் போர்ட், அட்டைப்பெட்டி (360, 400 GSM etc.)
05. கணினி காகிதங்கள் (2 Ply, 3Ply, 4Ply etc.)
06. A4, A3 நிழல் பிரதி காகிதங்கள் (80 GSM), டைப்பின் பேப்பர் (60 GSM)

**H. பொதுவானவை**

01. மின் மற்றும் இலத்திரனியல் உருப்படி (உதா. தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப்பெட்டி)
02. ஏனைய வீட்டுப் பொருட்கள் (உதா. படுக்கை துணி, துடைக்கும் துணி (அனைத்து வகையான கார்பட்கள்), வெட்டுக்கருவி மற்றும் சமையல்)
03. குடிநீர் போத்தல்
04. தொலைத்தொடர்பு உருப்படிகள்
05. ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் உபகரணம்/ டிஜிட்டல் வீடியோ மற்றும் வீடியோ திரை போன்ற உருப்படிகள்

## 02) சேவைகள் வழங்கல்

**A. மோட்டார் வாகனம் தொடர்பானவை (தேசிய லொத்தர் சபை தலைமை அலுவலகத்தில் இருந்து 25Km இற்குள் அமைந்துள்ள)**

01. மோட்டார் வாகனங்கள் பழுதுபார்த்தல்
02. மோட்டார் ஒடோ மின் அமைப்புகளின் பழுதுபார்த்தல்
03. மோட்டார் வாகனம் நன்னிலைப்படுத்தல் மற்றும் உள்ளக சுத்தம் செய்தல்
04. மோட்டார் வாகன வளிச்சீராக்கி மற்றும் பழுதுபார்த்தல்
05. இருக்கை உறை மற்றும் குஷன் வேலை
06. மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு பெறல் (பயணிகள் போக்குவரத்து/ பொருட்கள் எடுத்துச் செல்லல்)
07. வாகனத்தில் ஸ்டிக்கர் ஒட்டுதல் மற்றும் வர்த்தக நாமம்
08. Vehicle detailing (உதா. நிறக் கண்ணாடி)

(சேவை வழங்கும் பிரிவின் கீழ் - மோட்டார் வாகனம் சார்ந்த தலைப்பின் கீழ் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற சேவை வழங்குநர்களில் நிறுவன அடிப்படையிலாக சோதனை ஒன்றை மேற்கொள்வதோடு, அதன் அடிப்படையில் சேவை வழங்குநர்கள் பட்டியலிடப்படுவது மேற்கொள்ளப்படும்.)

**B. தகவல் தொழில்நுட்பம் தொடர்பானவை**

01. ஆற்றல், தரவு மற்றும் voice caballing மற்றும் இலத்திரன் பழுதுபார்த்தல்கள்
02. கணினி, நிழல் பிரதி இயந்திரம் மற்றும் அச்சுப்பொறி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள்
03. கணனி நிழல்பிரதி இயந்திர அச்சுப்பொறி குத்தகைக்கு வழங்குதல்.
04. தொடர்பாடல் அமைப்புகள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்

**C. கட்டிடம் மற்றும் வளவு தொடர்பானவை**

01. மின்பிறப்பாக்கி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள்
02. வளிச் சீராக்கி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள்
03. வளிச்சீராக்கி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல் (மன்னார், வவுனியா மற்றும் அநுராதபுரம் மாவட்ட எல்லைக்குள் வழங்குநர்கள் மாத்திரம்)
04. சிறிய சிவில் நிர்மாணம் மற்றும் புனரமைப்புகள்
05. சிறிய சிவில் நிர்மாணம் மற்றும் புனரமைப்புகள் (மன்னார், வவுனியா மற்றும் அநுராதபுரம் மாவட்ட எல்லைக்குள் வழங்குநர்கள் மாத்திரம்)
06. சிறிய பொறிமுறை, மின், குழாய் பொருத்தல் (MEP) பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
07. உள்ளக மற்றும் வெளி அலங்காரங்கள் மற்றும் பிரித்தொதுக்கல் (Partitioning)
08. அலுமினியம், பீ.வி.சி., இரும்பு மற்றும் உருக்கு, பைபர் மற்றும் மரப்பலகை புனைவு
09. தீயணைப்புச் சேவைகள்
10. வளவு சுத்தம் செய்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
11. பூச்சிக் கட்டுப்பாட்டு சேவைகள்
12. துப்புரவேற்பாடு (ஜெனிடோரியல்) சேவை
13. தோட்ட அலங்காரம் மற்றும் பராமரிப்பு சேவை
14. காகிதம் மற்றும் கழிவுப் பொருள் மீள் சுழற்சி சேவை.
15. சூரிய பனல் நிறுவுதல்
16. CCTV கெமரா வழங்கல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்தல்.

**D. வரைகலை மற்றும் கட்புல செவிப்புல தொடர்பானவை**

01. தகவல்/ நிகழ்ச்சி தயாரிப்பு (உதா. ஆவணப்படம்)

**E. தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தளம் தொடர்பானவை**

01. தகவல் தொழில்நுட்பம் மற்றும் e-Platform நிலைப்படுத்தல் மற்றும் பராமரிப்பு

**F. பொதுவானவை**

01. ஆய்வு மற்றும் முகாமைத்துவ ஆலோசனை சேவைகள்
02. விரைதூதர் சேவைகள்
03. உணவு வழங்கல் சேவைகள்/ சிற்றுண்டிச்சாலையை நடத்திச் செல்லல்/ கேட்டரிங் சேவை
04. நிகழ்ச்சி முகாமைத்துவம் (விழா அலங்காரங்கள்)
05. வளாக அலங்காரம் (உதா. மின் விளக்கு மற்றும் ஒளியூட்டல்)
06. திறந்தவெளி கண்காட்சி சேவை (வெளி மாகாணங்கள் - கொழும்பு மாவட்டம் தவிர்த்து)
07. புகைப்படம் எடுத்தல் மற்றும் அச்சு, புகைப்பட சட்டகம் போன்ற சேவைகள்
08. இரும்பு/ உருக்கு/ அலுமினியம் சார்ந்த உருக்கியொட்டல் மற்றும் தயாரித்தல் சேவை
09. ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் உபகரணங்கள்/ டிஜிட்டல் மற்றும் வீடியோ திரை வழங்கல் போன்ற சேவைகள்

பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் 2023 டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "பொது முகாமையாளர், தேசிய லொத்தர் சபை, இல. 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தேசிய லொத்தர் சபைக்கு 2024 ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்"** என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். 2023 டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி பி.ப. 2.30 க்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு தபாலில் காணாமல்போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் பொறுப்பேற்கமாட்டாது.

**வழங்குநர்களை பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

1. வர்த்தக நிறுவனத்தை பதிவு செய்யும் சான்றிதழின் நிழல் பிரதி ஒன்றுடன் உறுதி செய்து விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. வழங்கப்படும் பொருட்கள்/ சேவைகளுக்கு 14 நாட்கள் கடன் எல்லைக் காலம் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.
3. விலைமனுக்கள் கோரப்படும்போது பதில் அனுப்புவதற்கு தவறுகின்ற அல்லது தரம் குறைந்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வழங்குநர்களை, எந்த ஓர் அறிவித்தலும் இன்றி வழங்குநர் பதிவு ஆவணத்தில் இருந்து நீக்கும் உரிமை தேசிய லொத்தர் சபை வசமானது.
4. பொருட்கள் மற்றும் சேவையை வாங்குவதற்காக பதிவு செய்த வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றபோதும், அரச பெறுகை முறைக்கு அமைய மற்றைய தரப்புகளிடம் இருந்தும் விலைமனுக்களை கோரும் உரிமை தேசிய லொத்தர் சபை வசமானது.
5. கிடைக்கின்ற விண்ணப்பங்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் முழு உரிமை தேசிய லொத்தர் சபை வசமானது.

**பொது முகாமையாளர்**
**தேசிய லொத்தர் சபை**
**தேசமான்ய N.C.J. முதலிகே மாவத்தை**
**தொ.பே இல.: 011-4607000**

**மாதிரி விண்ணப்பப் படிவம்**
**தேசிய லொத்தர் சபை**
**2024 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்**

1. வர்த்தக நிறுவனம்/ அமைப்பின் பெயர் :-.........................................
2. வர்த்தகத்தின் உரிமையாளர்/ பணிப்பாளர்கள்/ கூட்டிணைவாளர்களின் பெயர் :-........................................
   (எழுத்துமூல சான்றிதழ் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)
3. வர்த்தக முகவரி :-.................
4. தொலைபேசி இலக்கம் :-நிலையானது.................
   :-கைபேசி.................
   தொலைநகல் .................
5. மின்னஞ்சல் முகவரி :-.................
6. வர்த்தகப் பதிவு இலக்கம்
   (வர்த்தக பதிவு சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை இணைத்திருத்தல் வேண்டும்) :-............
7. வர்த்தக பதிவு சான்றிதழின் திகதி :-.................
8. பெறுமதி சேர் வரி (VAT) பதிவு இலக்கம்
   (பதிவு செய்யப்பட்டிருந்தால் பிரதியை இணைத்தல் வேண்டும்) :-
   .................
9. வழங்கல் பிரிவு மற்றும் இலக்கம் (√ அடையாளத்தை இடவும்)
   01. பொருட்கள்/ உருப்படி வழங்கல் ☐
   02. சேவை வழங்கல் ☐
   உப வழங்கல் தலைப்பு மற்றும் இலக்கம் :-.................
   உருப்படி இலக்கம் மற்றும் விபரம் (பொருட்கள் மற்றும் சேவைக்காக விண்ணப்பித்தல்)
10. நீங்கள் முன்னர் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்ட திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை பலதின் பெயர் மற்றும் கொடுக்கல் வாங்கல் பண்பை குறிப்பிடவும். (வன் பிரதியை சமர்ப்பிப்பது கட்டாயமானதல்ல)

| திணைக்களம்/கூட்டுத்தாபனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் பண்பு |
|---|---|
| A). ..................................... | ..................................... |
| b). ..................................... | ..................................... |
| C). ..................................... | ..................................... |
| D) ..................................... | ..................................... |
| E) ..................................... | ..................................... |

11. கடந்த காலங்களுக்காக நிகர மொத்த புரள்வு :-.................
12. குறித்த பொருள்/ சேவையை வழங்குவதற்கு 14 நாட்கள் கடன் எல்லைக் காலம் ஒன்றை பெற்றுத்தருவதற்கு இணங்குகிறேன்.

......................................  ......................................
திகதி  வழங்குநரின் கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை

---

# பெருந்தோட்ட அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்

**இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கெலேபொக்க, ஓபல்ல, அலகொல்ல, கொட்டகங்க ஆகிய அரச பெருந்தோட்டங்களில் வள முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள 503 மரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன**

மேற்படி மரங்களுக்காக விலைமனுக்களை நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் அடங்கிய கேள்வி ஆவணங்களை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கொழும்பு தலைமையகத்தில் அல்லது கல்பிஹில்ல பிரதேச அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம். அக்கேள்வி ஆவணங்களை ரூ.2,000/- தொகையைச் செலுத்தி 2023.11.16 முதல் 2023.11.30 பி.ப.1.30 இற்கு முன்பு காசு செலுத்தி இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகம் அல்லது 2023.11.17 முதல் 2023.11.29 பி.ப.3.30 வரை கல்பிஹில்ல பிரதேச அலுவலகத்தில் கொள்வனவு செய்ய முடிவதுடன் அக்கேள்வி ஆவணங்களில் 2023.11.30 பி.ப.1.30 இற்கு முன்பு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

அவ் விலைமனுக்கள் அன்றே பி.ப.1.30 இற்கு தலைமையகத்தில் திறக்கப்படும்.

**விசாரணைகள் : 0114-194879**

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல.257, சிரிதம்ம மாவத்தை,**
**கொழும்பு - 10**
**திகதி - 2023.11.15**

---

# யட்டிநுவர பிரதேச சபை

## 2024 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்

2024 ஆம் ஆண்டுக்காக இந்த சபைக்கு கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத தகுதியுடைய வழங்குநர்கள்/ கொள்வனவாளர்களை பதிவு செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், நபர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகளுக்காக வெவ்வேறாக பதிவு செய்வதற்கு ஒரு உருப்படிக்காக மீளளிக்கப்படும் ரூபா 1,000.00 கட்டணம் ஒன்று அறவிடப்படும்.

A4 அளவான காகிதத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட வடிவத்திற்கு அமைய சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும் என்பதோடு, விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2023.12.30 ஆம் திகதி ஆகும். உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மூலம் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் வர்த்தகப் பெயர்ப் பதிவு சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி மற்றும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை இணைத்திருப்பது அவசியம் என்பதோடு, இந்த சேவை 2024 ஆம் ஆண்டுக்காக மாத்திரம் செல்லுபடியாகும்.

பதிவுக் கட்டணம் செலுத்தல் யட்டிநுவர பிரதேச சபை சிறாப்பருக்கு பணமாகச் செலுத்தி பற்றுச்சீட்டின் மூலப் பிரதி அல்லது காசோலை மூலம் பதிவுக் கட்டணத்தை செலுத்துவதாயின் "செயலாளர் யட்டிநுவர பிரதேச சபை" என்ற பெயருக்கு காசோலையை எழுதி சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, காசுக் கட்டளை மூலம் பதிவுக் கட்டணத்தை செலுத்துவதாயின் "செயலாளர் யட்டிநுவர பிரதேச சபை" என்ற பெயருக்கு செலுத்தப்பட்ட காசுக் கட்டளையின் மூலப் பிரதியுடன் விண்ணப்பங்களை 2023.12.30 ஆம் திகதி மு.ப. 10.30க்கு முன்னர் பதிவுத் தபாலில் "செயலாளர், யட்டிநுவர பிரதேச சபை, எபில்மிகம, பிலிமத்தலாவை" அல்லது கைகளால் கொண்டுவந்து ஒப்படைக்க முடியும்.

| வரிசை இலக்கம் | வழங்கல்கள் |
|---|---|
| 1 | அலுவலக எழுதுபொருட்கள் |
| 2 | அலுவலக மரச் சாமான் உபகரணங்கள், உருக்கு மற்றும் தளபாடங்கள் |
| 3 | உணவு மற்றும் பானங்கள் |
| 4 | கொசு மருந்து மற்றும் பூச்சிக் கொல்லி பொருட்கள் வழங்கல் |
| 5 | கெனப்பி, ஹட் மற்றும் கூடார துணி வழங்கல் |
| 6 | சுகாதார உபகரணங்கள் |
| 7 | டயர் மற்றும் டியூப், பெட்டரி, ரிம் டேப் (வாகனங்களுக்காக) |
| 8 | வாகனங்களுக்காக உதிரிப்பாகங்கள் |
| 9 | தொழில்களுக்குத் தேவையான (சீமெந்து, மணல், கல், மண், ஹியும் குழாய், மரப்பலகை வழங்கல், மற்றும் முன் கலவைகள்) |
| 10 | வண்ணப்பூச்சு வகைகள் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் |
| 11 | சீருடைகளுக்குத் தேவையான துணி வகைகள், மழையங்கி, பாதுகாப்பு காலணி |
| 12 | கணினி இயந்திரம், நிழல் பிரதி இயந்திரம், அச்சு இயந்திரம் மற்றும் அது சார்ந்த கருவிகள் |
| 13 | நிழல்பிரதி இயந்திரம், அச்சு இயந்திரத்திற்காக வண்ணப்பூச்சு மற்றும் டோனர் காட்ரிஜ் மற்றும் ரிப்பன் வழங்கல். |
| 14 | வீதி விளக்கு மற்றும் மின் உபகரணங்கள் |
| 15 | வீதி அபிவிருத்தி மற்றும் வேறு அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்கல். |
| 16 | கொங்கிறீட் உற்பத்திகள் |
| 17 | உராய்வு நீக்கி எண்ணெய் வகைகள் |
| 18 | நூலக புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் |
| 19 | அச்சு எழுது பொருட்கள், இறப்பர் சீல் வகைகள், பெயர் பலகை, மற்றும் விளம்பரப் பலகை |
| 20 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், இசைப் பொருட்கள் மற்றும் ஒலிபெருக்கி இயந்திரம் வழங்கல் |
| 21 | தீ அணைப்பு உபகரணங்கள் வழங்கல் மற்றும் இற்றைப்படுத்தல் |
| 22 | நீர் சுத்திகரிப்பு மற்றும் குடிநீர் போத்தல் வழங்கல் |
| 23 | டிஜிட்டல் கெமரா, சீசீடீவி கெமரா கட்டமைப்பை வழங்கல் மற்றும் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் |
| 24 | நீர் மீற்றர், நீர் மோட்டார் மற்றும் அது சார்ந்த உபகரணங்களை வழங்கல் |
| **வரிசை இலக்கம்** | **வழங்கல்கள்** |
| 1 | வளிச் சீராக்கி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்/ நிழல் பிரதி இயந்திர பழுதுபார்த்தல் மற்றும் நன்னிலைப்படுத்தல் |
| 2 | கணினி இயந்திரம்/ அச்சு இயந்திரம் பழுதுபார்த்தல் மற்றும் நன்னிலைப்படுத்தல்/ கணினி வலைப்பின்னல் மேற்கொள்ளல் |
| 3 | டயர் மீள் நிரப்பல்/ டெக் செய்தல் மற்றும் பழைய டயர் விலைக்கு வாங்கல்/ வாகனம் குஷன் செய்தல் |
| 4 | வாகனங்களில் மின்சுற்று மற்றும் மோட்டார் பழுதுபார்த்தல் |
| 5 | அனைத்து வாகனங்களையும் பழுதுபார்த்தல் மற்றும் நன்னிலைப்படுத்தல் (யட்டிநுவர அதிகார எல்லைக்குள்) |
| 6 | கடைசல் இயந்திர வேலைகள் மற்றும் அது சார்ந்த சேவைகள் (யட்டிநுவர அதிகார எல்லைக்குள்) |
| 7 | தோட்டம், சுற்றுவட்டப் பாதையின் இரு பக்கங்களையும் அலங்கரிக்கும் சேவைகள் |
| 8 | நெஸ்கபே இயந்திரம் பழுதுபார்த்தல் மற்றும் நன்னிலைப்படுத்தல் |
| 9 | மரம் மற்றும் கிளைகளை வெட்டி அகற்றல் |
| 10 | மேடை அலங்காரம் மற்றும் அலங்கார சேவைகள் |
| **வரிசை இலக்கம்** | **கொள்வனவாளர்களை பதிவு செய்தல்** |
| 1 | அகற்றப்பட்ட அட்டைப்பெட்டிகள் |
| 2 | அகற்றப்பட்ட மரச் சாமான் உபகரணங்கள்/ கணினி, அச்சு இயந்திரம் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் |

**2024 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்/ ஒப்பந்ததாரர்/ கொள்வனவாளர் ஒருவராக பதிவு செய்வதற்கு விண்ணப்பப் படிவம்**

1. வழங்குநரின்/ உற்பத்தியாளரின்/ கொள்வனவாளரின் பெயர் மற்றும் முகவரி:
2. வர்த்தகப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:
   வர்த்தகப் பதிவு சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதியை இணைக்கவும்.
3. தொலைபேசி இலக்கம்:
4. தொலைநகல் இலக்கம்:
5. மின்னஞ்சல் முகவரி:
6. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வழங்கல்/ சேவைகளின் இலக்கம் மற்றும் பெயர்:
7. பெறுமதி சேர் வரி பதிவு (VAT) இலக்கம்:
8. பதிவுக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம்/ காசோலை இலக்கம் மற்றும் திகதி:
   பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**திகதி:** **விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை:**

**ஆர்.எஸ்.எஸ். குமார,**
**செயலாளர்,**
**யட்டிநுவர பிரதேச சபை**

The Housewives' companion
Classifieds on
Daily News

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்பு பணிமனை)

### வெளிநாட்டு வழங்குநர்கள் மற்றும் அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களை பதிவு செய்தல் - 2024/2025

2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன சுத்திகரிப்பு பணிமனைக்கு பண்டங்களை வழங்குவதற்காக தம்மை பதிவு செய்ய விரும்பும் வெளிநாட்டு வழங்குநர்கள் மற்றும் அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏற்கனவே எம்முடன் பதிவு பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பண்டங்களின் பட்டியலுடனான பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் 2023 டிசம்பர் 15 ஆம் திகதி வரையும் இலவசமாக www.ceypetco.gov.lk என்ற இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்படலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டவருக்கு cpcref.materials2@gmail.com என்ற மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படல் வேண்டும். 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பிந்தாமல் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட மென் பிரதியானது (Ms Word converted to PDF) மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படுவது விரும்பத்தக்கது. (இந்த மின்னஞ்சல் முகவரியானது வழங்குநர் பதிவு செய்தல் நோக்கத்திற்காக மாத்திரமே பாவிக்கப்படல் வேண்டுமென்பதுடன் வேறேதாவது தொடர்பாடலுக்கு பாவிக்கப்படல் ஆகாது)

ஒன்லைன் விண்ணப்பத்திற்காக, மேலேயுள்ள இணையதளத்தின் 'REGISTRATION OF FOREIGN SUPPLIERS AND THEIR LOCAL ACCREDITED AGENTS – 2024/2025' என்பதனை தயவு செய்து பார்வையிடவும்.

எண்ணெய் தொழில்துறைக்கு தேவைப்படும் அம்சங்களின் பட்டியலானது இரசாயனங்கள், பொறிமுறை பொறியியல் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், மின்னியல் மற்றும் கருவி உபகரணம் மற்றும் துணைப்பாகங்கள், தீயணைப்பு உபகரணம் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியன.

அவர்களின் முதன்மையாளர்களின் சார்பாக விண்ணப்பிக்கும் உள்ளூர் முகவர்கள் முதன்மை கம்பனியின் சார்பாக செயற்படுவதற்காக சட்டபூர்வமான அதிகாரக் கடிதத்தை அவர்களின் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் வழங்கல் வேண்டும் (மூலப்பிரதி அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி).

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**

**தொலைநகல் இல. : 0094-11-5528919/2400434**
**தொலைபேசி : 0094-11-5666991/5668560**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## நாவலப்பிட்டி நகர சபை

### வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் – 2024

2024.01.01 முதல் 2024.12.31 வரையான கால எல்லைக்குள் நாவலப்பிட்டி நகர சபைக்கு கீழ்க்காணும் உருப்படிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவுசெய்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் உற்பத்தியாளர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பதிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் மீளளிக்கப்படாத கீழ்க்காணும் கட்டணங்களை காசாக அல்லது செயலாளர், நாவலப்பிட்டி நகர சபை பெயரில் எழுதப்பட்ட காசுக்கட்டளை அல்லது காசோலை மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். (விண்ணப்பங்களை வார நாட்களில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)

03. விண்ணப்பங்கள் 2023.12.31ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அத்துடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024 என்று குறிப்பிடுதல் வேண்டும்.

| **04. பொருட்கள் வழங்குதல்** | **பதிவு செய்தற் கட்டணம்** |
|---|---|
| i. காகிதாதிகள் அச்சுப்படிவங்கள் மற்றும் ஆவணங்கள் போன்றன | ரூ.1000.00 |
| ii. அலுவலக உபகரணம், மரப்பொருட்கள், உருக்கு தளபாடங்கள் மற்றும் கெபினட், கபட் | ரூ.1000.00 |
| iii. வீதி ஒளியூட்டும் உபகரணங்கள் மற்றும் சகல வகையான மின் உபகரணங்கள் | ரூ.1500.00 |
| iv. மை வகைகள் மற்றும் சார்ந்த சகல ஹாட்வெயார் வகைகள் | ரூ.1500.00 |
| v. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | ரூ.1000.00 |
| vi. டயர் மற்றும் டியூப் | ரூ.1000.00 |
| vii. மணல், செங்கல், மெட்டல் | ரூ.1000.00 |
| viii. கணனி துணைப்பாகங்கள் | ரூ.1000.00 |
| ix. சகல துப்புரவேற்பாட்டு உபகரணங்கள்/பொருட்கள்/இரசாயன பொருட்கள் | ரூ.1000.00 |
| x. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | ரூ.1000.00 |
| xi. சீருடைக்கான துணி மற்றும் பாதணி | ரூ.1000.00 |
| **05. சேவைகள் வழங்குதல்** | |
| i. மின் உபகரணங்கள் மற்றும் கணனி பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் | ரூ.1000.00 |
| ii. வாகன பழுதுபார்த்தல்/சேர்விஸ் செய்தல் | ரூ.1000.00 |
| iii. வேறு ஒப்பந்த வேலைகள் | ரூ.1000.00 |
| iv. அச்சு விடயங்கள் | ரூ.1000.00 |
| v. விளையாட்டு உபகரணங்கள் பழுது பார்த்தல்/சேர்விஸ் செய்தல் | ரூ.1000.00 |
| **06. ஒப்பந்தங்கள்** | |
| நகர சபை ஊடாக செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் | ரூ.1000.00 |

**பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

01. பதிவுசெய்த வழங்குநர்களிடமிருந்து சாதாரணமாக விலைமனுக்கள் கோரப்படுவதுடன், அவசியம் என கருதுகின்ற வேளையில் வேறு வழங்குநர்களிடமிருந்து பொருட்கள் எடுக்கும் உரிமை நகர சபைக்கு உரியது. (பொருட்களை நிறுவனத்திற்கு வழங்குதல் வேண்டும்.)

02. கோரும்போது நேரத்திற்கு பொருட்களை வழங்காதோர், சமர்ப்பிக்கப்படும் சாம்பில்களின் அடிப்படையில் பொருட்களை விநியோகிக்காதோர், தரமின்றி பொருட்களை வழங்குவோர் போன்ற வழங்குநர்களின் பதிவு அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

**டி.எப்.டி.பீ.பீ. திஸாநாயக்க**
**செயலாளர்,**
**நாவலப்பிட்டி நகரசபை**
**நாவலப்பிட்டி**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
### வேலைகளின் பெறுகை
### தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB)

கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, செயலாளரின் சார்பில் அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை - 01**

| விலை மனு இல. | பெறுகைத் தலைப்பு | VAT தவிர்த்து நிர்மாணத் திற்கான மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை தொகை (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | தகுதியான CIDA பதிவுத் தரம் | விலைமனு பிணை செல்லுபடி |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அலவ்வவில் முன்மொழியப்பட்ட வாராந்த சந்தை கட்டம் II | 38,600,000.00 | 10,500.00 | 386,000.00 | 180 | C4, C5, C6 கட்டிடம் | 2024 மார்ச் 29 வரை |
| 2. | முல்லைத்தீவு பஸ் நிலையத்தை பூர்த்தி செய்தல் - கட்டம் II | 89,000,000.00 | 19,500.00 | 890,000.00 | 365 | C3 மற்றும் C4 கட்டிடம் | 2024 மார்ச் 29 வரை |
| 3. | ஹொரன சந்தையில் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் கட்டம் IV எஞ்சிய வேலை | 10,000,000.00 | 3,500.00 | 100,000.00 | 120 | C6, C7, C8 கட்டிடம் | 2024 மார்ச் 15 வரை |
| 4. | மினுவன்கொடை பொதுச் சந்தை - கட்டம் III | 21,000,000.00 | 5,600.00 | 210,000.00 | 180 | C5, C6, C7 கட்டிடம் | 2024 மார்ச் 29 வரை |
| 5. | வரக்காபொலை பஸ் நிலையம் - கட்டம் II | 48,000,000.00 | 12,500.00 | 480,000.00 | 180 | C4, C5, C6 கட்டிடம் | 2024 மார்ச் 29 வரை |
| 6. | நிந்தவூரில் கடற்கரை பூங்காவின் நிர்மாணம் - கட்டம் I | 26,000,000.00 | 7,000.00 | 260,000.00 | 120 | C4, C5, C6 கட்டிடம் | 2024 மார்ச் 29 வரை |

இந்த பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கான ஒவ்வொரு வேலையில் மதிப்பிடப்பட்ட பெறுமதி (VAT மற்றும் ஏனைய வரிகள் தவிர்த்து) 50 மில். ரூபாவுக்கு குறைவாக இருப்பதால், தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். அட்டவணை - 01இல் உள்ள 2ஆம் இலக்க விலைமனு தவிர்த்து 1 தொடக்கம் 6 வரையான விலைமனு இலக்கங்களுக்காக 04/2016 (iv) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.

ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் II, 13ஆவது மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, பணிப்பாளர் (நகர அபிவிருத்தி) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு வேலை நாட்களில் பணிப்பாளரின் (நகர அபிவிருத்தி) அலுவலகத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். தொலைபேசி இல.: 0112869535/0114329822.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதிப் பிரிவில் சிறாப்பருக்கு மேலுள்ள அட்டவணை 01இல் உள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி வேலை நாட்களில் 2023 நவம்பர் 17 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 30 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் II, 12 ஆவது மாடி, பிரிவு A, வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, தலைமை கணக்காளருக்கு (நகர அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து எந்த ஒரு எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களினால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

விலைமனுவானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையின் பெறுமதி அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டிருப்பதோடு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, செயலாளரின் பெயருக்கு இருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை 2023 டிசம்பர் 01 ஆம் தகிதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் II, 12 ஆவது மாடி, பிரிவு A, வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, செயலாளருக்கு அசல் மற்றும் நகலுடன் கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பித் தரப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின் அவை உடன் திறக்கப்படும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் II, 13 ஆவது மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, கேட்போர்கூடத்தில் 2023 நவம்பர் 23 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும். இந்த சந்திப்பில் பங்கேற்கும்படி அனைத்து விலைமனுதாரர்களுக்கும் உறுதியாக அறிவுறுத்தப்படுகிறது.

விலைமனுதாரர்களின் தேர்வில் விலைமனுதாரர்களின் முந்தைய செயல்திறன் மற்றும் திரவ நிலை (அமைச்சு மற்றும் ஏனைய அரச அமைப்புகள்) கண்டிப்பாக மதிப்பிடப்படும். மோசமான செயல்திறனை உடைய விலைமனுதாரர்கள் எந்த ஒரு விலைமனுவை வழங்குவதற்காகவும் கருத்தில்கொள்ளப்படமாட்டாது.

எந்த ஒரு விமைனுவையும் தயாரிப்பது தொடர்பிலான செலவுகளுக்கு அமைச்சு எந்த பொறுப்பும் ஏற்காது. கிடைக்கப்பெற்ற விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவை ஏற்பது அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை அமைச்சு பெறுகைக் குழு (MPC) வசமானது. அமைச்சு பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**
**12ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை.**

Daily News Classifieds, the Housewives' companion

